# ஜாதியை ஒழிக்க வழி

**டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்** M.A., Ph.D., D.Sc.,
பாரிஸ்டர்-அட்-லா அவர்கள்

**திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**
பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி.சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை / 600 007.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | ஜாதியை ஒழிக்க வழி |
| ஆசிரியர் | : | டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் |
| பிரிவு | : | ஜாதி - தீண்டாமை |
| பதிப்பு | : | முதல் பதிப்பு - 1936<br>24ஆம் பதிப்பு - 2024 |
| நூல் அளவு | : | டெம்மி (140 mm x 220 mm) |
| அச்சு எழுத்து அளவு | : | 12 points |
| பக்கங்கள் | : | 88 |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| நன்கொடை<br>(குறைந்த அளவு) | : | ரூ.80/- |
| வெளியீடு மற்றும்<br>உரிமை | : | **திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**<br>சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சுக் கோப்பு | : | பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம்,<br>சென்னை - 600 007. |
| அச்சிட்டோர் | : | ‘விடுதலை’ ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம்<br>● பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,<br>வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163<br>● பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-4200987<br>www.dravidianbookhouse.com |

# முதற்பதிப்பின் முன்னுரை

லாகூரிலுள்ள சாட் - பட் - தோடக் மண்டலத்தார் (ஜாதி ஒழிப்புச் சங்கத்தார்), லாகூரில் நடைபெறும் மேற்படி மண்டலத்தின் வருடாந்திர விழாவிற்குத் தலைமை வகிக்கும்படி தோழர் அம்பேத்கரைக் கேட்டுக் கொண்டனர். தோழர் அம்பேத்கரும் தலைமை வகிப்பதாக ஒப்புக் கொண்டார். பின்னர் தோழர் அம்பேத்கர் அவர்கள் எழுதிய தலைமைப் பிரசங்கத்தில் மதத்தைப் பற்றியும்,ஜாதியொழிப்பைப் பற்றியும் கூறியிருக்கும் அபிப்பிராயங்கள் சில மேற்படி மண்டலத்தாருக்குத் திருப்தி அளிக்காததால், அவைகளில் சிறிது பாகத்தை மாற்ற வேண்டியது அவசியமென்றும், அவ்விதம் மாற்றாவிட்டால் மேற்படி மாநாடு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்படுமென்றும், மேற்படி மண்டலத்தார் அம்பேத்கருக்கு அறிவித்தார்கள்.

தோழர் அம்பேத்கர் அவர்கள் - ஜாதி ஒழிப்புச் சங்கத்தில், ஜாதியை ஒழிக்கும் முறைகளைப் பற்றிக் கூறுவதும், ஜாதிக்கு ஆதாரங்களாக உள்ளவைகளைப் பற்றிக் கூறுவதும் இன்றியமையாததென்றும், மேற்படி மாநாட்டுக்குத் தலைமை வகிப்பதற்காகத் தம் அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள முடியாதென்றும் தெரிவித்து விட்டார்கள். அதன் பயனாய் அம்மாநாடு நடைபெறாது நின்றுவிட்டது. அதன்பின்னர் தோழர் அம்பேத்கர் அவர்களை அந்தப் பிரசங்கத்தைப் புத்தக ரூபமாக அச்சடித்துப் பிரசுரிக்குமாறு பலர் வேண்டிக்கொண்டனர். அதனை அனுசரித்து, தமது தலைமைப் பிரசங்கம் பலருக்கும் பயன்படுமாறு புத்தகமாக வெளியிட்டுள்ளார். இந்துக்களிடையே ஒற்றுமையும் நல்லுணர்வும் ஏற்பட்டு முன்னேற்றமடைவதற்குத் தடைக் கற்களாயிருப்பவைகளில் முக்கியமானது ஜாதியாகும். எனவே, அத்தகைய ஜாதியொழிப்பிற்குரிய மார்க்கங்களையும், அதனால் விளையும் கெடுதியையும், உயர் ஜாதிக்காரர்கள் என்பவர்கள்

தாழ்ந்த ஜாதியார் என்பவர்களுக்குச் செய்து வரும் கொடுமைகளையும் தக்க ஆதாரங்களுடன் விரிவாகவும், விளக்கமாகவும், தைரியமாகவும் இப்பிரசங்கத்தில் எடுத்துரைத்த தோழர் அம்பேத்கருக்குத் தமிழுலகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

இப்புத்தகம் ஆங்கிலத்திலிருப்பதால் பெரும்பாலாருக்குப் பயன்படாதென்று கருதி, எல்லோருக்கும் பயன்படுமாறு தமிழில் மொழிபெயர்த்து இதனை வெளியிட்டிருக்கிறோம்.

**ஈரோடு**
**3-11-1936** **- 'குடிஅரசு' பதிப்பகத்தார்**

# முன்னுரை

லாகூர் சாட்-பட்-தோடக் மண்டலத்தார் (ஜாதி ஒழிப்புச் சங்கத்தார்) அங்கு நடைபெறும் வருடாந்தர மாநாட்டுக்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று 1935 - டிசம்பர் மாதத்தில் எனக்கு ஓர் அழைப்பு அனுப்பினார்கள். ஈஸ்டர் விடுமுறை நாள்களில் மாநாடு நடத்துவதென்று முதலில் உத்தேசிக்கப்பட்டிருந்தது. அப்பால் 1936 - மே மாதத்தில் நடத்துவதென ஒத்தி வைக்கப்பட்டது. சாட்-பட்-தோடக் மண்டலம் ஜாதி இந்துச் சீர்திருத்தக்காரர் ஏற்படுத்திய ஒரு சங்கம் என்றும்,ஜாதியை ஒழிப்பதே அதன் நோக்கம் என்றும் கேள்விப்பட்டிருந்தேன்.ஜாதி இந்துக்களின் எந்த இயக்கத்திலும் பொதுவாக நான் கலந்து கொள்வதே இல்லை. சமூகச் சீர்திருத்த விஷயங்களில், எனது அபிப்பிராயங்களுக்கும் அவர்கள் அபிப்பிராயங்களுக்கும் பெருத்த வித்தியாசமுண்டு. எனவே, அவர்களுடன் ஒத்துழைப்பது கஷ்டம் என நான் உணர்ந்திருக்கிறேன். ஆதலின், மண்டலத்தார் அழைப்புக்கு முதலில் நான் இணங்கவில்லை. ஆனால், மண்டலத்தார் என் மறுப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. மண்டலப் பிரதிநிதி ஒருவரை பம்பாய்க்கு அனுப்பி நான் தலைமை வகிக்கும்படி வற்புறுத்தினார்கள். இறுதியில் நான் தலைமை வகிப்பதாக ஒப்புக்கொண்டேன். எனினும், வரவேற்புக் கழகத்தார் மாநாட்டையே ரத்து செய்துவிட்டார்கள். தலைமைப் பிரசங்கத்தை அச்சிட்டு வெகுநாளைக்குப் பிறகு மாநாட்டை ரத்து செய்த விஷயம் எனக்குத் தெரிய வந்தது. அச்சிட்ட தலைமைப் பிரசங்கப் பிரதிகள் என்னிடமிருக்கின்றன. தலைமைப் பிரசங்கம் நிகழ்த்த எனக்கு சந்தர்ப்பம் வாய்க்காததனால் ஜாதிப் பிரச்சினையைப் பற்றிய எனது அபிப்பிராயங்களைப் பொது ஜனங்கள் அறிய இடமில்லாது போய்விட்டது. எனவே, எனது அபிப்பிராயங்களை பொது ஜனங்களுக்கு அறிவிக்கும் பொருட்டு, அச்சிட்ட பிரதிகளை புத்தக ரூபமாக

விற்பனை செய்ய முடிவு செய்திருக்கிறேன். எனது தலைமைப் பிரசங்கம் முழுதும் கீழே தரப்பட்டிருக்கிறது.

நான் தலைமை வகிக்கவிருந்த மாநாட்டை ரத்து செய்யக் காரணம் என்ன என்பதை அறியப் பொதுமக்கள் ஆவலுடையவர்களாக இருக்கலாம். ஆரம்பத்திலேயே; தலைமைப் பிரசங்கத்தை அச்சிடுவது பற்றித் தகராறு உண்டாயிற்று. தலைமைப் பிரசங்கத்தை பம்பாயில் அச்சிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். சிக்கனத்தை முன்னிட்டு, பிரசங்கத்தை லாகூரில் அச்சிட வேண்டுமென்று மண்டலத்தார் விரும்பினார்கள். நான் இணங்கவில்லை. பம்பாயில் தான் அச்சிட வேண்டுமென மீண்டும் வற்புறுத்தினேன். என் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளாமல் மண்டல மெம்பர்கள் பலர் கையொப்பமிட்டு எனக்கு ஒரு கடிதம் அனுப்பினார்கள். அதில் சில பகுதிகளைக் கீழே தருகிறேன்.

**கனந்தங்கிய டாக்டர் ஜி!** **27.3.1936**

இம்மாதம் 24ஆம் தேதி தாங்கள், தோழர் சாந்தாராமுக்கு எழுதிய கடிதம் எங்களிடம் காட்டப்பட்டது. அதைப் படித்துப் பார்த்ததும் நாங்கள் சிறிது ஏமாற்றமடைந்தோம். இங்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையை ஒருக்கால் தாங்கள் பூரணமாக அறியாதிருக்கலாம். இந்த மாகாணத்துக்கு தங்களை அழைப்பதை அநேகமாகப் பாஞ்சால இந்துக்கள் அனைவரும் எதிர்க்கிறார்கள். சாட் பட் தோடக் மண்டலத்தாரை அனைவரும் வன்மையாகக் கண்டிக்கிறார்கள். நாலா பக்கங்களிலிருந்தும் கண்டனக் கடிதங்களும் வந்திருக்கின்றன.

மண்டலத்தார் தங்களை அழைத்ததை ஆதரிக்க மாஜி இந்து மகாசபைத் தலைவரும், அசெம்பிளி மெம்பருமான பாய் பரமானந்தர், மகாத்மா அன்ஸ்ராஜ், பாஞ்சால சர்க்கார் ஸ்தல ஸ்தாபன மந்திரி டாக்டர் கோகுல சந்திர நாரங்கு, பாஞ்சால சட்டசபை மெம்பர் ராசா நரேந்திரநாத் உள்ளிட்ட இந்துத் தலைவர்கள் எல்லாம் மறுத்துவிட்டார்கள்.

இவற்றையெல்லாம் லட்சியம் செய்யாமல் எப்பாடு பட்டாவது மாநாட்டை நடத்திவிடுவதென்று மண்டல நிருவாகிகள் முடிவு செய்திருக்கிறார்கள். எனினும் தங்களை மாநாட்டுத் தலைவராக்க வேண்டுமென்ற தமது அபிப்பிராயத்தை அவர்கள் மாற்றிக் கொள்ளவில்லை. அதனால் மண்டலத்துக்கு ஒரு கெட்ட பெயர் ஏற்பட்டுவிட்டது.

இந்நிலையில், மண்டலத்தாரோடு ஒத்துழைக்க வேண்டியது தங்கள்

கடமையாகும். ஒரு பக்கம் இந்துக்கள் எங்களைக் கஷ்டப்படுத்துகிறார்கள்; மறுபக்கம் தாங்கள் எங்கள் கஷ்டங்களை அதிகப்படுத்துகிறீர்கள். இவ்வாறு நேர்ந்திருப்பது எங்கள் துரதிர்ஷ்டமேயாகும்.

★★★

இந்தக் கடிதத்தைப் பார்த்து நான் மிக வியப்படைந்தேன். தலைமைப் பிரசங்கம் அச்சிடும் விஷயத்தில் சொற்ப அதிகச் செலவைக் கருதி மண்டலத்தார் என் விருப்பத்துக்கு மாறாக ஏன் நடந்து கொள்ள வேண்டுமென்பதை என்னால் உணர முடியவில்லை. இரண்டாவது, என்னை மாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததை முன்னிட்டு, சர் கோகுல சந்திர நாரங்கு போன்றவர்கள் ராஜிநாமா செய்தார்கள் என்பதையும் என்னால் நம்ப முடியவில்லை. ஏனெனில், சர் கோகுல சந்திர நாரங்கே - கீழ்வரும் கடிதத்தை எனக்கு அனுப்பினார்.

**5 - மாண்டோ கோமரி ரோடு, லாகூர், 7 - 2- 1936**

அன்புள்ள டாக்டர் அம்பேத்கர்!

ஈஸ்டர் விடுமுறை நாள்களில் லாகூரில் நடைபெறப் போகும் சாட்-பட்-தோடக் மண்டல வருடாந்தர மாநாட்டில் தாங்கள் தலைமை வகிக்கப் போவதை மண்டல நிர்வாகிகள் மூலமறிந்து மிகவும் சந்தோஷமடைகிறேன்.

தாங்கள் லாகூருக்கு வரும்போது, என்கூடத் தங்கியிருந்தால் எனக்கு மிகத் திருப்தியாக இருக்கும். மற்றவை நேரில்.

தங்கள் உண்மையுள்ள,
**ஜி.ஸி.நாரங்கு.**

உண்மை எதுவாயிருப்பினும் சரி, அவர்களுடைய பிடிவாதத்துக்கு நான் பணியவில்லை. தலைமைப் பிரசங்கத்தைப் பம்பாயில் அச்சிடும் விஷயத்தில் நான் பிடிவாதம் செய்வதையுணர்ந்த பிறகும் என் விருப்பத்துக்கு இணங்காமல் தோழர் ஹரபகவனை பம்பாய்க்கு அனுப்புவதாகவும், அவர் எல்லா விஷயங்களையும் நேரில் பேசுவார் என்றும் மண்டலத்தார் எனக்கு ஒரு தந்தியனுப்பினார்கள். தோழர் ஹரபகவனை நான் சந்தித்தபோது தகராறு விஷயத்தைப் பற்றி அவர் ஒன்றுமே சொல்லவில்லை. தலைமைப் பிரசங்கத்தைப் பம்பாயில் அச்சிடுவது பற்றியோ லாகூரில் அச்சிடுவது பற்றியோ அவர் சிரத்தை காட்டவே இல்லை. எங்கள் சம்பாஷணை மத்தியில் அவர் அதைப் பற்றிப் பேசவே இல்லை. ஆகவே, சிக்கனத்தை முன்னிட்டு அவர் லாகூரில் அச்சிட விரும்பவில்லையென்றும், தலைமைப்

பிரசங்கத்தின் பொருளை அறியவே லாகூரில் அச்சிட முயன்றார்கள் என்றும் நான் உணர்ந்து கொண்டேன். தலைமைப் பிரசங்கத்தில் சில பகுதிகள் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவர் லாகூருக்குச் சென்று பின்வரும் கடிதத்தையனுப்பினார்.

**லாகூர், 14-4-1936**

அன்பார்ந்த டாக்டர் சாகிப்!

அய்ந்தாறு நாள்கள் தூக்கமின்றி ரயில் பிரயாணம் செய்ததனால், பம்பாயிலிருந்து இங்கு வந்தது முதல் உடம்புக்கு சுகமில்லை. இங்கு வந்த பிறகு, தாங்கள் அமிர்தசரசுக்கு வந்திருப்பதாக அறிந்தேன். உடற்சுகம் ஏற்பட்ட பிறகு நான் அங்கு வந்து தங்களை நேரிற் பார்த்திருப்பேன். தங்கள் தலைமைப் பிரசங்கத்தை மொழி பெயர்க்கும்படி தோழர் சாந்தாராமிடம் கொடுத்தேன். அது அவருக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. ஆனால், 25-க்கு முன் அச்சிடுமாறு அதை மொழி பெயர்க்க முடியுமா? என்பது அவருக்குச் சந்தேகமாயிருக்கிறது. எப்படியாயினும் சரி, தங்கள் பிரசங்கம் நன்கு விளம்பரமாவது நிச்சயம். அதனால் தூங்கிக் கிடக்கும் இந்துக்கள் விழிப்படைவார்கள் என்றும் நம்புகிறேன். நான் பம்பாயில் இருக்கும்போது தலைமைப் பிரசங்கத்தில் நான் சுட்டிக்காட்டிய சில பகுதிகளை என் நண்பர்களுக்குக் காட்டினேன். அவர்கள் மன வருத்தத்துடன் படித்தார்கள். மாநாடு குழப்பமின்றி முடிய வேண்டுமென நாங்கள் விரும்புவதனால் தற்காலத்துக்கு வேதம் என்ற வார்த்தையை பிரசங்கத்திலிருந்து நீக்கிவிடுவதே உசிதம் என நினைக்கிறோம். தங்கள் யுக்திப்படி செய்யவும். முடிவுரையில், தலைமைப் பிரசங்கத்திலுள்ள அபிப்பிராயங்களுக்குத் தாங்களே பொறுப்பாளியென்றும், மண்டலத்தை அவை கட்டுப்படுத்தாதென்றும் தாங்கள் தெளிவாகக் கூறி விடவேண்டுமென்றும் விரும்புகிறேன். நான் இவ்வாறு கூறுவதைத் தாங்கள் அலட்சியம் செய்ய மாட்டீர்கள் என நினைக்கிறேன். அச்சிட்ட பிரசங்கத்தில் 1000 பிரதிகள் எங்களுக்கு அனுப்பவும். அதன் விலையை நாங்கள் தந்துவிடுகிறோம். இத்துடன் 100 ரூபாய்க்கு ஒரு செக்கும் அனுப்பியிருக்கிறது. அதை ஒப்புக் கொண்டு முறைப்படி பில் அனுப்பவும்.

தங்கள் உண்மையுள்ள,

**ஹரபகவன்.**

**குறிப்பு:** தலைமைப் பிரசங்கத்தைப் பத்திரிகைகளுக்கு அனுப்பச்

சவுகரியமாக இருக்கும் வண்ணம் அச்சிட்டு முடிந்தவுடனேயே பிரயாணிகள் வண்டியில் பார்சலாக அனுப்பவும்.

இந்தக் கடிதப்படி ஆயிரம் பிரதிகள் அச்சிடுமாறு ஏற்பாடு செய்தேன். எட்டு நாள்களுக்குப் பிறகு தோழர் ஹரபகவனிடமிருந்து வேறொரு கடிதம் வந்தது. அது வருமாறு:-

**லாகூர், 22-4-1936**

அன்பார்ந்த டாக்டர் அம்பேத்கர்!

தங்கள் கடிதமும் தந்தியும் வந்தன. அவைகளுக்கு எனது நன்றி. தங்கள் விருப்பப்படி மாநாட்டை மீண்டும் ஒத்தி வைத்திருக்கிறோம். ஆனால், பாஞ்சாலத்தில் வெப்பம் நாளுக்கு நாள் மிகுந்து வருவதானால் 25, 26ஆம் தேதிகளில் மாநாட்டை நடத்துவது நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். மே மாத மத்தியில் வெப்பம் மிகவும் கடுமையாக இருக்கும். பகற்பொழுது கூட்டம் கூடுவது அவ்வளவு ஸ்வாரஸ்யமாயிராது. எனினும் மே மாத மத்தியில் மாநாடு நடத்தினால் சாத்தியமான வசதிகள் செய்ய எங்களாலான முயற்சிகள் செய்கிறோம்.

மேலும், தங்கள் பார்வைக்கு ஒரு முக்கியமான விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறோம். மதமாற்ற விஷயமான தங்கள் அபிப்பிராயத்தைப் பற்றி எங்களில் பலருக்கு அதிருப்தியும், அச்சமும் ஏற்பட்டிருப்பதாக நான் தங்களிடம் தெரிவித்தபோது அது மண்டலத்துக்குப் புறம்பான விஷயமென்றும், மாநாட்டு மேடையில் அதைப் பற்றிப் பிரஸ்தாபிப்பதில்லையென்றும் தாங்கள் சொன்னீர்கள். மற்றும் தங்கள் பிரசங்க நகல் பிரதியை என்னிடம் கொடுத்த போது, பிரசங்கத்தின் பெரும் பகுதி மதமாற்ற விஷயத்தைப் பற்றியதென்றும், முடிவாகச் சில பகுதிகள் சேர்க்க வேண்டியதே பாக்கியிருப்பதாகவும் தாங்கள் சொன்னபோது, நாங்கள் திகைத்துப் போனோம். மொத்தமாகப் பார்த்தால் தலைமையுரை மிகவும் நீளமாக இருக்குமென்று தோன்றுகிறது. தலைமையுரை முழுவதையும் அதிகம் பேர் படிக்க மாட்டார்கள். மற்றும் பிரசங்கத்தில் பல இடங்களில் மதம் மாறத் தாங்கள் முடிவு செய்து விட்டதாகவும், இந்துவாகச் செய்யும் பிரசங்கம் இதுவே கடைசிப் பிரசங்கம் என்றும் கூறியிருக்கிறீர்கள். வேதங்களையும், இந்து சாஸ்திரங்களையும் அநாவசியமாகத் தாக்கி இருக்கிறீர்கள். இந்துமதக் கொள்கைகளைக் கண்டித்தும் தீர்க்கமாக எழுதியிருக்கிறீர்கள். மாநாட்டின் நோக்கத்திற்கும் அவைகளுக்கும் சம்பந்தமே இல்லை. எனவே பிரசங்கத்தின் பல பகுதிகள் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமில்லாதவைகளாயிருக்கின்றன.

என்னிடம் கொடுத்த பகுதிக்குள் தங்கள் பிரசங்கத்தை முடித்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும். அல்லது அதிகமாக ஏதாவது சேர்க்க வேண்டியது இன்றியமையாததாக இருந்தால் பார்ப்பனியத்தைப் பற்றி தாங்கள் குறிப்பிட்டிருக்கும் பகுதிவரை சேர்த்திருக்கலாம். இந்துமதம் ஒழிய வேண்டுமென்றும், வேதங்கள் ஆபாசமானவையென்றும் தாங்கள் இந்து மதத்தை விட்டு நீங்கப் போவதாகவும் கடைசியில் சேர்த்திருக்கும் பகுதி சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமாக இருக்கவில்லை.

எனவே, மேலே குறிப்பிட்ட பகுதிகளை நீக்கி விடுமாறும் என்னிடம் தந்த பகுதியுடன் முடித்துவிட வேண்டுமென்றும், தேவையானால் பார்ப்பனியத்தைப் பற்றிச் சொற்பம் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் மாநாட்டு நிருவாகிகள் சார்பாக நான் தங்களை மிக வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன். தங்கள் உணர்ச்சியில் நாங்கள் பலர் பங்கு கொள்கிறோம். இந்து மதத்தைத் திருத்தியமைக்கத் தங்கள் கொடிக்கீழ் நின்று உழைக்கவும் தயாராக இருக்கிறோம். சீர்திருத்தக்காரர்களான உங்களவர்களில் சிலரைத் தாங்கள் திரட்டினால் பாஞ்சாலத்திலிருந்தும் பலர் தங்கள் கோஷ்டியில் சேர்ந்து கொள்வார்கள் என்று உறுதி கூறுகிறேன்.

சாதி முறையைப் பற்றித் தாங்கள் நன்கு ஆராய்ச்சி செய்திருப்பதனால்,ஜாதி ஒழிப்பு வேலையில் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து சமூகப் புரட்சி உண்டு பண்ண உதவி செய்வீர்கள் என்று நாங்கள் நம்பியிருந்தோம். ஆனால், மதம் மாறப் போவதாகத் தாங்கள் வெளியிட்ட அறிக்கையினால், அந்த அறிக்கையின் பலமே குறைந்து விட்டது. ஏனெனில், மதம் மாறப் போவதாகப் பூச்சாண்டி காட்டுவது இப்பொழுது ஒரு வாடிக்கையாகிவிட்டது.

இந்நிலையில், எல்லா விஷயங்களையும் புனராலோசனை செய்துஜாதியை ஒழிக்க, இந்துக்கள் அந்தரங்க சுத்தியுடன் உழைத்தால் அவர்களுடன் ஒத்துழைக்கத் தயாராயிருப்பதாகக் கூறி, தங்கள் பிரசங்கத்தை கொஞ்சம் அதிக சக்தியுடையதாக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். தாங்கள் அவ்வாறு செய்தால், தங்களுக்கு ஆதரவளித்து ஒத்துழைக்க பாஞ்சாலம் தயாராயிருக்குமென நான் உறுதி கூறுகிறேன்.

மாநாடு விஷயமாக, நாங்கள் ஏராளமான பணம் செலவு செய்திருப்ப தனாலும், மாநாடு எவ்வாறு முடியுமோ? என்ற கவலை அதிகமாயிருப்பதனாலும் இந்த சந்தர்ப்பத்தில் தாங்கள் எங்களுக்கு உதவி செய்ய முன்வந்தால், நாங்கள் மிக்க நன்றியுடையவர்களாயிருப்போம். எனவே, என் விருப்பப்படி தங்கள்

பிரசங்கத்தைச் சுருக்கிக் கொண்டதாக மறு தபாலில் பதில் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பிரசங்கம் முழுமையும் அச்சிட்டுத்தான் ஆக வேண்டுமென்று மேலும் தாங்கள் பிடிவாதம் செய்தால், மாநாட்டைத் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

ஜாதிப் பாகுபாட்டைப் பற்றித் தாங்கள் எழுதி இருக்கும் பிரசங்கம் மிக அருமையானது. அதுபோன்ற பிரசங்கம் இதுவரை எழுதப்பட்டதே இல்லை. நமது சந்ததிகளுக்கு அது ஒரு அழியாப் பொக்கிஷமாக இருக்குமென்பது நிச்சயம். அதைத் தயார் செய்யத் தாங்கள் எடுத்துக் கொண்ட சிரமத்துக்கு நாங்கள் மிகவும் நன்றி பாராட்டுகிறோம்.

தங்கள் கருணைக்கு அன்பார்ந்த நன்றி.

தங்கள் உண்மையுள்ள,
**ஹரபகவான்.**

அந்தக் கடிதத்துக்கு நான் கீழ்வருமாறு பதில் எழுதினேன்.

**24-7-1936**

அன்புள்ள ஹரபகவான்!

தங்கள் ஏப்ரல் 22-ந் தேதி கடிதம் வரப்பெற்றேன். எனது பிரசங்கம் முழுமையையும் அச்சிட வேண்டுமென்று நான் பிடிவாதம் செய்தால் - அவ்வாறு அச்சிடுவதைவிட, மாநாட்டைத் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைப்பதே மேலானதென வரவேற்புக் கழகத்தார் முடிவு செய்வார்கள் என்பதையறிந்து வருந்துகிறேன். எனினும், சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி எனது தலைமைப் பிரசங்கத்தைச் சுருக்குவதைவிட, மாநாட்டை நிறுத்தி விடுவதே நலமென நான் நினைக்கிறேன். இவ்விஷயத்தில் மழுப்பலாகப் பேச நான் விரும்பவில்லை. என் முடிவு தங்களுக்குப் பிடிக்காதிருக்கலாம். ஆனால், தங்கள் மாநாட்டுத் தலைவருக்கு தமது தலைமைப் பிரசங்கத்தைத் தமது இஷ்டப்படி தயார் செய்ய இயல்பாக இருந்து வரும் உரிமையை என்னால் விட்டுக் கொடுக்க முடியாது. இந்தப் பிரச்சினை கொள்கையைப் பற்றியது; எந்த வகையிலும் என் கொள்கையை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்.

வரவேற்புக் கமிட்டியார் செய்யும் முடிவின் தாரதம்மியங்களைப் பற்றி விவாதிக்கும் வேலையில் ஈடுபட நான் விரும்பவில்லை. ஆனால், தகராறுக்கு நானே காரணஸ்தன் என நீங்கள் குற்றம் சாட்ட முயல்வதனால்,

அதற்கு விடையளிக்க வேண்டியது எனது கடமையென உணர்கிறேன். மண்டலத்தாருக்கு ஆட்சேபணையாகத் தோன்றும் எனது தலைமைப் பிரசங்கத்தின் ஒரு பகுதியிலுள்ள அபிப்பிராயங்கள் புதியவை என்றோ, அவைகளைப் பார்த்து மண்டலத்தார் வியப்படைவதாகவோ கூறுவதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. தோழர் சாந்தாராமுக்கு நான் எழுதிய ஒரு கடிதத்தில்ஜாதிக் கொடுமையை ஒழிப்பதற்குக் கலப்பு மணங்களும், சமபந்தி போசனங்களும் மட்டும் நடத்தினால் போதாதென்றும்,ஜாதிப் பாகுபாட்டுக்கு அடிப்படையாக இருக்கும் மதக் கொள்கைகளை ஒழிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தேன். இதை, தோழர் சாந்தாராம் ஒப்புக் கொள்வார் என்றே நம்புகிறேன். தோழர் சாந்தாராம் எனக்கு அனுப்பிய பதிலில் எனது அபிப்பிராயம் புதுமையாக இருக்கிறதென்றும் அதை விளக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார். அவரது வேண்டுகோளுக்கிணங்கியே, நான் அவருக்கு எழுதிய கடிதத்தில் ஒரு வரியில் குறிப்பிட்டிருந்த எனது கருத்தைத் தலைமைப் பிரசங்கத்தில் விரிவாக விளக்கிக் கூற முயன்றேன். எனவே, எனது அபிப்பிராயங்கள் புதியவை என்று உங்களால் கூற முடியாது. மற்றவர்கள் விஷயத்தில் எப்படியானாலும் சரி, தங்கள் மண்டலத்தில் ஒரு பிரபலஸ்தராயிருக்கும் தோழர் சாந்தாராமுக்கு அவை புதியவையாக இருக்கவே முடியாது. இந்த எனது அபிப்பிராயங்களை, அசாதாரணமாகத் தலைமைப் பிரசங்கத்தில் நான் புகுத்தவுமில்லை. எனது வாதத்தைப் பூர்த்தி செய்வதற்கு அவை இன்றியமையாதவையாக இருப்பதனாலேயே நான் அவ்வாறு செய்தேன். தங்கள் கமிட்டியார் ஆட்சேபணை செய்யும் பகுதிகள் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமற்றவையெனத் தாங்கள் கூறுவதைப் பார்த்து நான் வியப்படைகிறேன். நான் ஒரு லாயர். எனவே சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமானவை எவை? அல்லாதவை எவை? எனத் தங்கள் கமிட்டி மெம்பர்களுக்குத் தெரிந்த அளவுக்காவது எனக்குத் தெரியும். ஆட்சேபிக்கப்படும் பகுதிகள் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமாக இருப்பது மட்டுமன்றி முக்கியமாக இருக்கிறதென்றும் நான் உறுதியாகக் கூறுகிறேன். அந்தப் பகுதியில்தான்ஜாதியை ஒழிக்கும் உபாயங்களை விளக்கியிருக்கிறேன்.ஜாதியை ஒழிப்பதற்கு நான் கூறும் முடிவுகள் பிரமிக்கத் தக்கவையாகவும், மனத்தைப் புண்படுத்தக் கூடியவையாயுமிருக்கலாம். என் முடிவைத் தப்பென்று கூறத் தங்களுக்கு உரிமையுண்டு. ஆனால்,ஜாதிப் பிரச்சினையைப் பற்றிய ஒரு பிரசங்கத்தில்ஜாதியை ஒழிக்கும் மார்க்கங்களை விளக்கிக் கூறக் கூடாதென்று தங்களால் சொல்ல முடியாது.

அப்பால் பிரசங்கம் நீளமானதென்று ஒரு குறை கூறுகிறீர்கள். எனது

பிரசங்கத்திலேயே அந்தக் குற்றத்தை நான் ஒப்புக் கொண்டிருக்கிறேன். ஆனால் இதற்கு உண்மையில் பொறுப்பாளி யார்? மிகக் காலம் தாழ்த்தியே நீங்கள் மாநாட்டு விஷயங்களில் தலையிட்டீர்கள். எனவே, பூர்வக் கதைகளை நீங்கள் அறிந்திருக்க இடமில்லை. உண்மை என்னவெனில், வெகு நீளமான பிரசங்கம் தயார் செய்யப் போதிய காலம் இல்லாதிருந்ததனால், ஒரு சிறு பிரசங்கம் தயார் செய்யவே நான் முதலில் எண்ணியிருந்தேன். ஆனால் தீர்க்கமான பிரசங்கம் தயார் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டது மண்டலத்தாரே.

மற்றும் மண்டலத்தார், ஜாதிப் பாகுபாட்டைப் பற்றிய சில கேள்விகளையனுப்பி அவைகளுக்குப் பிரசங்கத்தில் விடையடங்கியிருக்க வேண்டுமென்றும் மண்டல எதிரிகள் அக்கேள்விகளை அடிக்கடி கேட்பதாயும் அவற்றுக்கு விடையளிக்க மண்டலத்தாருக்கு முடியவில்லையென்றும் தெரிவித்தார்கள். மண்டலத்தாரின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டே பிரசங்கம் நீளமானது. அதற்குக் குற்றவாளி நானல்லவென்பதைத் தாங்கள் ஒப்புக் கொள்ளக் கூடும்.

இந்து மதம் ஒழிய வேண்டுமென்று கூறுவதனால் தங்கள் மண்டலமே கவிழ்ந்து விடுமென்று நான் எண்ணவே இல்லை. வார்த்தைகளுக்குப் பயப்படுகிறவர்கள் மூடர்கள் என்பதுதான் எனது அபிப்பிராயம். எனினும் மக்கள் மனத்தில் தப்பெண்ணம் உண்டாகாதிருக்கும் பொருட்டு மதத்தைப் பற்றிய எனது கருத்துகளையும் அது ஏன் ஒழிய வேண்டும் என்பதற்குள்ள காரணங்களையும் வெகு சிரமப்பட்டு விளக்கிக் கூறியிருக்கிறேன். எனது பிரசங்கத்தைப் படிப்பவர்கள் எவரும் தப்பர்த்தம் பண்ணிக் கொள்ள மாட்டார்கள் என்பது திண்ணம். மதம் ஒழிய வேண்டுமென்பதற்கு நான் கூறும் சமாதானங்களைக் கவனியாமல் மதம் ஒழிய வேண்டும் என்ற வார்த்தைகளைப் பார்த்தவுடனே பீதியடைந்திருக்கும் உங்கள் மண்டலத்தாரைப் பற்றிய எனது மதிப்புக் குறைந்துவிட்டது.

சீர்திருத்தக்காரர் எனப் பெயர் சூட்டிக் கொண்டு, அதனால் ஏற்படக்கூடிய பலாபலன்களை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களையும், சீர்திருத்த முறைகளைப் பின்பற்றத் தயங்குகிறவர்களையும் ஒருவரும் மதிக்க மாட்டார்கள். பிரசங்கம் தயார் செய்வதில் எத்தகைய கட்டுப்பாடுகளையும் நான் ஒப்புக் கொள்ளவில்லை. பிரசங்கத்தில் இன்னின்னவை அடங்கியிருக்க வேண்டும்; இன்னின்னவை அடங்கியிருக்கக் கூடாதென்றும் மண்டலத்தாருக்கும் எனக்கும் பேச்சு வார்த்தைகள் நடந்ததுமில்லை. எனது பிரசங்கத்தில் எனது அபிப்பிராயங்களைத்

தங்கு தடையின்றிக் கூற எனக்குப் பூரண உரிமையுண்டென்று நானாகவே நம்பிக் கொண்டேன். ஏப்ரல் 9ஆம் தேதி தாங்கள் பம்பாய்க்கு வரும்வரை எனது பிரசங்கம் எப்படியிருக்குமென்பதை மண்டலத்தார் அறியவுமில்லை. ஒடுக்கப்பட்டவர்கள் மதமாற்றம் செய்ய வேண்டுமென்ற எனது கொள்கையைப் பிரச்சாரம் செய்ய, தங்கள் மாநாட்டு மேடையை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்வதில்லை என்று நானாகவே தாங்கள் பம்பாய்க்கு வந்தபோது வாக்குறுதியளித்தேன். பிரசங்கம் தயார் செய்யும் விஷயத்தில் அந்த வாக்குறுதியைக் காப்பாற்றியே வந்திருக்கிறேன். ஒரு இடத்தில் மறைமுகமாகச் சில வார்த்தைகள் சொல்லியிருக்கிறேனே தவிர, மதமாற்ற விஷயத்தைப் பற்றி எனது பிரசங்கத்தில் வேறு எதுவுமே நான் கூறவில்லை. தாங்கள் அவ்வாறு எண்ணினால், அந்தத் தப்பெண்ணத்துக்கு நான் பொறுப்பல்ல.

தங்கள் மாநாட்டுத் தலைமைப் பதவியை எனக்களித்து கவுரவம் செய்வதற்குப் பிரதிபலனாக எனது மத மாற்றக் கொள்கையை விட்டுவிட வேண்டுமென்று ஒரு சாயலாகவாவது என்னிடம் தெரிவித்திருந்தால் என் கொள்கையே எனக்கு முக்கியமென்றும், தலைமைப் பதவி முக்கியமல்லவென்றும் பகிரங்கமாகக் கூறியிருப்பேன். 14ஆம் தேதி கடிதத்துக்குப் பிறகு இப்பொழுது கிடைத்திருக்கும் தங்களது கடிதத்தைப் பார்த்து நான் ஆச்சரியமடைந்தேன். அதைப் படிப்பவர்கள் எல்லாம் ஆச்சரியப்படுவார்கள் என்பது நிச்சயம். வரவேற்புக் கமிட்டியார் பார்வைக்கு அனுப்பிய எனது பிரசங்க நகலுக்கும், பிரசங்க அசலுக்கும் சாராம்சத்தில் எத்தகைய வித்தியாசமும் இல்லவே இல்லை. நகலில் உள்ள கருத்துகளே, அசலிலும் அடங்கியிருக்கின்றன. நகலில் உள்ள கருத்துகளை அசலில் சிறிது விரிவாக விளக்கிக் கூறியிருக்கிறேன். வித்தியாசம் இவ்வளவே. பிரசங்கத்தில் ஆட்சேபகரமானது ஏதாவது இருந்திருந்தால் 14ஆம் தேதி கடிதத்தில் அதைச் சுட்டிக் காட்டியிருக்கலாம். நீங்கள் அவ்வாறு செய்யவில்லை. மாறாக, பிரசங்கத்தில் தாங்கள் சுட்டிக் காட்டும் சில திருத்தங்களை ஒப்புக்கொள்ளும் அல்லது மறுக்கும் பொறுப்பை எனக்கு விட்டுவிட்டு பிரசங்கத்தில் 1000 பிரதி அச்சிட வேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டீர்கள். தங்கள் விண்ணப்பப்படி 1000 பிரதி அச்சிட்டேன். அவை என்னிடம் இருக்கின்றன. எட்டு நாள்களுக்குப் பிறகு பிரசங்கம் ஆட்சேபகரமாயிருப்பதாயும், அதைத் திருத்தாவிட்டால் மாநாட்டையே நிறுத்தி விடுவதாகவும் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள். பிரசங்கத்தில் எத்தகைய மாற்றமும் செய்ய முடியாதென்பதைத் தாங்கள் அறிந்தே இருக்கிறீர்கள்.

என் பிரசங்கத்தில் ஒரு நிறுத்தப் புள்ளியைக் கூட நான் மாற்ற மாட்டேனென்றும், எனது பிரசங்கத்தை எவரும் தணிக்கை செய்யக் கூடாதென்றும் நான் எழுதிய பிரசங்கத்தை அப்படியே நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டுமென்றும் தாங்கள் பம்பாய்க்கு வந்தபோது தங்களிடம் நேரில் நான் சொல்லியிருக்கிறேன். எனது தலைமைப் பிரசங்கத்திலுள்ள அபிப்பிராயங்களுக்கு நானே முழுப் பொறுப்பாளி என்றும், அதை மாநாட்டார் ஆதரிக்கவில்லையானால் நான் லட்சியம் செய்ய மாட்டேனென்றும், மாநாட்டில் அதைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றினாலும் பாதகமில்லையென்றுங்கூடத் தங்களிடம் தெரிவித்திருக்கிறேன். எனது பிரசங்கத்துக்கு மண்டலத்தார் பொறுப்பாளியாகாதிருக்கும் பொருட்டும், மாநாட்டில் நான் நெருங்கிய சம்பந்தம் வைத்துச் சிக்கிக் கொள்ளாமல் இருக்கும் பொருட்டும் எனது பிரசங்கத்தை மாநாட்டின் பூர்வாங்கப் பிரசங்கமாக வைத்துக் கொண்டு வேறொருவரைத் தலைவராக்கி அவரைக் கொண்டு தலைமைப் பிரசங்கம் நிகழ்த்திக் கொள்ள வேண்டுமென்றும், அவருடைய தலைமையில் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டுமென்றும் மேற்கொண்டு தங்களிடம் ஒரு யோசனை சொன்னதுண்டு. எனவே, 14ஆம் தேதியே தங்கள் கமிட்டியார் இவ்விஷயங்களை யெல்லாம் யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். அவ்வாறு செய்ய, கமிட்டியார் தவறி விட்டார்கள். இடைக்காலத்து அச்சுக்கூலி இனத்தில் கொஞ்சம் பணமும் செலவாக்கப்பட்டு விட்டது. ஆதியிலேயே உங்கள் கமிட்டியார் சிறிது மன உறுதியுடன் நடந்திருந்தால் இந்த நஷ்டம் ஏற்படாமல் தடுத்திருக்கலாம்.

எனது தலைமைப் பிரசங்க அபிப்பிராயங்களுக்கும், தங்கள் கமிட்டியின் முடிவுக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லையென்றே நினைக்கிறேன். அமிர்தசரசில் நடைபெற்ற சீக்கியப் பிரச்சார மாநாட்டில் நான் பிரசன்னமா யிருந்ததே தங்கள் கமிட்டியார் செய்த முடிவுக்குக் காரணமாயிருக்கக் கூடுமென்று எண்ணுகிறேன்.

ஏப்ரல் 14ஆம் தேதிக்கும் 22ஆம் தேதிக்கும் இடையில் கமிட்டியார் ஒரு பல்டியடித்ததற்கு நான் கூறிய காரணத்தைத் தவிர, வேறு திருப்திகரமான காரணம் எதையும் கூறவே முடியாது.

எனினும் இந்த விவாதத்தை நீட்ட நான் விரும்பவில்லை. நான் தலைமை வகிக்க இருந்த மாநாட்டை ரத்து செய்து விட்டதாக ஓர் அறிக்கை வெளியிடும்படி நான் வேண்டிக் கொள்ளுகிறேன். மரியாதை முறைகள் எல்லாம் இத்துடன் முடிவு பெற்றுவிட்டன. இனிமேல் என் பிரசங்கம் முழுமையும் தங்கள்

கமிட்டியார் ஒப்புக் கொண்டாலுங்கூட, நான் தங்கள் மாநாட்டுக்குத் தலைமை வகிக்க மாட்டேன். இந்தப் பிரசங்கத்தைத் தயார் செய்ய நான் எடுத்துக் கொண்ட பிரயாசையை தாங்கள் பாராட்டுவதற்காக நான் தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். எனது முயற்சியினால் இதரர்களுக்கு நலமேற்படாவிட்டாலும் எனக்கு நன்மையே ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், இந்தச் சிரமத்தைத் தாங்குவதற்குப் போதுமான உடற்சுகம் எனக்கில்லாத காலத்து, நான் கஷ்டப்பட்டு பிரசங்கம் எழுத நேர்ந்ததுதான் எனக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு சங்கடம்.

இங்ஙனம், தங்கள் உண்மையுள்ள,
**பி.ஆர். அம்பேத்கர்.**

எனது தலைமைப் பதவியை மண்டலத்தார் மறுத்ததற்குள்ள காரணங்கள் இந்தக் கடிதப் போக்குவரத்தினால் வெளியாகக் கூடும். எனவே, குற்றவாளி யார் என்பதை வாசகர்களே முடிவு செய்து கொள்ளட்டும். தலைமைப் பிரசங்கத்தை வரவேற்புக் கமிட்டியார் ஒப்புக்கொள்ளாத காரணத்தால் தலைவரையே ரத்து செய்தது இதுவே முதல் தடவையாகும். இது சரியோ? தப்போ? ஒரு ஜாதி - இந்து மாநாட்டுக்கு என்னைத் தலைமை வகிக்க அழைத்ததும் இதுவே முதல் தடவை என்பதற்கு சந்தேகமே இல்லை. அது துக்ககரமாக முடிந்தது பற்றி மிகவும் வருத்தமடைகிறேன். ஜாதி இந்துச் சீர்திருத்தக்காரர்களுக்கும் சுயமரியாதையுள்ள தீண்டாதாருக்கும் ஏற்படக் கூடிய சம்பந்தம் இப்படித்தான் முடியக் கூடும்.ஜாதி இந்துச் சீர்திருத்தக்காரர்களுக்கும் வைதீகர் ஆதரவை இழக்க முடியாது. தீண்டப் படாதாருக்குச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று வற்புறுத்துவதைத் தவிர வேறு வழியுமில்லை.

**ராஜகிரகம்** **- பி.ஆர். அம்பேத்கர்**
**தாத்தார், பம்பாய்.**
**15-5-1936**

# 1

# தலைமைப் பேருரை

அன்பர்களே,

இம்மாநாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு மிக்க அன்புடன் வேண்டிக் கொண்ட, சாட்–பட்–தோடக் மண்டலத்தாரின் நிலைமையை எண்ணி நான் மிகவும் வருந்துகிறேன். என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதைப் பற்றி அவர்களைப் பலர் கேள்விகள் கேட்பார்கள் என்பது நிச்சயம். லாகூரில் நடைபெறும் மாநாட்டுக்குத் தலைமை வகிக்கப் பம்பாயிலிருந்து ஒருவரை இறக்குமதி செய்யக் காரணமென்னவென்று மண்டலத்தாரிடம் கேட்கப்படலாம். இம்மாநாட்டுத் தலைமை வகிக்க என்னைவிடத் தகுதி வாய்ந்த ஒருவரை மாநாட்டார் வேண்டிக் கொண்டிருக்கலாம். இந்துக்களைக் கண்டித்திருக்கிறேன். அவர்கள் வணங்கும் மகாத்மாவுக்கு இந்தியர் பேரால் பேச என்ன உரிமையுண்டென்றும் நான் கேட்டிருக்கிறேன். அவர்கள் என்னை வெறுக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒரு சர்ப்பமாகத் தோற்றப்படுகிறேன். இம்மாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் கவுரவத்தை எனக்கு அளித்ததன் காரணத்தை விளக்குமாறு அரசியல்வாதிகளான இந்துக்களும் உங்களைக் கேட்கக் கூடும். நீங்கள் மிக்க துணிகரமாகவே என்னைத் தேர்ந்தெடுத்திருக் கிறீர்கள். மத உணர்ச்சியுடைய சாமானிய இந்துக்களுக்கு என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது பிடிக்கவே செய்யாது. ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்குச் சாஸ்திரங்கள் வகுத்திருக்கும் கட்டளையை

மண்டலத்தார் மீறியதைப் பற்றியும் மண்டலத்தாரிடம் கேள்விகள் கேட்கப்படலாம். சாஸ்திரங்களின்படி மற்ற மூன்று வர்ணத்தார்களுக்கும் குரு ஸ்தானம் வகிக்கப் பார்ப்பானே தகுதியுடையவன் (வர்ணானாம் ப்ராஹ்மணே குரு). எனவே, இந்துக்கள் யாரிடமிருந்து உபதேசம் பெறலாம்; யாரிடமிருந்து உபதேசம் பெறக் கூடாது என்ற விஷயத்தை மண்டலத்தார் அறிந்திருக்க வேண்டும். பாண்டித்தியமுடையவன் என்ற காரணத்தினால் மட்டும் எவனையும் குருவாகக் கொள்ளக் கூடாதென்று சாஸ்திரங்கள் கட்டளையிடுகின்றன.

ஓர் இந்து ராஜ்யம் ஸ்தாபிப்பதற்கு சிவாஜிக்கு உதவியாயிருந்த ராமதாஸ் என்ற மகாராஷ்டிரப் பார்ப்பனன் இவ் விஷயத்தை நன்கு தெளிவுபடுத்தியிருக்கிறான். அவன் எழுதிய தசபோதம் என்ற மகாராஷ்டிர நூலில் ஓர் அந்நியஜன பண்டிதனாயிருந்தாலும் அவனை இந்துக்கள் குருவாகக் கொள்ளக் கூடாதென்று வற்புறுத்தியிருக்கிறான். எனவே, மண்டலத்தாரிடம் கேட்கப்படக்கூடிய மேலே குறிப்பிட்ட கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டிய பொறுப்பை மண்டலத்தாருக்கு விட்டுவிடுகிறேன். ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க மண்டலத்தார் பம்பாய் வரை பிரயாணம் செய்ததற்கும், இந்துக்களால் வெறுக்கப்படும் ஒருவரைத் தேடிப் பிடித்ததற்கும், சவர்ணர்களுக்குத் தலைமை வகித்துப் பேச ஒரு அவர்ணனை – அந்நியனை ஏற்படுத்தியதற்கும் உள்ள காரணங்களை மண்டலத்தாரே நன்கு அறிந்திருக்கக் கூடும். என்னிடம் இந்துக்களுக்கு மிக்க வெறுப்பு ஏற்பட்டிருப்பதை நானறிவேன்.

இந்துக்களின் ப்ரீதிக்கு நான் பாத்திரனாயிருக்கவில்லை யென்பதையும் நான் உணர்கிறேன். இந்த விஷயங்களை யெல்லாம் அறிந்திருப்பதனாலேயே இந்த விஷயங்களைவிட்டு ஒதுங்கியிருந்தேன். அவர்கள் விஷயத்தில் வலுக்கட்டாயமாகத் தலையிட எனக்கு விருப்பமே இல்லை. எனவே, எங்கள் சொந்த மாநாட்டு மேடைகளிலே எனது அபிப்பிராயங்களை நான் வெளியிட்டு வந்தேன்.

இதனால் அவர்களுக்கு எவ்வளவோ மனவருத்தமும், எரிச்சலும் ஏற்பட்டன. இந்துக்களின் காதுக்கெட்டும் தூரத்தில் நான் செய்து வந்த வேலைகளை இந்துக்களின் மேடையில் அவர்கள் கண்முன்னே செய்ய நான் விரும்பவில்லை. நான் இப்பொழுது இங்கு பிரசன்னமாயிருப்பதற்கு நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்ததே காரணம். நான் வலிய வரவில்லை.

உங்கள் சமூகச் சீர்திருத்தம் எனக்குப் பிடித்தமான விஷயமே. எனவே, தங்கள் லட்சியம் நிறைவேற நான் உதவி புரியக்கூடுமென்று நீங்கள் நினைக்கையில் உங்கள் வேண்டுகோளை மறுப்பது உசிதமல்லவென்று எண்ணியே ஒப்புக்கொண்டேன். உங்கள் லட்சியம் நிறைவேற என் பிரசங்கம் உதவி புரியுமா? என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ள வேண்டும். சமூகச் சீர்திருத்த விஷயங்களில் நான் கொண்டுள்ள அபிப்பிராயங்களை உங்கள் முன்னிலையில் சமர்ப்பணம் செய்யமட்டுமே நான் விரும்புகிறேன்.

## 2

சமூகச் சீர்திருத்தத்துக்குள்ள வழி இந்தியாவைப் பொறுத்த வரையில் – சுவர்க்கத்துக்குள்ள வழிபோலக் கரடுமுரடானது, சங்கடமானது, ஆபத்துகள் நிறைந்தது. இந்தியாவில் சமூகச் சீர்திருத்தத்துக்கு நண்பர்கள் சிலரே; எதிரிகளே அதிகம். எதிரிகள் இருவகை; ஒரு கூட்டத்தார் அரசியல் சீர்திருத்தக்காரர்கள்; மற்றவர்கள் அபேதவாதிகள்.

சமூகம் முன்னேற்றமடையாமல் எந்தத் துறையிலும் முன்னேற்றம் ஏற்படாதென்றும், அநேக துராச்சாரங்களினால் இந்துச் சமூகம் சீரழிந்து கிடக்கிறதென்றும், அந்த துராச்சாரங்களை ஒழிக்க இடையறாது உழைக்க வேண்டுமென்றும் ஒரு காலத்து ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. அதனாலேயே தேசிய காங்கிரசுக் கூட்டத்துக்குப் பின் சீர்திருத்த மாநாடும் நடத்தப்பட்டு வந்தது. இந்திய அரசியல் அமைப்பில் உள்ள ஊழல்களைத் தேசிய காங்கிரசு சுட்டிக்காட்டி வந்தது. சமூக அமைப்பில் உள்ள ஊழல்களைச் சீர்திருத்த மாநாடு விளக்கி வந்தது. கொஞ்ச காலத்துக்கு, தேசிய காங்கிரசும் சீர்திருத்த மாநாடும் தேசிய முன்னேற்ற முயற்சியின் இரு பிரிவுகளாக மதிக்கப்பட்டு வந்தன. அவ்விரண்டு ஸ்தாபனங்களின் மாநாடுகளும் ஒரே இடத்தில் அடுத்தடுத்து நடைபெற்று வந்தன. ஆனால், வெகு சீக்கிரத்தில் அவை இரண்டும் அரசியல் சீர்திருத்தக் கட்சி என்றும், சமூகச் சீர்திருத்தக் கட்சி என்றும் இரண்டு தனிப்பிரிவுகளாகப் பிரிந்தன. அவ்விரு கட்சியாருக்குள்ளும் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று

வந்தன. அரசியல் சீர்திருத்தக் கட்சியார் தேசிய காங்கிரசை ஆதரித்தனர். சமூகச் சீர்திருத்தக் கட்சியார் சீர்திருத்த மாநாட்டை ஆதரித்தனர். எனவே இரண்டு ஸ்தாபனங்களும் பரஸ்பர சத்துருக்களாயின. முதலில் வேண்டுவது எது? சமூகச் சீர்திருத்தமா? அரசியல் சீர்திருத்தமா? என்ற பிரச்சினையைப் பற்றியே அவ்விரு ஸ்தாபனங்களுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. வெகுகாலம் இருகட்சியாரும் சம பலமுடையவராக இருந்து வந்தனர். எனினும் காலக் கிரமத்தில் சீர்திருத்த மாநாட்டின் சக்தி குறையத் தொடங்கிற்று. சீர்திருத்த மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர்களே, இந்துக்களில் பெரும்பாலோர் அரசியல் முன்னேற்றத்தையே விரும்புகிறார்கள் என்றும், சமூக முன்னேற்ற விஷயத்தில் அலட்சியமாக இருக்கிறார்கள் என்றும், காங்கிரசுக்கு விஜயம் செய்வோரும் அனுதாபம் காட்டுவோரும் ஏராளமாக இருக்கிறார்கள் என்றும், சீர்திருத்த மாநாட்டிற்கு மிகச் சொற்பப்பேரே விஜயம் செய்கிறார்கள் என்றும் பிரலாபிக்கத் தொடங்கினர். சீர்திருத்த மாநாட்டை அலட்சியம் செய்து வந்த இந்து அரசியல்வாதிகள் கடைசியில் பகிரங்கமாக எதிர்க்கவும் தொடங்கினர். காங்கிரசுப் பந்தலில் சீர்திருத்த மாநாடு கூடுவதற்குச் சலுகை காட்டி வந்த காங்கிரசுக்காரர், திலகர் தலைமையில் கூடிய காங்கிரசில் அந்தச் சலுகையையும் மறுத்தனர். கடைசியில், தமக்கென ஒரு பந்தல் அமைக்கச் சமூகச் சீர்திருத்த நிருவாகிகள் முயன்றபோது, அப்படிப் பந்தல் அமைத்தால் அதைக் கொளுத்திச் சாம்பலாக்கி விடுவதாகக் காங்கிரசுக்காரர்கள் பூச்சாண்டி காட்டினர். எனவே இறுதியில் அரசியல் சீர்திருத்தக் கட்சியார் வெற்றி பெற்றனர். சமூகச் சீர்திருத்த மாநாடு மறைந்தொழிந்தது. இப்பொழுது அதைப் பற்றிச் சிந்திப்பாரே இல்லை. 1862இல் அலகாபாத்தில் நடைபெற்ற எட்டாவது தேசிய காங்கிரசிற்குத் தலைமை வகித்த தோழர் டபிள்யூ.ஸி.பானர்ஜி நிகழ்த்திய பிரசங்கம் சமூகச் சீர்திருத்த மாநாட்டுக்குச் சாவுமணியடிக்கும் பிரசங்கம் என்றே சொல்ல வேண்டும். மற்றும் சமூகச் சீர்திருத்த விஷயங்களில் காங்கிரசுக்காரர்களுக்கு இருந்து வரும் மனப்பான்மையையும் அது நன்கு காட்டக் கூடியதாயிருப்பதனால், அந்தப் பிரசங்கத்திலிருந்து ஒரு பகுதியைக் கீழே தருகிறேன்.

தோழர் பானர்ஜி கூறியிருப்பதாவது:–

“சமூகச் சீர்திருத்தம் செய்யாமல் அரசியல் சீர்திருத்தம் பெற நமக்கு யோக்கியதை இல்லையென்று கூறுவோரை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அந்த இரண்டுக்கும் என்ன சம்பந்தம் இருக்கக்கூடும்?

என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. நமது விதவைகள் மறுமணம் செய்து கொள்ளாமலிருப்பதானாலும் நமது பெண்களுக்கு இளம் வயதில் விவாகம் நடத்துவதனாலும், நண்பர்களைக் காணப் போகும் போது நமது மனைவிமாரையும் புத்திரிகளையும் நம் கூட அழைத்துச் செல்லாததனாலும், கல்விப் பயிற்சிக்காக நமது புத்திரிகளை ஆக்ஸ்ஃபோர்டுக்கும் கேம்பிரிட்ஜுக்கும் அனுப்பாததனாலும் அரசியல் சீர்திருத்தம் பெற நமக்கு யோக்கியதை இல்லையா?'' (கை தட்டல்)

அரசியல் சீர்திருத்தம் பெற நமக்கு யோக்கியதை உண்டென்பதற்குத் தோழர் பானர்ஜி கூறிய வாதத்தை மேலே எடுத்துக்காட்டி விட்டேன். காங்கிரசு வெற்றி பெற்றதை எண்ணி மகிழ்ச்சியடைந்தவர்கள் ரொம்பப் பேர் இருந்தார்கள்; இப்பொழுதும் இருக்கிறார்கள். ஆனால், சமூகச் சீர்திருத்தமே முக்கியமென நம்புகிறவர்கள், தோழர் பானர்ஜி கூறும் வாதந்தான் முடிவானதா? எனக் கேட்கக் கூடும். அதனால் சரியான அபிப்பிராயமுடையவர்களே வெற்றியடைந்தார்கள் என ஏற்படுமா? சமூகச் சீர்திருத்தக்காரர் அபிப்பிராயங்களை உணர்ந்தால் தான் பிரஸ்தாபப் பிரச்சினைகளில் உண்மை நிலையைச் சரியாக உணர்ந்து கொள்ள முடியும். எனவேதான் தீண்டப்படாதாரின் குறைகளை விளக்கிக் கூறுகிறேன்.

பேஷ்வாக்கள் ஆட்சியில் மகாராஷ்டிர தேசத்தில் பொது வீதிகளில் தீண்டப்படாதார் நடக்கக் கூடாது. ஏனெனில், தீண்டாதாரின் நிழல் பட்டால் இந்துக்களுக்குத் தீட்டு ஏற்பட்டு விடுமாம். தவறுதலாக இந்துக்கள் தீண்டி, தீட்டாகாமலிருக்கும் பொருட்டுத் தீண்டாதார் கழுத்திலோ மணிக்கட்டிலோ ஒரு கருப்புக் கயிற்றைக் கட்டிக் கொள்ள வேண்டுமென்று பேஷ்வாக்கள் கட்டளையிட்டிருந்தார்கள். பேஷ்வாக்களின் தலைநகரமான பூனாவில் பொது வீதிகளில் நடக்கும் தீண்டாதார், தாம் நடக்கும் போது எழும்பும் துகளினால் இந்துக்களுக்குத் தீட்டு ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு இடுப்பில் பின்புறமாக ஒரு விளக்குமாற்றைக் கட்டித் தொங்க விட்டிருக்க வேண்டுமென்று ஒரு ஏற்பாடு அமலில் இருந்து வந்தது. அவர்கள் நடக்கும் போது எழும்பும் துகளை அந்த விளக்குமாறு பின்புறமிருந்து பெருக்கிக் கொண்டே செல்லுமாம். தீண்டாதார் தெருவில் துப்பி இந்துக்களுக்குத் தீட்டு ஏற்படாமலிருக்குமாறு தீண்டாதார் கழுத்தில் ஒரு மண் கலயத்தைக் கட்டிக் கொண்டு நடக்க வேண்டுமென்றும் பூனாவில் ஒரு சட்டம் வகுக்கப்பட்டிருந்தது. இவை பழங்கதையானாலும் சில சமீபகால

விஷயங்களையும் எடுத்துக் கூறுகிறேன். மத்திய இந்தியாவிலுள்ள 'பலே' என்ற தீண்டாதாருக்கு இந்துக்கள் செய்து வரும் கொடுமை சகிக்க முடியாததாயிருந்தது. 1928 ஜனவரி 4ஆம் தேதி வெளிவந்த 'டைம்ஸ் ஆஃப் இந்திய'ா பத்திரிகையில் அதைப் பற்றிய ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. இந்தூர் சமஸ்தானம் இந்தூர் ஜில்லாவிலுள்ள கனாரிய, பிச்சோலி – ஹாப்ஸி, பிச்சோலி – மர்டானா முதலிய கிராமங்களிலும் மற்றும் 15 கிராமங்களிலும் உள்ள இந்துக்கள் அதாவது கலோடர், ராஜபுத்திரர், பார்ப்பனர் முதலியோர் ஒன்று சேர்ந்து 'பலே'ஜாதியார் கிராமங்களில் இருக்க வேண்டுமென்றால், கீழ்வரும் விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று தெரிவித்தார்களாம். விதிகள் ஆவன:

1. "பலே"ஜாதியார் சரிகைத் துப்பட்டாக்கள் அணியக் கூடாது.
2. சாயம் போட்ட அல்லது அழகான வேட்டி கட்டக் கூடாது.
3. கிராமத்தில் யாராவது இறந்தால் இறந்தவர்களுடைய பந்துக்களுக்கு – அவர்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் சரி, பலே ஜாதியார் இழவோலை கொண்டு செல்ல வேண்டும்.
4. இந்துக்களின் கலியாண காலங்களில் ஊர்வலத்தின் முன்னும் கலியாணத்தின்போதும் மேளம் கொட்டி நடத்த வேண்டும்.
5. "பலே"ஜாதிப் பெண்கள் தங்கம், வெள்ளி நகைகள் அணியக் கூடாது. அழகான சட்டைகளோ, ரவிக்கையோ போடக் கூடாது.
6. இந்துப் பெண்களின் பிரசவக் காலங்களில் "பலே"ஜாதிப் பெண்கள் தேவையான ஊழியங்கள் செய்ய வேண்டும்.
7. பிரதிபலன் கேளாமல் பலே ஜாதியார் ஊழியம் செய்ய வேண்டும். இந்துக்கள் மனமுவந்து கொடுப்பதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
8. பலே ஜாதியார் இந்த நிபந்தனைகளை ஒப்புக் கொள்ளாவிட்டால், கிராமங்களை விட்டு வெளியேறிவிட வேண்டும்.

பலேஜாதியார் இந்த நிபந்தனைகளை ஒப்புக் கொள்ளவில்லை. எனவே, இந்துக்கள் அவர்களை இம்சிக்கத் தொடங்கினார்கள். கிணறுகளிலிருந்து பலேஜாதியார் தண்ணீர் எடுக்கக் கூடாதென்று தடுத்தனர். பலே ஜாதியாரின் கால்நடைகள் மேயவொட்டாமல் தடையேற்படுத்தினர். இந்துக்களின் பூமியில் பலேஜாதியார் நடக்கக் கூடாதென்று ஏற்பாடு செய்தனர்.

பலேஜாதியாரின் வயல்களைச் சுற்றி இந்துக்களின் வயல்கள் இருந்தால் பலேஜாதியார் தம் சொந்த வயல்களுக்குக் கூடச் செல்லக் கூடாது. பலேக்களின் வயல்களில் இந்துக்கள் தமது கால்நடைகளை மேயவிட்டார்கள். இந்தக் கொடுமைகளைப் பற்றி பலேஜாதியார் சர்க்காருக்கு மனுச் செய்தார்கள். பரிகாரம் ஏற்படவில்லை. மாறாக இந்துக்களின் இம்சையே அதிகரித்து வந்தது. நூற்றுக்கணக்கான பலேஜாதிக் குடும்பங்கள் குழந்தை குட்டிகளுடன் வாழையடி வாழையாகத் தம் முன்னோர் வாழ்ந்த கிராமங்களிலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. எனவே, தார், தேவாஸ், பக்லி, போப்பால், குவாலியர் முதலிய சமஸ்தானங்களுக்குச் சென்று குடியேறினர். புதுக் குடியிருப்பில் அவர்களுக்கு ஏற்பட்ட கதியைப் பற்றிக் கூறுவது எனது தற்கால நோக்கமல்ல. கூர்ஜரத்திலுள்ள கவிதா கிராமத்தில் சென்ற வருடத்தில் நடைபெற்ற சம்பவத்தைக் கவனிப்போம். சர்க்கார் நடத்தி வரும் கிராமப் பள்ளிக் கூடத்துக்குத் தீண்டாதார் தம் சிறுவர் சிறுமிகளை அனுப்பக் கூடாதென்று கவிதா இந்துக்கள் கட்டளையிட்டார்கள். தமக்கு இயல்பாகவே இருந்து வந்த சிவில் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளக் கவிதா கிராமத்தார் முயன்றதனால் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை உலகம் அறிந்துதானிருக்கிறது.

எனவே, அவைகளை விளக்கிக் கூற முடியவில்லை. அகமதாபாத் ஜில்லாவிலுள்ள சானு கிராமத்தில் வேறொரு சம்பவம் நடந்தது. **1935 –** நவம்பர் மாதத்தில் பல தீண்டாஜாதிப் பெண்கள் பித்தளைக் குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு போனார்கள். இதனால் அப்பெண்கள் இந்துக்களை அவமதித்து விட்டதாக எண்ணி, சில இந்துக்கள் சேர்ந்து அப்பெண்களை அடித்து இம்சித்தார்கள். ஜெய்ப்பூர் சமஸ்தானத்திலுள்ள சக்வாரக் கிராமத்திலிருந்து தமதுஜாதியாருக்கு ஒரு விருந்தளித்தார்கள். அவ்விருந்தில் நெய் பரிமாறப்பட்டதாம். இதை இந்துக்கள் அறிந்தார்கள். நெய் உயர்ந்தஜாதியாருக்கு மட்டும் உரிமையுள்ள உணவுப் பொருளாம். தீண்டாதார் நெய் பரிமாறியதனால் இந்துக்கள் அந்தஸ்துக்கு இழுக்கு ஏற்பட்டு விட்டதாம். ஆகவே, இந்துக்கள் திரண்டு சென்று விருந்து உண்டு கொண்டிருந்த தீண்டாதாரை நையப் புடைத்து வெருட்டி யோட்டினார்களாம். இதனால் நெய் வாங்கச் சக்தியுடையவனும் கூட நெய் சாப்பிடக் கூடாதென்று ஏற்படுகிறதல்லவா? **1936 –** ஏப்ரல் **1**ஆம் தேதி வாக்கில் இந்த அநியாயம் நடைபெற்றதாம்.

இனிச் சமூகச் சீர்திருத்தம் அவசியம் என்பதற்குள்ள காரணங்களை விளக்கிக் கூறுகிறேன். அவ்வாறு விளக்குகையில் தோழர் பானர்ஜி கூறிய வாதங்களைச் சாத்தியமானவரை பின்பற்றி இந்தியர்களில் ஒரு பகுதியாரைத் தீண்டாதவராக மதித்து ஒதுக்கித் தள்ளிப் பொதுப் பள்ளிக்கூடங்களில் படிக்க அனுமதியளிக்காத நிலையில், அரசியல் உரிமை பெற உங்களுக்கு யோக்கியதையுண்டா? என அரசியல் இந்துக்களைக் கேட்கிறேன். பொதுக் கிணறுகளை உபயோகிக்க அனுமதியளிக்காவிட்டாலும், அரசியல் உரிமை பெற உங்களுக்கு யோக்கியதை உண்டா? எனக் கேட்கிறேன். அவர்கள் விரும்பும் நகையணிய நீங்கள் சம்மதிக்காவிட்டாலும் அரசியல் உரிமை பெற உங்களுக்கு யோக்கியதையுண்டா? எனக் கேட்கிறேன். அவர்கள் விரும்பும் உணவை உண்ண நீங்கள் அனுமதியளிக்கா விட்டாலும், அரசியல் உரிமை பெற உங்களுக்கு யோக்கியதையுண்டா? எனக் கேட்க முடியும். எனினும் நான் கேட்ட கேள்விகளே போதும். இக்கேள்விகளுக்கு உண்டு என விடையளிக்க எந்தப் புத்திசாலிக்கும் தைரியமிராதென்று எனக்குத் தெரியும். ஒரு தேசத்தை ஆள வேறொரு தேசத்துக்கு யோக்கியதை இல்லையென்ற ‘‘மில்’’லின் அபிப்பிராயத்தை ஆதாரமாக எடுத்துக் காட்டும் ஒவ்வொரு காங்கிரசுவாதியும், ஒரு வகுப்பாரை ஆள மற்றொரு வகுப்பாருக்கு யோக்கியதை யில்லை என்பதை ஒப்புக் கொண்டுதானாக வேண்டும்.

அப்படியான சமூகச் சீர்திருத்தக் கட்சியார் தோல்வியடையக் காரணம் என்ன? அந்தக் காரணத்தைச் சரியாக உணர வேண்டுமானால் அக்காலத்திய சீர்திருத்தக்காரர்கள் எத்தகைய சீர்திருத்தங்கள் பெறக் கிளர்ச்சி செய்தார்கள் என்பதை ஆராய வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில், சமூகச் சீர்திருத்தத்தை இந்துக் குடும்பச் சீர்திருத்தமென்றும் இந்துச் சமூக அமைப்புச் சீர்திருத்தம் அல்லது புனருத்தாரணம் என்றும் இரண்டு பிரிவாகப் பிரிக்கத் தேவையுண்டாகிறது. விதவை விவாகம், பாலிய விவாகம் முதலியன குடும்பச் சீர்திருத்தத்தைச் சேர்ந்தவை.ஜாதி வித்தியாசத்தை ஒழிப்பது இந்துச் சமூக அமைப்பைப் புனருத்தாரணம் செய்வதைச் சேர்ந்தது. சமூகச் சீர்திருத்தக் கட்சியார் இந்துக் குடும்பச் சீர்திருத்தத்திலே முக்கியமாக கவனம் செலுத்தி வந்தார்கள். அந்தக் கட்சியில் படிப்பாளிகளான உயர்ந்தஜாதி இந்துக்களே அதிகமாக இருந்தார்கள்.ஜாதியை ஒழிக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய வேண்டிய தேவையை அவர்கள் உணரவில்லை. அல்லது அவ்வாறு கிளர்ச்சி செய்ய அவர்கள் மனவுறுதியுடையவர்களாக இருக்கவில்லை. எனவே கட்டாய

வைதவ்யம், பாலிய விவாகம் முதலிய தீமைகளை ஒழிக்கவே அவர்கள் முயற்சி செய்தார்கள். அந்தத் தீமைகள் அவர்கள் சமூகத்தில் இருந்து வந்தன. அத்தீமைகளின் பலனை அவர்களில் பலர் அனுபவித்தும் இருந்தார்கள். இந்துச் சமூகத்தைத் திருத்தியமைக்க அவர்கள் முயலவில்லை. அவர்கள் நடத்திய சீர்திருத்தப் போர் குடும்பச் சீர்திருத்தத்தை மட்டும் பாதிக்கக் கூடியதாக இருந்தது;ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கும் சீர்திருத்தத்தைப் பாதிக்கவில்லை. அந்தப் பிரச்சினையைச் சீர்திருத்தக்காரர்கள் தமது திட்டத்தில் சேர்க்கவுமில்லை. அதனாலேயே சமூகச் சீர்திருத்தக் கட்சியார் தோல்வியடைந்தனர்.

இதனால் சமூகச் சீர்திருத்தத்தைவிட அரசியல் சீர்திருத்தமே முக்கியமானதென்றோ, அரசியல் சீர்திருத்தமே முதலில் வேண்டியது என்றோ முடிவேற்பட்டு விட்டதாக எவரும் எண்ணக் கூடாது. அதனால் சமூகச் சீர்திருத்தக் கட்சியார் தோல்வியடைந்த காரணந்தான் வெளியாயிற்று. மற்றும் அரசியல் சீர்திருத்தக்காரர் பெற்ற வெற்றி மிகவும் அற்பமானதென்றும், சமூகச் சீர்திருத்தம் என்பது குடும்பச் சீர்திருத்தமாக மதிக்கப்படும்போதுதான், அரசியல் சீர்திருத்தத்துக்கு முன் சமூகச் சீர்திருத்தம் தேவையில்லையென்ற அபிப்பிராயத்துக்கும் மதிப்புண்டு என்பதும் விளங்கி விட்டது. இந்திய சமூக அமைப்பைத் திருத்தி அமைக்க வேண்டுமானால், அரசியல் சீர்திருத்தத்துக்கு முன் சமூகச் சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்ற எனது கொள்கையை ஒருவராலும் மறுக்க முடியாது. அரசியல் அமைப்பை உருவகப்படுத்தும் தலைவர்கள் சமூகப் பிரச்சினைகளை முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென காரல்மார்க்சின் நண்பரும், சக உழைப்பாளியுமான பெர்டினண்டு லாசேல் கூடக் கூறியிருக்கிறார். 1862–இல் ஒரு பிரஷ்யப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் பெர்டினண்டு லாசேல் குறிப்பிட்டதாவது:

ஆரம்பத்தில் அரசியல் அமைப்புப் பிரச்சினைகள் உரிமைகளைப் பற்றிய பிரச்சினைகளாக இருக்கவில்லை; சக்தியைப் பற்றிய பிரச்சினைகளாகவே இருக்கின்றன. தேச மக்களின் உண்மையான சக்தியே அரசியல் அமைப்புகளின் ஆணிவேராக இருக்கிறது. எனவே, ஒரு சமூகத்தின் உண்மையான நிலைமையையும், சக்தியையும் உணர்த்தக் கூடிய அரசியல் அமைப்புக்குத்தான் மெய்யான மதிப்புண்டு.

இந்த உண்மையை விளக்க நாம் லாசேல் அபிப்பிராயத்தைத் தேடிப் போகத் தேவையில்லை. இந்தியாவிலேயே அதற்கு ஆதாரம் இருந்து

வருகிறது. ஒவ்வொரு சமூகத்திற்கும் விகிதாசாரப்படி அரசியல் அதிகாரம் வழங்கும் வகுப்புத் தீர்ப்பின் தத்துவம் என்ன? அரசியல் அமைப்பு, சமூக அமைப்பைப் பொறுத்திருக்க வேண்டும் என்பதுதான் அதன் தத்துவம் என்பதே எனது அபிப்பிராயம். அரசியல் பிரச்சினைகளுக்கும், சமூகப் பிரச்சினைகளுக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லையெனக் கூறிய இந்திய அரசியல்வாதிகள் அரசியல் அமைப்பு வகுக்கும்போது, சமூகப் பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளுமாறு வகுப்புத் தீர்ப்புத் தூண்டியிருக்கிறது. இந்திய அரசியல்வாதிகள் சமூகச் சீர்திருத்தத்தை அலட்சியம் செய்த பாப பரிகாரத்துக்காகவே வகுப்புத் தீர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அது சமூகச் சீர்திருத்தக் கட்சிக்கு ஒரு பெரிய வெற்றியாகும். அரசியல் சீர்திருத்தவாதிகளுக்கும் சமூகச் சீர்திருத்தவாதிகளுக்கும் நடைபெற்ற போரில் சமூகச் சீர்திருத்தவாதிகள் தோல்வியடைந்த போதிலும் அவர்கள் அபிப்பிராயமே சரியென்பதை வகுப்புத் தீர்ப்பு வற்புறுத்தி விட்டது. இதை அநேகர் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்பதை யானறிவேன்.

பலர் வகுப்புத் தீர்ப்பை எதிர்த்து வருகிறார்கள். வகுப்புத் தீர்ப்பு இயற்கைக்கு முரணானதென்றும் சிறுபான்மைச் சமூகங்களும் அதிகார வர்க்கத்தினரும் செய்த சதியாலோசனையின் பயனாகவே வகுப்புத் தீர்ப்பு ஏற்பட்டது என்றுங்கூடச் சொல்லப்படுகிறது. எனது வாதத்தை ருசுப்படுத்த வகுப்புத் தீர்ப்பை ஆதாரமாகக் காட்டுவது பொருத்தமல்லவென்று கூறப்படுமானால், வகுப்புத் தீர்ப்பை ஆதரிக்க நான் விரும்பவில்லை. ஆனால், அயர்லாந்து நிலைமையைக் கவனிப்போம். அயர்லாந்து சுதந்திரப் போரினால் ஏற்பட்ட பலன் என்ன? அல்ஸ்டர் பிரதிநிதிகளுக்கும் தென் அயர்லாந்து பிரதிநிதியான ரெட்மாண்டுக்கும் நடைபெற்ற சமசரப் பேச்சின்போது, அல்ஸ்டர் மக்களையும் சுதந்திரப் போரில் ஈடுபடுத்தும் பொருட்டு "நீங்கள் விரும்பும் அரசில் பாதுகாப்புகளையெல்லாம் நாங்கள் வழங்குகிறோம். எங்கள் கட்சியில் சேர்ந்து விடுங்கள்" என்று ரெட்மாண்டு கூறினார். இதற்கு அல்ஸ்டர் பிரதிநிதிகள் என்ன விடையளித்தார்கள் தெரியுமா? "உங்கள் பாதுகாப்புகள் நாசமாய்ப் போகட்டும். எந்த நிபந்தனையின் பேரிலும் நீங்கள் எங்களை ஆள நாங்கள் விரும்பவில்லை" என்றே அல்ஸ்டர் பிரநிதிகள் விடையளித்தார்கள். அல்ஸ்டர் பிரதிநிதிகளைப் போல, இந்திய மைனாரிட்டி சமூகங்களும் பிடிவாதம் செய்திருந்தால் மெசாரிட்டி சமூ கங்களின் எண்ணங்களுக்கு என்ன கதி ஏற்பட்டிருக்கும்? என்பதை இந்திய

மைனாரிட்டிகளைக் குறை கூறுவோர் கவனிக்க வேண்டும்.

அல்ஸ்டர் பிரதிநிதிகள் போக்கைக் கவனிக்கையில், இந்திய மைனாரிட்டிகள் சில பாதுகாப்புகளுடன் மெசாரிட்டி ஆட்சியை ஒப்புக் கொண்டது பெரிய காரியமல்லவா? இது முக்கியமான விஷயமல்ல. அல்ஸ்டர் பிரதிநிதிகள் அவ்வாறு பிடிவாதம் செய்யக் காரணம் என்ன? என்பதையே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். உண்மை என்னவெனில், அல்ஸ்டர் கட்சியாரும் தென் அயர்லாந்து கட்சியாரும் முடிவு செய்ய வேண்டியதாக ஏற்பட்ட கத்தோலிக்க புராடஸ்டண்டு பிரச்சினை உண்மையில் ஒருஜாதிப் பிரச்சினையே. அயர்லாந்து சுயராஜ்யக் கட்சியார் தயார் செய்திருந்த அரசியல் அமைப்பு, மைனாரிட்டிகளை அடிமைப்படுத்தக்கூடிய அமைப்பு என்பதை அல்ஸ்டர் பிரதிநிதிகள் அளித்த விடையினால் உணர்ந்து கொள்ளலாம். அதாவது அயர்லாந்து கத்தோலிக்கர்களுக்கும் புராடஸ்டண்டுகளுக்கும் ஏற்பட்ட சமூகத் தகராறு திருப்திகரமாக முடிவு செய்யப்படாததனாலேயே அரசியல் பிரச்சினைகளுக்கு முடிவு ஏற்படவில்லை. இதையும் சிலர் எதிர்க்கக் கூடும். அயர்லாந்திலும் ஏகாதிபத்தியவாதிகள் சூழ்ச்சி செய்தார்கள் எனக் கூறக்கூடும். எனினும் நான் சோர்வடையவில்லை.

மேலும் ஏராளமான ஆதாரங்களை என்னால் காட்ட முடியும். ரோமர் சரித்திரத்திலிருந்து ஆதாரம் காட்டுகிறோம். அங்கே எவரும் சூழ்ச்சி செய்ததாகக் கூற முடியாது. ரோம் ரிபப்ளிக் அரசியல் அமைப்பில் வகுப்புத் தீர்ப்புச் சாயல் ஏராளமாக இருப்பதை ரோம் சரித்திரம் படிப்போர் உணரக்கூடும். முடியாட்சி ஒழிக்கப்பட்ட பிறகு, தேச நிருவாக அதிகாரத்தை கான்சல்களும், பாண்டிபெக்ஸ் மாக்கிடீஸ்களும் பங்குபோட்டுக் கொண்டார்கள். அரசரின் அந்தரங்க அதிகாரங்கள் எல்லாம் கான்சல்களுக்கு வழங்கப்பட்டன. மதசம்பந்தமான அதிகாரங்கள் மற்றவர்களுக்கு வழங்கப்பட்டன. ரிபப்ளிக்கன் அரசாங்கத்தை நடத்தும் இரண்டு கான்சல்களில் ஒருவர் பிரபு குடும்பத்தைச் சேர்ந்தவராயிருக்க வேண்டுமென்றும், மற்றவர் சாமானிய மக்களைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமென்றும் விதியேற்பட்டிருந்தது. மற்றும் மதபோதகர்களில் பாதிப் பேர் பிரபு குடும்பத்தில் பிறந்தவர்களாயும் பாதிப் பேர் சாமானிய மக்களைச் சேர்ந்தவராயும் இருக்க வேண்டுமென்ற வேறொரு விதியும் வகுக்கப்பட்டிருந்தது. ரிபப்ளிகன் அரசியலமைப்பில், நமது வகுப்புத் தீர்ப்புக்கு ஒப்பான இந்த விதிகள் அடங்கியிருக்கக் காரணமென்ன? ஏனெனில் பாட்ரிஸ்யர் என்னும் பிரபு குடும்பத்தாரும், பினீபியன் என்னும்

சாமானிய மக்களும் இரண்டு தனிப்பட்டஜாதியாராயிருந்து வந்தார்கள். எனவே அவர்கள் இரு சாராருக்கும் சமப் பிரதிநிதித்துவம் அளிக்கும் பொருட்டு அரசியல் அமைப்பில் அவ்வாறு விதிகள் ஏற்படுத்தப்பட்டன. எங்கு பார்த்தாலும் சரி – எல்லா அரசியல் அமைப்புகளிலும் அந்தந்த நாட்டுச் சமூக நிலைமைக்குத் தக்கபடி விதிகள் ஏற்படுத்தப் பட்டிருப்பதை அரசியல்வாதிகள் கண்டுகொள்ளலாம்.

அரசியல் அமைப்புகளுக்கும், சமய சமூகப் பிரச்சினைகளுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்பதை நிரூபிக்க நான் எடுத்துக்காட்டிய உதாரணங்கள், சில குறிப்பிட்ட தேசங்களைப் பொறுத்தவையென்றும், எல்லா தேசங்களுக்கும் பொதுவானவை அல்லவென்றும் ஒருக்கால் சிலர் வாதிக்கக்கூடும். ஒருக்கால் அப்படி இருக்கலாம். எனினும் அவை இரண்டுக்குமுள்ள சம்பந்தத்துக்கு ஒரு வரையறையுண்டு எனக்கூற முடியாது. மாறாக அரசியல் புரட்சிகளுக்கு முன் சமய சமூகப் புரட்சிகள் ஏற்பட்டிருப்பதற்குச் சரித்திரத்திலே ஏராளமான திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன. லூதர் தோற்றுவித்த மதச் சீர்திருத்த இயக்கமே அய்ரோப்பிய தேசத்தாரின் அரசியல் விடுதலைக்குத் தூண்டுகோலாயிருந்தது. இங்கிலாந்தில் பியூரிட்டன் இயக்கம் அரசியல் சுதந்திரத்துக்கு அடிப்படையாய் இருந்தது. புது உலக (அமெரிக்க) ஸ்தாபனத்துக்கும் பியூரிட்டன் இயக்கமே காரணம். அமெரிக்க விடுதலைப் போர் வெற்றிக்கும் பியூரிட்டன் இயக்கமே காரணமாயிருந்தது. பியூரிட்டன் இயக்கம் மதச்சார்பான இயக்கமே. முஸ்லிம் சாம்ராஜ்ய ஸ்தாபனத்துக்கும் மதமே காரணம். அராபியர் அரசியல் அதிகாரம் பெறுமுன் முகம்மது நபி தோற்றுவித்த மதப்புரட்சியில் ஈடுபட்டுப் பழக்கம் பெற்றிருந்தார்கள். இந்திய சரித்திரமும் என் அபிப்பிராயத்தை வலியுறுத்தவே செய்கிறது. சந்திரகுப்தன் நடத்திய அரசியல் புரட்சிக்கு முன், புத்தர் சமய சமூகப்புரட்சி நடத்தி வெற்றி பெற்றிருந்தார். சிவாஜி நடத்திய அரசியல் புரட்சிக்கு முன் மகாராஷ்டிர ஞானிகள் சமய சமூகச் சீர்திருத்தப் போர் நடத்தியிருந்தார்கள். சீக்கியர் நடத்திய அரசியல் புரட்சிக்குமுன் குருநானக்கின் சமய சமூகப் புரட்சி நடைபெற்றிருந்தது. எனவே, மேற்கொண்டும் உதாரணங்கள் காட்டத் தேவையே இல்லை. மக்கள் அரசியல் விடுதலை பெறுமுன் அவர்களுடைய மனமும் விடுதலை பெற்றுத்தான் ஆகவேண்டும்.

## 3

இனி, அபேதவாதிகளைக் கவனிப்போம். சமூக ஏற்பாட்டினால் எழும் பிரச்சினைகளை அபேதவாதிகளுக்கு அலட்சியம் செய்ய முடியுமா? இந்திய அபேதவாதிகள் அய்ரோப்பிய அபேதவாதிகளைப் போல் பொருளாதாரச் சீர்கேடே இந்தியர் வீழ்ச்சிக்குக் காரணமெனக் கூறுகிறார்கள். மனிதன் பொருளாதாரச் சார்பான ஒரு பிராணி என்றும் அவனது முயற்சிகளும், எண்ணங்களும் பொருளையே குறித்து நிற்கின்றனவென்றும், சொத்தே எல்லா அதிகாரங்களுக்கும், சக்திக்கும் ஏதுவாயிருக்கிறதென்றும் அவர்கள் வாதிக்கிறார்கள். ஆகவே, அரசியல் சமூகச் சீர்திருத்தங்கள் அவ்வளவு முக்கிய மல்லவென்றும், சொத்துக்களைத் தேச மக்களுக்கெல்லாம் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்துப் பொருளாதாரச் சீர்திருத்தம் செய்வதே முக்கியமானதென்றும், மற்றச் சீர்திருத்தங்கள் எல்லாம் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்குப் பிற்பட்டவைகளே என்றும் அவர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால், பொருள் மட்டும் மக்களின் லட்சியமல்லவென்றும், அவர்களது முயற்சிகளுக் கெல்லாம் பொருள் மட்டும் காரணமல்லவென்றும் சிலர் கூறலாம். பொருளாதாரச் சீர்திருத்தங்களைவிட ஏனைய சீர்திருத்தங்களை மிக முக்கியமென்று மற்றும் சிலர் கூறலாம். பொருளாதாரச் சக்தியே முக்கியமான சக்தி என்று சமூகச் சீர்திருத்த ஞானமுடைய எவனும் கூற முன்வர மாட்டான்.

சமூக வாழ்வில் ஒருவன் பெற்றிருக்கும் ஸ்தானத்தினாலும் அவனுக்கு சக்தி ஏற்படுகிறது. இதற்கு மகாத்மாக்கள் சாமானிய மக்களை ஆட்டி வைப்பதே தக்க சான்றாகும். இந்தியாவிலே கோடீசுவரர்கள் சாதுக்களுக்கும், பக்கிரிகளுக்கும் அடிபணிந்து நிற்கக் காரணம் என்ன? ஏழை எளியோர் பாத்திர பண்டங்களை விற்றுக் காசிக்கும், மெக்காவுக்கும் யாத்திரை செய்யக் காரணமென்ன? இந்தியாவில் மதமே அதிகாரத்துக்கும் ஆஸ்பதமாயிருக்கிறது. இதற்கு இந்தியச் சரித்திரமே அத்தாட்சி. இந்தியாவிலே மாஜிஸ்டிரேட்டைவிட, புரோகிதனே அதிக சக்தியுடைய வனாயிருக்கிறான். வேலை நிறுத்தங்களும், தேர்தல்களும்கூடச் சில சமயங்களில் மதத்தை ஆதாரமாகக் கொண்டே நடைபெறுகின்றன. மதம்

மக்களை அடக்கியாள்வதற்கு ரோம் சரித்திரத்திலுள்ள பிளீபியன்கள் (பாமர மக்கள்) கதையே போதுமானது. ரோம் ரிபப்ளிக் ஆட்சியில் தமக்கும் கண்ணியமான பங்கு வேண்டுமென்று பிளீபியன்கள் போராடினார்கள். கடைசியில் நிருவாக சபையில் ஒரு பிளீபியன் கான்சல் பிரதிநிதி இருக்குமாறு ரிபப்ளிக்கன் அரசியல் அமைப்பில் ஒரு விதி ஏற்படுத்தப்பட்டது. அந்த கான்சலை பிளீபியன்களே தேர்ந்தெடுக்கிறார்கள். பாட்ரிசியன் கான்சல்கள் (பிரபு குடும்பப் பிரதிநிதிகள்) பிளீபியன்களுக்கு விரோதமாக நடப்பதாய் உணர்ந்ததனாலேயே, பிளீபியன் கான்சல் வேண்டுமென்று பிளீபியன்கள் போராடினார்கள். இதனால் அவர்களுக்கு வெளிப்பார்வைக்குப் பெரிய நன்மை ஏற்பட்டதுபோல தோன்றிற்று. ஏனெனில் ரோம் ரிபப்ளிக் ஆட்சியில் ஒரு கான்சல் செய்யும் சட்டத்தை மற்றொரு கான்சலுக்கு ரத்து செய்ய முடியும். ஆனால், உண்மையில் அவர்களுக்கு ஏதாவது நன்மையேற்பட்டதா? இந்தக் கேள்விக்கு இல்லையென்றுதான் விடையளிக்க வேண்டியதாக இருக்கிறது. பிரபு குடும்பப் பிரதிநிதியை மீறிக் காரியங்கள் நடத்தச் சக்தியுடைய ஒரு பிளீபியன் பிரதிநிதியை பிளீபியன்களால் தேர்ந்தெடுக்க முடியவில்லை. பிளீபியன் கான்சலை பிளீபியன்கள் அடங்கிய தனித் தொகுதி மூலமே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்ததனால், சாதாரணமாக ஒரு சக்தி வாய்ந்த பிளிபீயன் கான்சலே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எனவே, ஒரு உறுதியுடைய பிளீபியன் கான்சலைத் தேர்ந்தெடுக்க முடியாது போனதற்குக் காரணமென்ன? இக்கேள்விக்கு விடையளிக்க முயலும்போதுதான் மதத்தின் சக்தி வெளியாகிறது.

தேவிக்குப் பிரியமானவளென்று பூசாரி சொல்லும் ஒருவனையே அதிகாரியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒரு அய்தீகம். ராமர்களுக்குள் வழங்கி வந்தது. ஆலயப் பூசாரிகள் எல்லாம் பாட்ரிசிய மரபைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். எனவே, பிளீபியன் உரிமையைக் காப்பாற்றக் கூடிய ஒரு தைரியசாலியை – அல்லது இந்தியாவில் கூறப்படுவது போல் ஒரு வகுப்புவாதியை... பிளீபியன்கள் தங்கள் கான்சலாகத் தேர்ந்தெடுத்தால் அவன் தேவிக்குப் பிரியமானவன் அல்லவென்று பூசாரிகள் தீர்ப்புக் கூறிவிடுவார்கள்.

இவ்வண்ணம் பிளீபியன்கள் பாட்ரிசியன்களால் ஏமாற்றப்பட்டு வந்தார்கள். தேர்தல் வெற்றி மட்டும் போதாதென்றும், தேர்ந்தெடுக்கப்பட்டவன் உத்தியோகம் நடத்த லாயக்குடையவன் என்று தேவிமாரும் ஒப்புக்

கொள்ள வேண்டுமென்று பாட்ரிசியன்களைப் போல் பிளிபீயன்களும் நம்பியதனாலேயே பிளீபியன்கள் ஏமாற்றப்பட்டு வந்தனர். தேர்தல் போதுமானதென்றும் தேவியின் சம்மதம் தேவையில்லையென்றும் பிளீபியன்கள் கூறியிருந்தால் அவர்கள் பெற்றிருந்த அரசியல் உரிமைகள் பூரணப் பலனை அவர்கள் அனுபவித்திருக்கக்கூடும். ஆனால், அவர்கள் அவ்வாறு கூறவில்லை. தமக்குப் பிடித்தமான ஒருவனைத் தேர்ந்தெடுக்க அவர்கள் சம்மதித்தார்கள். தேவிக்குப் பிடித்தமானவர்களாகவே இருந்தனர்.

மதத்தை விடுவதைவிட, வருந்திப் பெற்ற அரசியல் உரிமையை இழப்பதே மேலென அவர்கள் எண்ணினார்கள். பொருளினால் வரக்கூடிய அதிகாரத்தைவிட மேலில்லாவிட்டாலும் அதற்குச் சமமான அதிகாரங்களாவது மதத்தினால் வரக்கூடுமென்பது இதனால் விளங்கவில்லையா? தற்பொழுது அய்ரோப்பிய சமூக வாழ்வில் சொத்தே அதிகாரத்துக்கு ஆஸ்பதமாயிருப் பதனால் இந்தியாவிலும் அதே நிலைமைதான் இருந்து வருகிறதென்றும் பண்டு அய்ரோப்பாவிலும் அதே நிலைமைதான் இருந்து வந்ததென்றும் அபேதவாதிகள் தப்பாக எண்ணிக் கொள்கிறார்கள்.

மதம், சமூக அந்தஸ்து, சொத்து முதலியன சக்திக்கும் அதிகாரத்துக்கும் ஆஸ்பதமாக இருக்கின்றன. இந்த மூன்றில் ஏதேனும் ஒன்றில் ஒருவனை மற்றொருவன் அடிமைப்படுத்த முடியும். ஒரு காலத்தில் அவற்றுள் ஏதேனும் ஒன்று ஆதிக்கம் செலுத்துகிறது. மற்றொரு காலத்தில் வேறொன்று ஆதிக்கம் செலுத்துகிறது. வித்தியாசம் அவ்வளவே. சுதந்திரம் லட்சியமாக இருக்கும் பட்சத்தில் – சுதந்திரம் என்பது ஒருவன் மற்றொருவன் மீது ஆதிக்கம் செலுத்துவதை ஒழிப்பது எனில் – பொருளாதாரச் சீர்திருத்தமே முக்கியமாக வேண்டப்படுவதென வற்புறுத்தவே கூடாது. ஒரு சமூகத்தில் – ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதிகாரத்துக்கும் ஆதிக்கத்திற்கும் சமயமும் சமுதாய அமைப்பும் ஊற்றுக்கண்ணாயிருந்தால் சமய சமூகச் சீர்திருத்தம் கட்டாயம் செய்துதான் ஆக வேண்டும்.

இந்திய அபேதவாதிகள் வற்புறுத்தும் பொருளாதாரச் சுதந்திரம் இவ்வண்ணம் ஆட்சேபணைக்கு இடமானதாகவே இருக்கிறது. சர்வ மக்களுக்கும் சமமாகச் சொத்தைப் பங்கு போடுவதே முக்கியமாக வேண்டப்படும் சீர்த்திருத்தம் என்றும், அந்தச் சீர்திருத்தமே ஏனைய சீர்திருத்தங்களுக்கு முன் செய்யப்பட வேண்டும் என்றும் அபேதவாதிகள்

கூறுவதற்குப் பொருளாதார விஷயங்களைப் பற்றி அவர்கள் வற்புறுத்தும் சரித்திர சம்பந்தமான வியாக்கியானம் தேவையில்லையென்று நான் ஒப்புக் கொள்ளுகிறேன். எனினும், அபேதவாதிகளிடம் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதாவது, சமூக அமைப்பைச் சீர்திருத்தாமல் பொருளாதாரச் சீர்திருத்தம் செய்ய முடியுமா? இந்த விஷயத்தைப் பற்றி இந்திய அபேதவாதிகள் சிந்தனை செய்யவில்லையென்றே தோன்றுகிறது. அநியாயமாக அவர்கள் மீது நான் குற்றம் சாட்ட விரும்பவில்லை. ஒரு பிரபல அபேதவாதி என் நண்பர் ஒருவருக்கு சில தினங்களுக்கு முன் ஒரு கடிதம் எழுதினார். அதில் ஒரு பகுதியைக் கீழே தருகிறேன். அது பின் வருமாறு –

“ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரை அடிமைப்படுத்திக் கொடுமைப் படுத்திக் கொண்டிருக்கும் வரை, இந்தியாவிலே ஒரு சுதந்திர சமூகத்தை நிலைநாட்ட முடியுமென்று நான் நம்பவில்லை. எனினும் அபேதவாத லட்சியத்தில் எனக்குப் பூரண நம்பிக்கையிருப்பதனால் பல திறப்பட்ட வகுப்பாருக்குள்ளும் சமத்துவம் ஏற்படுமென்று நான் நம்புகிறேன். எல்லாப் பிரச்சினைகளுக்கும் அபேதவாதமே சரியான முடிவென்று நான் நம்புகிறேன்.”

ஆனால் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அபேதவாதம் அமலுக்கு வரும்போது எல்லாச் சமூகங்களுக்குள்ளும் சமத்துவம் ஏற்படுமென்று நம்பினால் மட்டும் போதுமா? அந்த நம்பிக்கை ஒன்றே போதுமானது என்று கூறுவது அபேதவாதக் கொள்கைகளை நன்குணராதவர்கள் கூற்றாகும். அபேதவாதம் வெகுகாலத்துக்குப் பின் அமலுக்கு வரப்போகிற ஒரு லட்சியமாக இராமல் கிரியாம்சையில் நடத்திக் காட்டக் கூடிய ஒரு திட்டமாக இருக்கும் பட்சத்தில், அபேதவாதி கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் என்னவெனில், அவனுக்கு சமத்துவத்தில் நம்பிக்கை உண்டா? இல்லையா? என்பதல்ல. சமூக ஏற்பாடு காரணமாகவோ, கொள்கை காரணமாகவோ ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரைக் கொடுமைப்படுத்துவதை அவன் ஆதரிக்கிறானா? ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரை மேற்கொண்டு கொடுமைப்படுத்திக் கொண்டிருப்பதைச் சகித்துக் கொண்டு இருப்பானா?

இந்தக் கேள்விகளின் உட்பொருளைச் சகலரும் உணரும் பொருட்டு என் கருத்தைக் கொஞ்சம் விளக்கிக் கூறுகிறேன். ஒரு சமூகப் புரட்சியுண்டாகாமல், அபேதவாதிகள் விரும்பும் பொருளாதாரச் சுதந்திரம்

ஏற்படப் போவதில்லை யென்பது நிச்சயம். புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமானால், ஏழை எளியோர் முன் வந்துதான் ஆக வேண்டும். அத்தகைய ஒரு புரட்சி செய்ய இந்தியப் பாமர மக்கள் ஏனையோருடன் சேருவார்களா? மக்களுக்குள் அத்தகைய ஏகோபித்த ஒற்றுமை ஏற்படத் தூண்டுதலாயிருக்க வேண்டியது எது?

ஏனையோர் தம்மைச் சமத்துவமாகவும், சகோதரப் பாவனையிலும் நீதியாகவும் நடத்துகிறார்கள் என்ற நம்பிக்கையிருந்தால்தான் பாமர மக்கள் மற்றவர்களுடன் சேருவார்கள். புரட்சி வெற்றி பெற்ற பிறகு தம்மைச் சரிநிகர் சமானமாக நடத்துவார்கள் என்றும், பாமர மக்கள் நம்பவில்லையானால் அவர்கள் ஏனையோருடன் சேர்ந்து புரட்சி செய்ய முன்வருவார்களா? புரட்சியைத் தலைமை வகித்து நடத்தும் அபேதவாதி எனக்குச்ஜாதியில் நம்பிக்கையில்லையென்று மட்டும் கூறினால் போதாது. புரட்சியில் ஈடுபடுவோர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் சமத்துவ சகோதர உணர்ச்சி தோன்ற வேண்டும் – நிலைபெற்றிருக்க வேண்டும். ஏழை – பணக்காரன் என்ற பேதத்தைத் தவிர, வேறு பேதங்கள் இல்லையென்று இந்தியப் பாமர மக்கள் உண்மையாகவே நம்புகிறார்கள் என யாராவது கூற முடியுமா?

ஏழை எளியோருக்குள்ளேஜாதி மத வித்தியாசங்கள் இல்லையென்று யாராவது கூற முடியுமா?ஜாதி மத வித்தியாசங்கள் இருந்தால் இந்தியர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து புரட்சி செய்வது சாத்தியமா? இந்தியாவில் ஒரு புரட்சி தோன்றி அபேதவாதிகள் வெற்றி பெற்று அரசியலைக் கைப்பற்றிக் கொண்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த விசேஷ நிலைமை ஏற்பட்ட பிறகு சமூகப் பிரச்சினைகளை அபேதவாதிகளுக்குத் தீர்த்து வைக்க முடியுமா?ஜாதி உயர்வு தாழ்வுப் பிரச்சினையை முடிவு செய்யாமல் ஒரு விநாடி நேரமாவது அபேதவாத அரசியல் நடைபெற முடியாது என்பது உண்மை. வாய்ப்பந்தல் போட்டு வெறும் வார்த்தைகளால் மழுப்பாமல், உண்மையான பொருளாதார சுதந்திரம் ஏற்பட அபேதவாதிகள் அந்தரங்க சுத்தியாக விரும்பினால்,ஜாதி உயர்வு தாழ்வை ஒழிக்கத்தான் வேண்டும். எனவே, சமூகச் சீர்திருத்தம் செய்யாமல் புரட்சி நடத்தவே முடியாது. ஒருக்கால் எதிர்பாராமல் புரட்சி வெற்றி பெற்றாலும் அவனது உண்மையான லட்சியம் கைகூட வேண்டுமானால், சமூகச் சீர்திருத்தம் செய்துதான் ஆக வேண்டும். புரட்சிக்கு முன்ஜாதியை ஒழிக்க அவன் முயலவில்லையானால் புரட்சிக்குப் பின்ஜாதியை ஒழிக்க அவன் கட்டாயப்படுத்தப்படுவது

நிச்சயம். அதாவது, எந்தச் சீர்திருத்தம் செய்ய விரும்பினாலும்ஜாதிப் பேய் முட்டுக்கட்டை போடுவதைக் காணலாம். எனவே, அந்தச்ஜாதிப் பேயை ஒழிக்காமல் அரசியல் சீர்திருத்தமோ பொருளாதாரச் சீர்திருத்தமோ ஏற்படப் போவதேயில்லை.

## 4

சாதியை ஆதரிப்போர் இப்பொழுதும் இருந்து வருவது வருந்தத்தக்கதே. ஆதரிப்போர் தமக்கு அனுகூலமாகப் பல ஆதாரங்கள் காட்டுகிறார்கள்.ஜாதி ஏற்பாடு, தொழிற் பாகுபாடு ஏற்பாடேயன்றி வேறல்லவென்றும், அத்தகைய பாகுபாடு உலகம் முழுதும் அமலில் இருந்து வருகிறதென்றும், எனவேஜாதி ஏற்பாட்டில் குற்றம் எதுவுமில்லையென்றும்ஜாதி அபிமானிகள் கூறுகிறார்கள். ஆனால்,ஜாதி ஏற்பாடு உண்மையில் வெறும் தொழில் பாகுபாடு மட்டுமல்ல. அது தொழிலாளரைப் பாகுபடுத்துவதாகவும் இருக்கிறது. நாகரிக சமூகங்களுக்குத் தொழிற்பாகுபாடு தேவையானதே. ஆனால், எந்த நாகரிக சமுதாயத்திலும் தொழிலாளர் தனித்தனிப் பிரிவினராய்ப் பிரித்து வைக்கப்படவில்லை.

சாதி ஏற்பாடு தொழிலாளரைப் பாகுபடுத்தும் ஏற்பாடாக மட்டும் இருக்கவில்லை; தொழில் பாகுபாட்டுக்கும் தொழிலாளர் பாகுபாட்டுக்கும் நிரம்ப வித்தியாசமுண்டு; தொழிலாளர்களுக்குள்ளே உயர்வு தாழ்வைக் கற்பிக்கும் ஒரு பரம்பரை ஏற்பாடாகும். எந்தத் தேசத்திலும் தொழிலாளர், பரம்பரை முறையில் ஒருவர்மேல் ஒருவராக வகுக்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் அவரவர் விருப்பத்துக்குத் தக்கபடித் தொழில் பாகுபாடு ஏற்படுத்தப்படவில்லை. ஒரு சமூகம் விருத்தியடைய வேண்டுமானால், ஒவ்வொரு தனி நபருக்கும் தனக்கு இஷ்டமான தொழிலைப் பின்பற்றச் சுதந்திரம் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய தொழிலை முன்னாடியே நிர்ணயம் செய்திருப்பதானால்ஜாதி ஏற்பாட்டில் ஒவ்வொரு தனி நபருக்கும் தொழில் வித்தியாசத்தில் சுய நிர்ணய சுதந்திரம் இல்லை.ஜாதியோடு தொழிலும் இணைக்கப்பட்டிருப்பதனாலேயே, சமூக

முன்னேற்றத்துக்குஜாதி பெரும் தடையாக இருந்து வருகிறது.

கைத்தொழில் வளரும் தன்மையுடையது. நிமிஷத்துக்கு நிமிஷம் கைத்தொழில் மாற்றமடைந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஒவ்வொருவருக்கும் தன்தொழிலை மாற்றிக் கொள்ளச் சுதந்திரம் இருக்கவேண்டும். சமய சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி தொழிலை மாற்றிக் கொள்ள ஒருவனுக்குச் சுதந்திரமில்லாவிட்டால் அவன் சுகமாக வாழவே முடியாது. பரம்பரைத் தொழில் அன்றி இதர தொழில் செய்ய இந்துக்களுக்குச்ஜாதி ஏற்பாடு அனுமதியளிக்கவில்லை. ஜாதித் தொழிலின்றிப் புதுத்தொழில் செய்ய முடியாமலும் இந்துக்கள் பட்டினி கிடந்து சாவதற்கும் ஜாதி ஏற்பாடே காரணம். வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் ஜாதியே காரணம். அவனவன் வாசனைக்கேற்ற தொழிலைப் பின்பற்றச் ஜாதி முட்டுக்கட்டையாக இருக்கிறது. பிறப்பினால் ஒருவனது தொழில் முன்னாடியே நிர்ணயம் செய்யப்பட்டு விடுகிறது. விருப்பத்துக்கு மாறான தொழில்களைப் பலர் பின்பற்றுவ தனாலேயே இந்தியாவில் நாளுக்கு நாள் வறுமை வளர்ந்து வருகிறது. அநேக தொழில்களை இந்துக்கள் இழிவாக மதிப்பதனால், அத்தொழில் செய்வோருக்கு அத் தொழிலில் வெறுப்பு ஏற்படுகிறது. எனவே, அது இழிவென எண்ணித் தொழில் செய்யாமல் தப்பித்துக் கொள்ள சதா முயற்சி நடந்து கொண்டு இருக்கிறது. மனம் பொருந்திச் செய்யாத எந்தத் தொழிலாவது விருத்தியடையுமா? எனவே, பொருளாதாரச் சார்பாகப் பார்த்தால்ஜாதி ஏற்பாடு மகா தீமையானதே.

## 5

சாதி ஏற்பாட்டை ஆதரிக்கும் சிலர் உயிர்நூற் கொள்கைகளைத் தமக்கு ஆதாரமாகக் காட்ட முயல்கிறார்கள். கோத்திரச் சுத்தியையும் குடும்பச் சுத்தியையும் காப்பாற்றும் பொருட்டேஜாதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். கலப்பற்ற வமிசத்தார் உலகத்தில் எங்குமே யில்லையென்றும், உலக மக்களுக்குள்ளே இரத்தக் கலப்பு இல்லாமலிருக்கவில்லையென்றும் கோத்திர நூலாராய்ச்சி வல்லார் அபிப்பிராயப்படுகிறார்கள். முக்கியமாக இந்தியாவிலேயே இரத்தக்

கலப்பில்லாதஜாதி கிடையாது.

“இந்துச் சமூகத்தில் அந்நியர் கலப்பு” என்ற நூலில் அதன் ஆசிரியரான டி.ஆர்.பந்தர்க்கர் கூறியிருப்பதாவது:

வெளிநாட்டு இரத்தக் கலப்பில்லாதஜாதியோ வகுப்போ இந்தியாவில் இல்லவேயில்லை. போர்க்குணம் படைத்த ராஜபுத்திரர்கள், மகாராஷ்டிரர்கள் முதலிய வகுப்பாரைத் தவிரப் பார்ப்பனஜாதியிலும்கூட அந்நிய இரத்தக் கலப்பு ஏற்பட்டுத்தான் இருக்கிறது. தாமே சுத்த ரத்தமுடையவர்கள் எனப் பார்ப்பனர் கூறிக் கொள்வது ஏமாற்று வித்தையாகும். எனவே, இரத்தக் கலப்பைத் தடுப்பதற்காகவோ கோத்திர சுத்தியைப் பாதுகாக்கவோஜாதி ஏற்பட்டிருக்க முடியாது. இந்தியாவிலுள்ள பல வகுப்பாருக்கும் நாகரிகங்களுக்கும் கலப்பு ஏற்பட்ட பிறகேஜாதி ஏற்பாடு அமலில் வந்திருக்கிறது.ஜாதி வித்தியாசம் கோத்திர வித்தியாசமே என்றும், தற்காலஜாதியாரெல்லாம் பல திறப்பட்ட கோத்திரத்தார் என்றும் கூறுவது வெறும் புரளியாகும்.

பாஞ்சாலப் பார்ப்பனனுக்கும் சென்னைப் பார்ப்ப னனுக்கும் ஏதேனும் கோத்திரப்பந்தம் அல்லது ஒற்றுமையுண்டா? வங்காள தீண்டாச்சாதியாருக்கும் சென்னைத் தீண்டாச்சாதியாருக்கும் ஏதாவது கோத்திர ஒற்றுமையுண்டா? பஞ்சாலப் பார்ப்பானுக்கும் சாமாருக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது? சென்னைப் பார்ப்பானுக்கும் பறையனுக்கும் என்ன கேத்திர வித்தியாசமிக்கிறது? பாஞ்சாலப் பார்ப்பான் பாஞ்சால சாமார் கோத்திரத்தைச் சேர்ந்தவனே. சென்னைப் பார்ப்பான் சென்னைப் பறைய கோத்திரத்தைச் சேர்ந்தவனே.ஜாதி ஏற்பாடு கோத்திர வித்தியாசத்தைக் காட்டவில்லை. ஒரே கோத்திரத்தாருக்குள் ஏற்பட்டிருக்கும் சமூகப் பிரிவினையேஜாதி ஏற்பாடு.ஜாதி ஏற்பாடு கோத்திரப் பாகுபாடாகவே வைத்துக் கொண்டாலும் பல கோத்திரங்களுக்கும் கலப்புத் திருமணங்கள் ஏற்பட்டு எல்லாச்ஜாதியாரும் ஒன்றுபடுவதனால் என்ன தீமை விளைந்துவிடப் போகிறது? மக்களுக்கும் மிருகங்களுக்கும் பலமான வித்தியாசங்கள் இருப்பதனால் மக்களும் மிருகங்களும் இரண்டு தனி இனங்கள் என்று விஞ்ஞான சாஸ்திரிகள் முடிவு கட்டியிருக்கிறார்கள். ஆனால், கோத்திர சுத்தத்தில் நம்பிக்கையுடைய விஞ்ஞான சாஸ்திரிகளும் கூட பல வகுப்பு மக்களும் பல இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறவில்லை. மக்களுக்குள் காணப்படும் வித்தியாசம் ஒரே இனத்தாருக்குள் காணப்படும் பல திறப்பட்ட வித்தியாசமே. எனவே எல்லா மக்களும் கலப்பு மணம் செய்து சந்ததிகளை உற்பத்தி செய்யலாம்.

அந்தச் சந்ததிகளும் வாழையடி வாழையாகச் சந்ததிகளை உற்பத்தி செய்து கொண்டே இருக்கும். மலடாகிவிட மாட்டா.ஜாதிப் பாகுபாட்டை ஆதரிப்போர் பாரம்பரிய முறையையும் சாமுத்திரிகா சாஸ்திரத்தையும் தமது துணைக்கு இழுத்துக் கொண்டு ஏதேதோ உளறுகிறார்கள். சாமுத்திரிகா கொள்கைகளைத் தழுவிஜாதி ஏற்படுத்தப்பட்டிருந்தால் ஒருவரும் ஆட்சேபணை செய்ய மாட்டார்கள். ஏனெனில் புத்திசாலித்தனமாக ஆண்– பெண்களைச் சோடி சேர்த்து வமிச விருத்தி செய்வதை எவரும் தடுக்க மாட்டார்கள். ஆனால்,ஜாதி ஏற்பாடு புத்திசாலித்தனமான ஆண் – பெண் சோடி சேர்ப்புக்கு உதவி புரிவதில்லை. உண்மையில் புத்திசாலித்தனமாக ஆண் – பெண் சேர்க்கைக்குச்ஜாதி ஏற்பாடு ஒரு தடையாகவே இருக்கிறது. பல திறப்பட்டவர்கள் கலப்பு மணம் செய்வதைச்ஜாதி அனுமதிக்கவில்லை. ஒரே ஜாதியிலுள்ள ஒரு ஆணும் பெண்ணுந்தான் விவாகம் செய்து கொள்ளலாமென்பது நல்ல சோடி சேர்ப்பு முறையல்ல. ஜாதி உற்பத்திக்கு சாமுத்திரிகா லட்சணமே காரணமானால் உபசாதிகள் உற்பத்திக்கும் சாமுத்திரிகா லட்சணமே காரணமாக இருக்க வேண்டும். ஆனால், உபசாதிகள் உற்பத்திக்கு சாமுத்திரிகா லட்சணமே காரணமென்று யாராவது நெஞ்சில் கைவைத்துக் கூறுவார்களா? அவ்வாறு கூறுவது ஆபாசமாகவே முடியும். அதற்குள்ள காரணம் வெளிப்படையானதே.ஜாதியே கோத்திரமானால் உபசாதிகள் கோத்திர வேற்றுமைகளாயிருக்க முடியாது. ஏனெனில், உபசாதிகள் ஒரு கோத்திரத்தின் கிளையாகவே இருக்கின்றன. எனவே, கலப்பு மணம், சமபந்தி போசனம் முதலிய விஷயங்களில் உபசாதி களுக்குள் இருந்து வரும் தடைகளுக்கு சாமுத்திரிகா லட்சணமோ இரத்த சுத்தி லட்சியமோ காரணமாக இருக்க முடியாது.

உபசாதிகள் உற்பத்திக்குச் சாமுத்திரிகா லட்சணம் காரணமல்லவானால் ஜாதி உற்பத்திக்கும் சாமுத்திரிகா லட்சணம் காரணமாயிராது. சாமுத்திரிகா லட்சணமேஜாதி உற்பத்திக்குக் காரணமானால் கலப்பு மணம் தடுக்கப்பட்டிருப்பதற்கு அர்த்தமுண்டு. ஆனால், பலஜாதியாருக்கும் சமபந்தி போசனம் தடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன? சமபந்தி போசனம் உணவை விஷமாக்காது. சமூக வளர்ச்சிக்கோ வீழ்ச்சிக்கோ காரணமாகவும் இராது. எனவேஜாதி உற்பத்திக்கு சாஸ்திரிகமான காரணம் கூற முடியாது. சாமுத்திரிகா கொள்கைகளைத் துணைக்கு அழைக்கும்ஜாதியபிமானிகள் விஞ்ஞான சாஸ்திரத்துக்கு முரணான காரணங்களையே காட்டுகிறார்கள்.

பரம்பரைக் குணங்களைப் பற்றி ஆசிரியர் பேட்டிகள் கூறுவதாவது –

ஒரு குறிப்பிட்ட மார்க்கத்தில் உயரிய குணங்கள் பரம்பரை முறையில் மக்களுக்கு இறங்குகின்றன என்று கூற முடியாது. மனித சக்தி அபிவிருத்திக்குக் காரணங்கள் பலப்பல. ஒரு குறிப்பிட்ட முறையைப் பற்றியனவல்ல. சாமுத்திரிகா லட்சணப்படியேஜாதி வகுக்கப்பட்டிருக்கிறது எனக் கூறுவது பாரம்பரியத்தைப் பற்றித் தற்கால விஞ்ஞான சாஸ்திரிகளுக்கும் இல்லாதிருக்கும் அறிவு நமது முன்னோருக்கு இருந்ததெனக் கற்பனை செய்வதாகும். ஒரு மரத்தின் பழங்களைக் கொண்டே அம்மரத்தின் குணாகுணங்களை நிர்ணயம் செய்ய வேண்டும். சாமுத்திரிகா லட்சணமேஜாதி உற்பத்திக்குக் காரணமானால் எப்பேர்ப்பட்ட மக்களை அது அளித்திருக்க வேண்டும். இந்துக்கள் பொதுவாக வெகு பலசாலிகளல்ல. உடலமைப்பை ஆதாரமாக வைத்துப் பார்த்தால் இந்துக்கள் மூன்றாந்தரப் பேர்வழிகள் என்றே சொல்ல வேண்டும். இந்துக்கள் குள்ளமான உருவமும் வலிவற்ற உடலுமுடையவர். எனவே, ஜாதிக்கும் சாமுத்திரிகா சாஸ்திரத்துக்கும் சம்பந்தமே இல்லை. ஜாதி ஒரு சமூக ஏற்பாடே. இந்துக்களின் ஆணவமும் சுயநலமுமே அதன் தோற்றத்துக்குக் காரணம்.

## 6

பொருளாதாரச் சார்பாகப் பார்த்தாலும்,ஜாதி நன்மை தரக்கூடியதல்ல. ஜாதி ஏற்பாட்டினால் ஜனசமூகம் விருத்தியடைய முடியாது; விருத்தியடையவுமில்லை. எனினும் ஜாதியினால் ஒரு பலன் ஏற்பட்டிருக்கிறது. அதாவதுஜாதி, இந்து சமூகத்தைச் சின்னாபின்னமாக்கிச் சீரழித்து விட்டது. இந்தச் சமூகம் என்ற வார்த்தைக்கே பொருளில்லை; அது வெறும் கற்பனை. இதை நாம் முதன்முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்து என்ற பெயரே வெளிநாட்டார் சூட்டியது. தம்மையும் இந்தியச் சுதேசிகளையும் பிரித்துக் காட்டும் பொருட்டு முகம்மதியர் இந்தியச் சுதேசிகளை இந்துக்கள் என்று அழைத்தார்கள். முகம்மதியர் படையெடுப்புக்கு முன்னுள்ள சமஸ்கிருத நூல்களில் இந்து என்ற பதமே காணப்படவில்லை. அக்காலத்திய இந்தியர்கள் தம்மை ஒரு தனிச் சமூகமாக மதியாததனால் இந்தியர்களுக்கெல்லாம் பொதுவான ஒரு சமூகப் பெயரை

உண்டாக்க அவர்களுக்குத் தேவையுண்டாகவில்லை. உண்மையில் இந்துச் சமூகம் என ஒரு சமூகமே இல்லை. இந்துச் சமூகம் என்பது உண்மையில் பலஜாதிகள் சேர்ந்த ஒரு கதம்பமேயாகும். ஒவ்வொருஜாதியும் தன்னைத் தனிச் சமூகமாக மதித்துக் கொள்கிறது. ஒவ்வொருஜாதியும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதே தனது உயிர் லட்சியமாக மதித்திருக்கிறது. பலஜாதியாரும் ஒரு சமஷ்டியாகக் கூடச் சேர்வதில்லை. இந்து – முஸ்லிம் கலகம் ஏற்படும் காலங்களில் அல்லாமல் – மற்றக் காலங்களில் தமக்குப் பரஸ்பரத் தொடர்புண்டென்று இந்துச்ஜாதிகள் உணர்வதில்லை. மற்றக் காலங்களில் ஒவ்வொருஜாதியாரும் தனியாகப் பிரிந்து நின்று, மற்ற ஜாதிகளுக்கும் தனக்கும் சம்பந்தமில்லையென்ற உணர்ச்சியை வளர்த்துக் கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொருஜாதியும் மற்றவருள் கொண்டு கொடுப்பதுமில்லை; சமபந்தி போசனம் செய்வதுமில்லை, அம்மட்டோ! ஒவ்வொருஜாதியாரும் உடையிலுங்கூட வித்தியாசம் காட்டியே வருகிறார்கள். இன்றேல் ஒவ்வொருஜாதியாரும் தனிப்பட்ட முறையில், அய்ரோப்பிய யாத்திரீகர்கள் வேடிக்கை பார்க்குமாறு விதவிதமாக உடுத்திக் கொள்ளக் காரணமென்ன? உண்மையில் உண்மையான இந்து, நாட்டு வளப்பமறியாத கிணற்றுத் தவளையாகவே இருந்து வருகிறார்கள்.

இந்துக்களுக்குள்ளே ஒற்றுமை உணர்ச்சி என்பதே இல்லை. நாம் எல்லாம் இந்துக்கள் என்ற பொது உணர்ச்சியுமில்லை; ஜாதி உணர்ச்சிதான் இந்துக்களுக்குள் முனைந்து நிற்கிறது. இதனாலேயே இந்துக்கள் ஒரு சமூகமாகவோ "நேஷ"னாகவோ அய்க்கியப்பட முடியாமலிருக்கிறார்கள். ஆனால், தேசாபிமான மேலீட்டினால், இந்தியா ஒரு 'நேஷன்' அல்லவென்று ஒப்புக் கொள்ளப் பல இந்தியர்கள் தயங்குகிறார்கள். இந்தியர்களுக்குள் பலதரப்பட்ட வேற்றுமைகள் இருந்தாலும், மத நம்பிக்கை ஆசாரங்கள், பழக்க வழக்கங்கள் காரணமாக அந்த வேற்றுமைகளுக்கிடையிலும் ஒரு ஒற்றுமையிருப்பதாக அவர்கள் மழுப்புகிறார்கள். அது ஒருக்கால் உண்மையாகவிருந்தாலும் அதனால் இந்துக்கள் எல்லாம் ஒரு சமூகம் என எவரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அவ்வாறு ஒப்புக் கொள்வது ஒரு சமூகத்துக்குத் தேவையான முக்கியமான அம்சங்களைத் தப்பர்த்தம் பண்ணுவதாகும். பல பேர் நெருங்கி வாழ்வதனால் அவர்கள் ஒரு சமூகம் ஆகிவிட மாட்டார்கள். அதுபோலவே ஒருவன் வெகு தூரத்திலிருப்பதனால் ஒரு சமூகத்தின் அங்கத்தினனாயிருக்க யோக்கியதை யற்றவன் ஆகிவிடவுமாட்டான். மற்றும் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் காரணமாக

ஜனங்கள் ஒரு தனிச் சமூகம் ஆகவும் மாட்டார்கள். ஒரு கூட்டத்தார் பழக்க வழக்கங்களை வேறொரு கூட்டத்தார் பின்பற்றலாம். அதனால் அவர்களுக்குள் ஒற்றுமையிருப்பதாகவும் தோன்றலாம்.

பழக்க வழக்கங்கள் இயல்பாகவே பரவுகின்றன. அதனாலேயே உலகத்தின் நாலாபாகங்களிலு முள்ள காட்டான் ஜாதியாருக்குள் பல பொதுவான பழக்க வழக்கங்கள் இருந்து வருகின்றன. ஆனால் அந்தப் பொதுவான பழக்க வழக்கங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு காட்டான்ஜாதியாரெல்லாம் ஒரே சமூகத்தார் என எவரும் கூறத் துணிய மாட்டார்கள். ஏனெனில், பொதுவான பழக்க வழக்கங்கள் மட்டும் ஒரு சமூக அமைப்புக்குப் போதமாட்டா. பொதுவான குணங்கள் சில தமக்கு இயல்பாக அமைந்திருக்கும் மக்களே சமூகமாகிறார்கள். பொதுவான பழக்க வழக்கங்கள் சிலரிடம் காணப்படுவதால் அவர்களுக்கு அவை இயல்பாக அமைந்த பொதுக்குணங்கள் என்று ஏற்பட்டு விடமாட்டா.

மக்கள் பரஸ்பரம் கூட்டுறவாடுவதனாலேயே அவர்களுக்குள் பொதுவான குணங்கள் அமையக் கூடும். அதாவது கூட்டுறவினாலேயே சமூகங்கள் அமைகின்றன. சமூகங்கள் அமைவதற்கு மக்கள் ஒற்றுமையாகச் செயலாற்றினால் மட்டும் போதாது. போட்டி முயற்சிகளில் ஒற்றுமையிருந்தாலும் அதனால் சமூகம் உருப்படாது. உதாரணமாக, இந்துக்களின் திருவிழாவை எடுத்துக் கொள்வோம். ஒரே மாதிரியான திருவிழாவையே இந்துச்ஜாதியரெல்லாம் தனித்தனியாய் கொண்டாடுகிறார்கள். எனினும் அவர்களுக்குள் ஒத்துணர்ச்சியோ, சமூக உணர்ச்சியோ காணப்படவில்லை. ஒரே முயற்சியில் பலதரத்தாரும் ஈடுபட்டால்தான் அவர்களுக்குள் ஒத்துணர்ச்சியும் அனுதாபமும் அந்தரங்கப் பற்றும் ஏற்படும். சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் அங்கமாக இருந்தால்தான் சமூக சேமலாபங்களில் அவனுக்குப் பற்றும் கவலையும் உண்டாகும்.ஜாதிப்பாகுபாடு கூட்டுறவு முயற்சிக்கு முட்டுக் கட்டையாக இருக்கிறது. அதனால் இந்துக்கள் ஒரு சமூகம் ஆக முடியவில்லை. அவர்களுக்குள் பொதுவான ஒத்துணர்ச்சியோ ஒருமுகப்பட்ட வாழ்க்கை முறையோ காணப்படவில்லை.

## 7

ஒரு கூட்டத்தார் மற்றவர்களோடு கலவாமல் ஒதுங்கி வாழ்கிறார்கள் என்றும், சமூக நேசம் அவர்களிடமில்லை என்றும் இந்துக்கள் குறை கூறுகிறார்கள். ஆனால், இந்தியச் சமூக நேசமில்லாமைக்குச்ஜாதியே காரணமென்பதை அவர்கள் வெகு சுளுவாக மறந்து விடுகிறார்கள். மகாயுத்த காலத்தில் ஆங்கிலேயர் மீது ஜெர்மானியர் துவேஷப் பிரச்சாரம் செய்து கொண்டு இருந்தது போல் இந்தியாவிலும் ஒவ்வொருஜாதியாரும் பிறஜாதியாரைப் பற்றித் துவேஷப் பிரச்சாரம் செய்து வெறுப்பை வளர்த்து வாழ்ந்து வருகிறார்கள்.

ஒருஜாதிக்கு உயர்வும் ஒருஜாதிக்குத் தாழ்வும் கற்பிக்கும் வமிசாவழி சரித்திரமே இந்து இலக்கியங்களில் மலிந்து கிடக்கின்றன. அதற்கு ஸகியாத்திரி காண்டம் என்ற நூலே சிறந்த அத்தாட்சி. உயர்ஜாதியாருக்குள் மட்டும் சமூக விரோத உணர்ச்சி நிலவுவதாகச் சொல்வதற்கில்லை. உபஜாதியார் அல்லது கீழ்ச்சாதியாருக்குள்ளும் அவ்வுணர்ச்சி புகுந்து விஷமம் செய்துதான் வருகிறது. எனது மாகாணத்தில் கோலக் பார்ப்பனர்களும், தியோருகப் பார்ப்பனர்களும், கரட பார்ப்பனர்களும், பால்சி பார்ப்பனர்களும், சித்ரபன் பார்ப்பனர்களும் தாமெல்லாம் பார்ப்பன ஜாதியில் உட்பிரிவினர் என்றே கூறிக் கொள்கிறார்கள். ஆனால், அவர்களுக்குள்ளும் ஜாதித் துவேஷம் இருந்து வருகிறது. பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் எவ்வளவு ஜாதித் துவேஷம் இருந்து வருகிறதோ, அவ்வளவு ஜாதித் துவேஷம் அவர்களுக்குள்ளும் இருந்து வருகிறது. ஆனால், இதைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒவ்வொரு வகுப்புக்கும் சில பிரத்தியேக நன்மைகள் இருந்து வரும்வரை அவற்றைக் காப்பாற்ற அந்தந்த வகுப்புகள் முயற்சி செய்யத்தான் செய்யும். எனவே, அவ்வகுப்பார்களுக்குள் ஜாதித்துவேஷம் இல்லாமலிருக்க முடியாது. ஒவ்வொரு தேசமும் சுய லாபத்தைக் கருதித் தனியாக வாழ விரும்புவதுபோல, ஒவ்வொரு ஜாதியும் சுயலாபம் கருதித் தனியாக வாழவே விரும்புகிறது. பார்ப்பனர் சுய சேமத்தைக் காப்பதே பார்ப்பன லட்சியமாகவும் பார்ப்பனரல்லாதார் சுய சேமத்தைக் காப்பதே பார்ப்பனரல்லாதார் லட்சியமாகவும் இருந்து வருகிறது. எனவே இந்துச் சமூகம் பலஜாதிகள்

சேர்ந்த ஒரு அவியல் என்று மட்டும் அல்ல; ஒவ்வொருஜாதியும் சுய சேமத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடிக் கொண்டிருப்பதனால் இந்துச் சமூகம் ஒரு கலகக் கூட்டம் என்றே சொல்ல வேண்டும்.ஜாதிப் பாகுபாட்டில் மற்றொரு அம்சம் அடங்கியிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். பண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற 'ரோஸ்', 'கிராமவெல்' போர்களில் தற்கால ஆங்கிலேயரின் மூதாதைகள் இரு பிரிவினராய் நின்று ஒருவரோடொருவர் போராடினார்கள்.

ஆனால், அவ்வாறு போராடியவர்களின் சந்ததிகளுக்குள் இப்பொழுது பகைமை இல்லை. பண்டைக்காலப் போரையே மறந்துவிட்டார்கள். பழம் பகைமையை அவர்கள் பாராட்டிக் கொள்ளவும் இல்லை. ஆனால், தற்காலப் பார்ப்பனர்களின் முன்னோர்கள் தற்காலப் பார்ப்பனரல்லாதாரின் முன்னோருக்குச் செய்த கொடுமைகளைத் தற்காலப் பார்ப்பனரல்லாதார் மறக்கவில்லை.

முற்காலப் பார்ப்பனர்கள் செய்த பாவத்துக்காகத் தற்காலப் பார்ப்பனரல்லாதார், தற்காலப் பார்ப்பனர்களிடம் பழிக்குப் பழி வாங்கி வருகிறார்கள். தற்காலப் பார்ப்பனர்களின் முன்னோர்கள் செய்த கொடுமைகளுக்காகத் தற்காலக் காயஸ்தார்கள் தற்காலப் பார்ப்பனர்களைக் குறை கூறி வெறுக்கிறார்கள். முற்காலப் பார்ப்பனர்கள் சிவாஜிக்குச் செய்த அவமரியாதையைத் தற்காலப் பார்ப்பனரல்லாதார் மறவாமல் தற்காலப் பார்ப்பனர்களிடம் பகைமை காட்டி வருகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? ஜாதிப் பாகுபாடே இதற்குக் காரணம்.ஜாதியுணர்ச்சியினால் மக்கள் பழம் பகைமைகளை மறக்கச் சக்தியற்றவராகி விட்டார்கள். எனவேஜாதிப் போராட்டம் மலிந்து இந்துக்களுக்குள்ளே ஒற்றுமை இல்லாமல் போய்விட்டது.

## 8

வரப்போகும் அரசியல் சீர்திருத்தம் சில இந்தியப் பூர்வகுடிகளைப் பாதிக்கவில்லை. சிலரைப் பாதித்திருக்கிறது. இது சம்பந்தமான வாதப் பிரதிவாதங்களைக் கவனித்தால் இந்தியப் பூர்வ குடிகளின் இழிவான நிலைமை நன்கு விளங்கும். அவர்கள் தொகை சுமார் 130

இலட்சமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. அவர்களை வரப்போகும் சீர்திருத்தத்தில் சேர்க்காமல் ஒதுக்கி வைப்பது ஒழுங்கா? ஒழுங்கல்லவா? என்பது ஒரு புறமிருக்க, பல்லாயிர வருஷங்களுக்கு முன்னமேயே நாகரிகம் பெற்றிருந்ததாய்ப் பெருமை பாராட்டிக் கொள்ளும் ஒரு நாட்டிலே அவர்கள் இப்பொழுதும் அநாகரிக மக்களாகவே இருந்து வருகிறார்கள் என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. அவர்கள் அநாகரிக மக்களாய் இருப்பதுமன்றி அவர்களில் சிலர் பின்பற்றும் தொழிலினால் அவர்கள் குற்றப் பரம்பரையினர் என்றும் மதிக்கப்பட்டு விட்டனர். ஆனால், இதைப் பற்றி ஒருபொழுதும் இந்துக்கள் வெட்கப்படவோ வருத்தப்படவோ செய்யவில்லை.

இதுபோன்ற நிலைமையை உலகத்தில் எங்குமே காண முடியாது. இந்த மானங்கெட்ட நிலைமைக்குக் காரணமென்ன? அந்தப் பூர்வகுடிகளை நாகரிகப்படுத்திக் கண்ணியமான வாழ்க்கை நடத்துமாறு செய்ய முயற்சி செய்யப்படாதது ஏன்? அவர்கள் பிறவியிலேயே மூடர்களாயிருந்ததனால் நாகரிகமடையவில்லையென்று இந்துக்கள் சமாதானம் சொல்லக் கூடும். ஆனால் அவர்களை நாகரிகப்படுத்தப் பாதிரிமார் செய்யும் முயற்சியை ஒரு இந்து செய்தால் அவர்கள் நாகரிகமடைவார்களா? மாட்டார்கள் என்றே நான் கூறுகிறேன்.

நாம் ஒரு கூட்டத்தாரை நாகரிகப்படுத்த முயன்றால் நாமும் அவர்களுள் ஒருவராகப் பாவித்து அவர்களுடன் ஊடாடிப் பழகி, அவர்களுடைய சுகதுக்கங்களில் பங்கு கொண்டு ஒத்துணர்ச்சியையும் அனுதாப உணர்ச்சியையும் விருத்தி செய்தால்தான் நமது முயற்சி பயனடையும். ஆனால், அவ்வாறு செய்ய எந்த இந்துக்காவது முடியுமா? தத்தம் ஜாதியாச்சாரங்களைப் பாதுகாப்பதே இந்துக்களின் உயிர் லட்சியமாக இருந்து வருகிறது. ஜாதியே இந்துக்களின் விலைமதியாச் சொத்து. அதை எப்பாடுபட்டாவது அவர்கள் காப்பாற்றித் தீர வேண்டும். வேதகால அநாகரிகர்களான இந்தியப் பூர்வ குடிகளுடன் உறவாடித் தமதுஜாதிப் பெருமையை இந்துக்கள் இழக்க முடியாது. வீழ்ச்சியடைந்தவர்களுக்கு உதவி புரிய வேண்டியது முக்கியமான கடமை என்பதை இந்துக்கள் உணராமல் இல்லை. ஆனால், அந்தக் கடமையைவிடத் தமது ஜாதியாச்சாரங்களைக் காப்பதே இந்துக்களின் மிக மேலான கடமையாக இருக்கிறது. இந்தியா உயரிய நாகரிகமடைந்திருந்தபோதும், இவர்கள் நாகரிகமடையாமல் இருந்ததற்கும் அதைப் பார்த்து இந்துக்கள் வருத்தப்படவோ வெட்கப்படவோ

செய்யாமல் இருந்ததற்கும் ஜாதியே முக்கியக் காரணமாகும். நாகரிகமடையாத பூர்வகுடிகள் தமக்குப் பேராபத்தையுண்டு பண்ணக் கூடியவர்கள் என்பதை இந்துக்கள் உணரவே இல்லை. அவர்கள் எந்நாளும் அநாகரிக மக்களாகவே இருந்தால் அவர்களால் இந்துக்களுக்குத் தீமையுண்டாகாது. ஆனால், அவர்களை இந்துக்களல்லாதார் தம் மதத்தில் சேர்த்து விட்டால் இந்துக்களின் சத்துருக்கள் தொகை பெருகிவிடும். இந்த நிலைமை ஏற்பட்டால் அதற்கு இந்துக்கள், தமது ஜாதியாச்சாரங்களைத்தான் குறை கூற வேண்டும்.

## 9

காட்டாளர்களான இந்தியப் பூர்வ குடிகளை நாகரிகப்படுத்தி முன்னுக்குக் கொண்டுவர இந்துக்கள் முயற்சி செய்யவே இல்லை. அம்மட்டோ? இந்துக்களில் கீழ்ச்ஜாதியாராயிருப்போர் உயர்ந்தஜாதியாருக்குச் சமமான நிலைமையை அடையாதவாறு உயர்சாதி இந்துக்கள் அமிழ்த்தி வைக்கவும் முயற்சி செய்தார்கள். அதற்குச் சோனர் சமூகத்தையும் பதாரி சமூகத்தையும் கண்கூடாகக் கூறலாம். அந்த இரண்டு சமூகமும் மகாராஷ்டிர தேசத்தில் மிகப் பேர் பெற்றவை. தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள முயலும் இதர சமூகங்களைப் போல இந்த இரு சமூகங்களும் பார்ப்பனர் பழக்க வழக்கங்களை மேற்கொள்ள முயற்சி செய்தன. சோனர்கள் தெய்வத்தினிய பார்ப்பனர் எனப் பேர் சூட்டிக் கொண்டதுடன் பார்ப்பனர்களைப் போல் சோமன் உத்தரீயங்கள் அணியவும் ஒருவரையொருவர் சந்திக்கும்போது "நமஸ்காரம்" என்ற பதத்தைப் பிரயோகம் செய்யவும் தொடங்கினார்கள். சோமன், உத்தரீயமணிவதும் நமஸ்காரம் கூறுவதும் பார்ப்பனர்களின் தனி உரிமைகளாம். ஆகவே சோனர்கள் பார்ப்பனர் வேஷம் போடுவதைப் பார்ப்பனர்கள் ஆதரிக்கவில்லை. சோனர்கள் பார்ப்பனர் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதை, பேஷ்வாக்கள் உதவி கொண்டு பார்ப்பனர்கள் தடுத்தார்கள். பம்பாய் மாகாணத்தில் வாழும்

சோனர்கள், பார்ப்பனர் பழக்க வழக்கங்களைப் பின்பற்றக் கூடாதென்று பம்பாய் கிழக்கிந்திய கம்பெனிக் கவுன்சில் தலைவர் ஒரு தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கூடப் பார்ப்பனர்கள் தூண்டினார்கள்.

ஒருகாலத்து பதாரி பிரபு சமூகத்தில் விதவா விவாகம் அமலில் இருந்து வந்தது. பார்ப்பனர்களுக்குள் விதவா விவாக வழக்கம் இல்லாததனால், விதாவ விவாகம் ஒரு அநாச்சாரமென்றே மதிக்கப்பட்டு வந்தது. ஏனோ தமது சமூக அந்தஸ்தை உயர்த்தும் பொருட்டு பதாரி பிரபு சமூகத்தார் விதவா விவாக வழக்கத்தை நிறுத்தல் செய்தார்கள். அதனால் அந்தச் சமூகத்தில் பிளவுண்டாயிற்று. ஒரு கட்சியார் விதவா விவாகத்தை நிறுத்தக் கூடாதென்று வாதாடினர். மற்றக் கட்சியார் நிறுத்த வேண்டுமென்று வற்புறுத்தினர். விதவா விவாகத்தை ஆதரிக்கும் கட்சியை பேஷ்வாக்கள் ஆதரித்து, பதாரி பிரபு சமூகத்தார் பார்ப்பனர் பழக்க வழக்கங்களைப் பின்பற்றக் கூடாதென்று உத்தரவு போட்டார்கள்.

முஸ்லிம்கள் ஆயுத பலத்தினால் இஸ்லாம் மதத்தைப் பரப்பியதாக இந்துக்கள் குறை கூறுகிறார்கள். கிறிஸ்துவர்கள் எல்லாம் அவிசுவாசிகளைச் சித்திரவதை செய்கிறவர்கள் என்று இந்துக்களே கேலி செய்கிறார்கள். ஆனால், இவர்களில் நமது பாராட்டுக்கு உரியவர்கள் யார்? மோட்சத்துக்கு இன்றியமையாதவை எனத் தாம் அந்தரங்க சுத்தியோடு நம்புகிறவைகளை இந்துக்கள் பின்பற்றும்படி கட்டாயப்படுத்திய முஸ்லிம்களும், கிறிஸ்துவர் களும் மேலானவர்களா? அறிவு மற்றவர்களிடம் பரவாமல் தடுத்து, ஏனையோர் அஞ்ஞான இருளில் கிடந்து உழலவும் தம்மைச் சீர்திருத்திக் கொள்ள முடியாமல் தயங்கவும் செய்த இந்துக்கள் மேலானவர்களா? முஸ்லிம்கள் குரூர சுபாவமுடையவர்களானால் இந்துக்கள் அற்பமனம் படைத்தவர்களே. அற்பத்தனம் கொடுமையிலும் கேவலமானது.

# 10

இந்து மதம் ஒரு மிஷனரி மதமா? – அதாவது பிற மதத்தாரை இந்துக்களாக்கும் மதமா? அல்லவா? என்பதைப் பற்றி ஒரு காலத்து வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. இந்து மதம் ஒரு காலத்தும் மிஷனரி மதமாக இருக்கவில்லையெனச் சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். சிலர் மிஷனரி மதமாக இருந்ததெனக் கூறினர். ஆனால், ஒரு காலத்து இந்து மதம் மிஷனரி மதமாக இருந்ததென்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். அது மிஷனரி மதமாக இருந்திராவிட்டால் இந்தியா முழுவதும் பரவியிருக்க இடமில்லை. ஆனால், இன்று இந்து மதம் மிஷனரி மதமாக இருக்கவில்லையென்பதையும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். எனவே, இந்து மதம் இப்பொழுது மிஷனரி மதமாயிருக்க முடியாததாயிற்று என்பதே எனது அபிப்பிராயம். மத மாற்றத்துக்கும்ஜாதிக்கும் சம்பந்தமில்லை. மதமாற்றத்துக்கு மதக்கோட்பாடுகளும் நம்பிக்கையும் முக்கிய அம்சங்களாக இருக்கவில்லை. மதமாற்றம் பெற்றவனுக்குச் சமூக வாழ்வில் ஒரு இடம் அளிப்பது ஒரு முக்கியமான பிரச்சினை. மதமாற்றம் பெற்றவனுக்கு எங்கு இடமளிப்பது? அவனை எந்தச்ஜாதியில் சேர்ப்பது என்பது மதமாற்றத்தையொட்டிய முக்கியப் பிரச்சினைகளாக இருக்கின்றன. எனவே, அந்நியர்களை இந்து மதத்தில் சேர்க்க இந்துக்கள் தயங்குகிறார்கள். கிளப்களில் எல்லோரும் சேர்த்துக் கொள்ளப்படுவதுபோல்ஜாதியில் எல்லோரும் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. அந்தந்தச்ஜாதியில் பிறந்தவர்களே அந்தந்தச்ஜாதியில் அங்கமாக இருக்க முடியும்.

சாதிகள் சுயமாகவே சர்வாதிகாரமுடையவை. மற்றவர்களைச்ஜாதியில் சேர்த்துக் கொள்ளும்படி செய்ய எவருக்கும் அதிகாரமில்லை. இந்துச் சமூகம் பலஜாதிகள் சேர்ந்த ஒரு கதம்பமாயிருப்பதனாலும், ஒவ்வொருஜாதியும் கட்டுப்பாடாக அமைக்கப்பட்டிருப்பதனாலும், மதமாற்றம் பெற்றவர்கள் அங்கு இடம்பெற முடியாது. இந்து மதம் பரவாமலிருப்பதற்கும் பிற மதத்தார்களைத் தன்னுள் சேர்த்துக் கொள்ளாததற்கும்ஜாதியே காரணமாக இருக்கிறது.ஜாதி இருக்குமட்டும் இந்து மதம் மிஷனரி மதமாக இருக்கவே முடியாது. சுத்த முட்டாள்தனமான சடங்கு; அதனால் பயன் ஏற்படவே செய்யாது.

## 11

சுத்தி பயனற்றது என்பதற்குள்ள காரணங்களே சங்காதன் பயனற்றது என்பதற்கும் காரணங்களாயிருக்கின்றன. இந்துக்கள் பொதுவாக பயங்காளிகளாயும் கோழைகளாயும் இருக்கிறார்கள். கோழைத்தனத்தினால் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளக் கீழ்த்தரமான தந்திரங்களும் சூழ்ச்சிகளும் செய்கிறார்கள். இந்துக்கள் – முஸ்லிம்கள், சீக்கியர்களைப் போல் வீரத்தனமுடையவர்களல்ல. எனவே, இந்துக்களின் கோழைத்தனத்தைப் போக்கி வீரமனம் படைத்தவர்களாக்குவதே சங்காதன் ஏற்பாட்டின் முக்கிய நோக்கம். ஆனால், சீக்கியரும், முஸ்லிம்களும் வீரர்களாயிருக்கக் காரணம் என்ன? அவர்களுக்குத் தைரியம் எப்படி உண்டாயிற்று? தேக பலத்தினாலோ, உணவினாலோ தேகாப்பியாசத்தினாலோ சீக்கியரும், முஸ்லிம்களும் பலசாலிகளாயும், தைரியசாலிகளாயும் இருக்கவில்லை.

ஒரு சீக்கியனுக்கு ஆபத்துண்டானால் மற்றச் சீக்கியர்கள் எல்லாம் அவனுக்கு உதவி செய்ய முன்வருவார்கள்; ஒரு முஸ்லிமை ஒருவன் தாக்கினால் அவனைக் காப்பாற்ற மற்ற முஸ்லிம்கள் எல்லாம் திரண்டு வருவார்கள். அவர்களது உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் நம்பிக்கையே அவர்களுடைய வீரத்துக்கும், தைரியத்துக்கும் காரணமாகும்.

ஒரு இந்துவுக்கு அத்தகைய நம்பிக்கை உண்டாக இடமில்லை தான். சகாக்கள் தன் உதவிக்கு வருவார்கள் என்று ஒரு இந்து நம்ப முடியாது. தனிமையாக, ஏகாங்கியாக வாழப் பிறந்த அவன் சக்தியற்றவனாகவே இருக்கிறான். எனவே அவனது கோழைத்தனம் விருத்தியாகிறது. சண்டையுண்டானால் எதிரிக்குக் கீழ்ப்படிகிறான். அல்லது ஓடிவிடுகிறான். சீக்கியரும், முஸ்லிமும் தைரியமாக நின்று எதிரியை எதிர்த்துப் போராடுவான். ஏனெனில், அவன் தனியனாயிருந்தாலும் அவனுக்கு உதவி கிடைக்குமென்ற நம்பிக்கை அவனுக்கு இருந்து வருகிறது.

இந்த நம்பிக்கையுடன் எதிரியை எதிர்த்துப் போராடுகிறான். அந்த நம்பிக்கையில்லாதவனே ஓடுகிறான். சீக்கியனுக்கும் முஸ்லிமுக்கும் உதவி கிடைக்குமென்ற நம்பிக்கை உண்டாகக் காரணமென்ன? இந்து ஏங்கி நிற்கக் காரணமென்ன? என்பதை நீங்கள் ஆழ்ந்து யோசித்தால்

அவர்களது சமூக அமைப்பும் வாழ்க்கை முறையுமே அவர்களுக்குள்ள சகோதர உணர்ச்சியை விருத்தி செய்கின்றன. இந்துக்களின் சமூக அமைப்பும், வாழ்க்கை முறையும் அவ்வுணர்ச்சியை விருத்தி செய்வதில்லை. சீக்கியருக்குள்ளும் முஸ்லிம்களுக்கும் சமூகப் பற்று இருப்பதனால் அவர்களுக்குள் சகோதர உணர்ச்சி நிலவி வருகிறது. இந்துக்களுக்குள் அத்தகைய சமூகப் பற்று இல்லை; எனவே சகோதர உணர்ச்சியுமில்லை. இதனாலேயே ஒரு சீக்கியன் ஏழு லட்சம் மக்களுக்கு நிகரானவன் என்று சீக்கியர்களும், ஒரு முஸ்லிம் ஒரு கூட்டம் இந்துக்களுக்கு நிகரானவன் என்று முஸ்லிம்களும் சொல்லிக் கொள்கிறார்கள். இந்த வித்தியாசங்களுக்கெல்லாம் காரணம் ஜாதியே. ஜாதியிருக்கும் வரை சங்காதன் இருக்க முடியாது. சங்காதன் இல்லாதிருக்கும் வரை இந்து பலவீனனாயும் பயங்காளியாகவுமே இருப்பான். இந்துக்கள் மிகவும் சகிப்புத் தன்மையுடையவர்கள் என்று பெருமை பாராட்டிக் கொள்கிறார்கள். வாஸ்தவத்தில் இது ஒரு தப்பெண்ணமாகும். பல சந்தர்ப்பங்களில் அவர்கள் சகிப்புத் தன்மையில்லாதவர்களாகவே இருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் சகிப்புத் தன்மையுடையவர்களாயிருந்தால் அதற்குக் காரணம் பலவீனமும் பீதியுமேயாகும். இந்தச் சகிப்புத் தன்மை இந்துக்களின் பிறவிக் குணமாய்ப் போய்விட்டதனால் எத்தகைய அவமானத்தையும், தீங்கையும் பொறுத்துக் கொள்கிறார்கள்.

எனவே, தோழர் மாஜிஸ் கூறியிருக்கிறபடி, “இந்துக்களுக்குள்ளே கைவலுத்தவன் மற்றவர்களை இம்சிக்கிறான்; பலசாலி பலவீனனை அடிக்கிறான். துஷ்டர்கள் எவருக்கும் அஞ்சுவதில்லை. கருணையுடையவர்களுக்குத் துணிச்சல் இல்லை; அறிவாளிகள் எதையும் லட்சியம் செய்வதில்லை. இந்துக்களுடைய தெய்வங்கள் மன்னிப்பளிக்கக் கூடியவை. அலட்சியப் பாவனையைப் போன்ற கொடிய நோய் வேறில்லை.”

இந்துக்கள் அலட்சியப் பாவனையுடையவர்களாயிருக்கக் காரணமென்ன? ஜாதியே அதற்குக் காரணம். நற்காரியங்களுக்கும் ஒத்துழைக்கும் உணர்ச்சியைச்ஜாதி அழித்துவிட்டது.

## 12

ஒரு வகுப்பின் அதிகாரங்களையோ, சட்ட திட்டங்களையோ மதியாமல் சுயநம்பிக்கைகளையும் அபிப்பிராயங்களையும் வெளியிட்டுச் சுய சுதந்திரத்தைப் பெரிதாக மதிக்கும் மனப்பான்மையே சீர்திருத்தத்துக்கு அடிப்படையாக இருக்கிறது.

ஆனால், சீர்திருத்தத்தின் வெற்றியும் தோல்வியும் அந்தந்த வகுப்பாரின் மனப்பான்மையைப் பொறுத்திருக்கிறது. சுய அபிப்பிராயங்களையும், அபிலாசைகளையும் வெளியிடுகிறவர்களிடம் வகுப்புகள் சகிப்புத் தன்மையுடனும், நேர்மையாகவும் நடந்து கொண்டால், சீர்திருத்தக்காரர் தமது அபிப்பிராயங்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு ஏனையோரைத் தம் வழி திருப்ப வசதி ஏற்படும். மாறாக வகுப்புகள் சகிப்புத் தன்மையற்றவைகளாயும் சீர்திருத்தக்காரரை இம்சித்து அடக்கக் கூடியவைகளாயும் இருந்தால் சீர்திருத்தக்காரர்கள் அழிந்து விடுவார்கள்; சீர்திருத்த இயக்கமும் படுத்துவிடும்.

சாதியாச்சாரங்களையும், விதிகளையும் மீறுகிறவனைஜாதிப் பிரஷ்டம் செய்ய ஒருஜாதிக்குத் தாராளமாக உரிமையுண்டு. சமூகப் பிரஷ்டம் செய்யப்பட்டவனுக்கும், சமூகத்துக்கும் உள்ள தொடர்புகள் எல்லாம் அற்றுப் போவதனால் சமூகப் பிரஷ்டம் ஒரு மாதிரி மரணமேயாகும். எனவே,ஜாதியாச்சாரங்களையும், விதிகளையும் மீறி தனிப்பட்ட இந்துக்கள் தமது சொந்த அபிப்பிராயங்களை வெளியிட அஞ்சிக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்கு இடமுண்டா? சீர்திருத்த உணர்ச்சியுடையவன் உணர்ச்சியில்லாதவர்களுடன் சரசமாக நடந்து கொள்ள முடியாது. எனினும், அவர்களுடைய கூட்டுறவின்றி அவனுக்கு வாழ முடியாதென்பதையும் நாமுணர வேண்டும். அவனது அபிப்பிராயங்களை ஆதரிக்கக் கூடியவர்களுடைய கூட்டுறவை அவன் நாடக்கூடும். அது சாத்தியமில்லையானால், தனது அபிப்பிராயங்களை விட்டுக் கொடுத்தாவது சமூக வாழ்வைப் பெறவே அவன் விரும்புவான்.

ஏனெனில், சமூக ஆதரவின்றி – கூட்டுறவின்றி ஒருவனுக்கு வாழ முடியாது. சமூகக் கூட்டுறவின்றி ஒருவனுக்கு வாழ முடியாதிருப்பதனாலே

ஒவ்வொரு ஜாதியாரும் ஜாதியாச்சாரங்களைக் கண்டிப்பாக வற்புறுத்தி வருகிறார்கள்.

சீர்திருத்தக்காரர் வாழ்வை நரக வாழ்வாக்க பலஜாதியார் சேர்ந்து சதி செய்ய முடியும். சதி செய்வது சரியான கிரிமினல் குற்றமானால் சமூகப் பிரஷ்டம் செய்கிறவர்களை ஏன் தண்டிக்கக் கூடாதென்று கேட்கிறேன். எனினும்,ஜாதியாச்சாரங்களை மீறுகிறவர்களை சமூகப் பிரஷ்டம் செய்யவும் தண்டிக்கவும் சட்டம்ஜாதித் தலைவர்களுக்கு அல்லதுஜாதிப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரமளித்திருக்கிறது. சீர்திருத்தக்காரர்களை இம்சிப்பதற்கும் சீர்திருத்த இயக்கங்களை ஒழிப்பதற்கும்வைதீகர்களுக்குஜாதி ஒரு ஏற்ற கருவியாக அமைந்திருக்கிறது.

## 13

இந்துத் தர்மத்துக்குஜாதியினால் ஏற்பட்ட பலன் வருந்தக் கூடியதாகவே இருக்கிறது. பொதுநல உணர்ச்சியையேஜாதி கொன்றுவிட்டது. பரோபகார உணர்ச்சியையும்ஜாதி அழித்துவிட்டது. பொதுஜன அபிப்பிராயம் உருவாவதற்கும்ஜாதி முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது. ஒரு இந்துவின் பொதுஜனம் அவனுடையஜாதியே. அவன்ஜாதிக்கு மட்டுமே அவன் பொறுப்பாளியாக இருக்கிறான்.ஜாதிக்கு மட்டும் பக்தி செலுத்தவே அவன் கடமைப்பட்டவனாக இருக்கிறான். ஒழுக்க சீலங்களிலும் கூடச்ஜாதியுணர்ச்சி புகுந்துவிட்டது. தகுதி யுடையவர்களிடம் யாரும் அனுதாபம் காட்டுவதுமில்லை. யோக்கியதையுடையவர்களைப் பாராட்டுவதுமில்லை. தேவை உடையவர் களுக்குப் பிச்சை கொடுப்பதுமில்லை. துன்பப்படுகிறவர்களுக்கு எவரும் இரக்கம் காட்டுவதுமில்லை. தர்மங்கள் எல்லாம்ஜாதியுணர்ச்சியுடனேயே செய்யப்படுகின்றன. ஒவ்வொருவரும் தத்தம்ஜாதியாருக்கே அனுதாபம் காட்டுகிறார்கள். மற்றஜாதியினருக்கு அனுபதாபம் காட்டுவதில்லை. நல்லொழுக்கமுடைய ஒரு பெரியாரைப் பின்பற்ற இந்துக்கள் எல்லாம் முன்வருவார்களா? மகாத்மா காந்தி விஷயம் ஒரு புறநடை. ஒவ்வொருவரும் தன்ஜாதித் தலைவரைப்

பின்பற்ற விரும்புவார்கள். பார்ப்பனத் தலைவரைத் தான் பார்ப்பனர் பின்பற்றுவார்கள். சத்திரியத் தலைவரைத் தான் சத்திரியர் பின்பற்றுவார்கள். காயஸ்த தலைவரைத் தான் காயஸ்தர் பின்பற்றுவார்கள். இம்மாதிரியே மற்றஜாதியாரும்.ஜாதியைக் கவனிக்காமல் தகுதியை மட்டும் கவனிக்கும் குணம் இந்துக்களிடம் இல்லவே இல்லை. சுயசாதிக்காரன் தகுதியைத்தான் ஒவ்வொருவரும் பாராட்டுகிறார்கள். இதனால் இந்துக்களின் ஒழுக்கமே கெட்டு விட்டது. அவன் செய்தது சரியோ தப்போ எப்படியிருந்தாலும் சரி, அவன் என்ஜாதியான், அவன் நல்லவனோ கெட்டவனோ எப்படியிருந்தாலும் சரி, அவன் என்ஜாதியான் என்ற மனப்பான்மையே இந்துக்களிடம் குடிகொண்டிருக்கிறது. பெருமை ஒழுக்கத்துக்கும், குணத்துக்கும் மட்டுமல்ல,ஜாதிக்கே. சுயஜாதிகளின் சேமத்துக்காக இந்துக்கள், தேசத் துரோகமே செய்து கொண்டிருக்கிறார்கள்.

## 14

சாதியினால் ஏற்பட்ட தீமைகளை நான் விளக்கிக் கூறுவது கேட்டு உங்களில் சிலர் சலிப்படைந்திருந்தால் நான் அதைப் பற்றி ஆச்சரியப்பட மாட்டேன். அதில் புதுமை எதுவுமில்லை. எனவே,ஜாதிப் பிரச்சினையின் ஆக்கப் பகுதியைப் பற்றி இனிப் பேசத் தொடங்குகிறேன். ஜாதியை நீங்கள் விரும்பவில்லையானால், உங்கள் உத்தம சமூக அமைப்பின் தன்மை என்ன? என்ற கேள்வி கேட்கப்படலாம். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே எனது லட்சியம். அத்தகைய ஒரு சமூக அமைப்பு ஏன் ஏற்படக் கூடாது? சகோதரபாவனை ஏன் ஏற்பட்டது? அதற்கு எத்தகைய முட்டுக்கட்டையும் ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை.

உத்தமமான ஒரு சமூகம் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். சமூகத்தின் ஒரு பகுதியில் ஏற்படும் மாற்றம் மற்றப் பகுதிகளிலும் பரவக் கூடியதாக இருக்க வேண்டும். ஓர் உத்தமமான சமூக அமைப்பில் எல்லோருக்கும் பொதுவான பல பாத்தியதைகள் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் சம்பந்தம் ஏற்படப் பல திறப்பட்ட மார்க்கங்களும்

சந்தர்ப்பங்களும் இருக்க வேண்டும். அதாவது, சமூகத்தில் அங்கம் பெற்றுள்ள உறுப்பினர் பரஸ்பரம் நீக்கமறக் கலந்து கொள்வதற்குச் சமூக அமைப்பில் இயல்பாகவே இடம் இருக்க வேண்டும். இதுவே உண்மையான சகோதரத்துவம்.

சகோதரத்துவமும் ஜனநாயகமும் வெவ்வேறானவையல்ல. ஜனநாயகம் என்பது ஓர் அரசியல் முறை மட்டுமன்று; பரஸ்பரப் பற்றுடைய ஒரு சமூக வாழ்வுமாகும். சுதந்திரத்தை யாராவது ஆட்சேபிப்பார்களா? சுதந்திர வாழ்வை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். அதுபோலவே உலக வாழ்க்கைக்குரிய சொத்து, கருவிகள் விஷயத்திலும் எவரும் சுதந்திரத்தை ஆட்சேபிக்க மாட்டார்கள். அப்படியானால் ஒருவனுக்கு இயல்பாக அமைந்துள்ள சக்திகளை அவன் விரும்புகிறபடி உபயோகிக்க ஏன் சுதந்திரமளிக்கலாகாது?

இதர விஷயங்களில் சுதந்திரமளிக்க விரும்பும்ஜாதியபிமானிகள் தொழில் செய்யும் விஷயத்தில் சுதந்திரமளிக்க இணங்குகிறார்களில்லை. ஆனால், அம்மாதிரி சுதந்திரத்தை வழங்காமலிருப்பது அடிமைத் தனத்தை வளர்ப்பதாகும். ஏனெனில், சட்டப்படி அடிமைகளை வைப்பது மட்டும் அடிமைத்தனமல்ல. ஒருவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து மற்றவர்கள் நடக்குமாறு சமூக அமைப்பில் இடமிருப்பது ஒரு மாதிரி அடிமைத்தனமாகும். சட்டப்படி அடிமை வர்த்தகமில்லாத இந்த நிலைமை இருந்துதான் வருகிறது. ஜாதி ஏற்பாட்டின்படி சில வகுப்பார் அவர் விரும்பாத தொழிலைச் செய்யும்படியும் கட்டுப்பாடு இருந்து வருகிறது. சமத்துவத்தை எவராவது ஆட்சேபிப்பார்களா? ஃபிரஞ்சுப் புரட்சியில் விவாதத்துக்கு இடமாயிருந்த விஷயம் இது ஒன்றுதான். சமத்துவத்துக்கு எதிரிடையாகக் கூறப்படும் நியாயம் ஒருக்கால் பொருத்தமாக இருக்கலாம். எல்லோரும் சமமாக இருக்கவில்லையென்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டியது தான். எனினும் அதனால் என்ன குடிகேடு வந்துவிடப் போகிறது? சமத்துவம் ஒரு கட்டுக்கதையாக இருக்கலாம். எனினும் ஒரு முக்கியமான கொள்கையாக நாம் அதை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். ஒருவனுடைய சக்திக்கு (1) சரீர சம்பந்தமான பரம்பரைக் குணங்கள் (2) வளர்ப்பு, கல்வி, விஞ்ஞான அறிவு மற்றும் மேலான வாழ்க்கைக்குரிய வசதிகள் (3) சுய முயற்சி ஆகியவை காரணமாக இருக்கின்றன. இந்த மூன்று விஷயங்களிலும் மக்கள் சமத்துவமான நிலையிலில்லையென்பது மெய்தான். ஆனால்,

மக்களுக்குள் இவ்விஷயங்களில் சமத்துவம் இல்லாதிருப்பதனால் அவர்கள் எந்நாளும் சமத்துவமில்லாதவர்களாயிருப்பதை நாம் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டுமோ? என்பதே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பிரச்சினை. இதற்குச் சமத்துவ எதிரிகள்தான் விடையளிக்க வேண்டும். மக்களைத் தனித்தனியாகக் கவனித்தால் முயற்சியில் அசமமாக இருப்பவர்களைச் சமத்துவமில்லாதவராகப் பாவிக்க வேண்டியதுதான். எனினும் ஒவ்வொருவருடைய சக்தியும் பூரண வளர்ச்சியடைவதற்குள்ள சந்தர்ப்பங்கள் அளிக்கப்படத்தான் வேண்டும். ஆனால், முதல் இரண்டு விஷயங்களிலும் மக்களுக்குள் சமத்துவம் இல்லாதிருந்தாலும், அவர்களை எந்நாளும் சமத்துவமில்லாதவர்களாகவே வைத்திருந்தால் என்ன நேரும்? பிறப்பு, வளர்ப்பு, கல்வி, குடும்பப் பெருமை, தொழில் சம்பந்தம், பரம்பரைச் சொத்து முதலிய விஷயங்களில் அனுகூலமான நிலையிலிருப்பவர்களே வெற்றியடைவார்கள். அதாவது, விசேஷ உரிமையுடையவர்களே மதிக்கப்படுவார்கள்.

எனவே, மூன்றாவது அம்சப்படி அசமமான நிலையிலிருக்கும் ஒருவன் இந்நாளும் அசமமான நிலையிலிருப்பதை நாம் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாதோ அப்படியே விசேஷ உரிமைகள் இல்லாதவன், என்றும் விசேஷ உரிமைகள் இல்லாதவனாகவே இருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சமத்துவத்தை மறுக்காமலிருப்பதற்கு இது ஒரு காரணமாகும். சமத்துவத்தை ஒப்புக் கொள்வதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது. ராஜ்ய தந்திரி லட்சோப லட்சம் ஜனங்களைக் கவனிக்க வேண்டியவனாக இருக்கிறான்.

எனவே, ஜனங்களில் ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் கவனித்து, அவரவர் தகுதிப்படி நியாயம் வழங்க முடியாது. மக்களுக்குச் சமநீதி வழங்க வேண்டியது எவ்வளவு தேவையாகவும், நீதியாகவும் இருந்தாலும் சரி, மக்கள் சமூகத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து வைக்கவே கூடாது. எனவே, ராஜ்யதந்திரிகள் எல்லோரையும் சமமாகப் பாவிக்க வேண்டியதே முறை. சமத்துவக் கொள்கை கட்டுக்கதையாக இருந்தாலும் அரசியல் வெற்றிக்கும் சமூக ஒழுங்குக்கும் அதை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

# 15

ஆனால், வேறொரு லட்சியத்தை வற்புறுத்தும் ஒரு சீர்திருத்தக் கோஷ்டியாரும் இருந்து வருகிறார்கள். அவர்களே ஆரிய சமாஜிகள். சதுர் வர்ணமே அவர்கள் லட்சியம். அதாவது தற்காலம் அமலில் இருந்து வரும் நாலாயிரம்ஜாதிகளை நான்காகச் சுருக்கிவிட வேண்டுமென்று அவர்கள் முயல்கிறார்கள். தமது கொள்கையில் மக்கள் மயக்கம் கொள்வதற் காகவும் தமது கொள்கைக்கு எதிர்ப்பு ஏற்படாமலிருப்பதற்காகவும் தமது சதுர் வர்ணம் பிறப்பையொட்டியதல்லவென்றும், குணம் அல்லது யோக்கியதையைப் பொறுத்ததென்றும் அவர்கள் கூறிக் கொள்கிறார்கள்.

ஆரிய சமாஜிகளின் சதுர்வர்ணியம் குணத்தைப் பொறுத்ததாயிருந் தாலுங்கூட என்னால் அதை ஆதரிக்க முடியாது. ஆரிய சமாஜிகளின் சதுர்வர்ணியக் கோட்பாட்டின் படி, ஒருவனுக்கு இந்து சமூகத்தில் அவனது குணம் அல்லது திறமைக்குத் தக்கபடி ஸ்தானம் வழங்கப்படுமானால் மக்களுக்கு பார்ப்பனன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்றஜாதிப் பட்டங்களை அவர்கள் வழங்குவதன் மர்மம் எனக்கு விளங்கவில்லை.

படிப்பாளி பார்ப்பனப் பட்டம் சூட்டிக் கொள்ளாமலிருந்தாலும் மதிக்கப்படத்தான் செய்வான். சத்திரியப் பட்டம் சூட்டிக் கொள்ளாவிட்டாலும் ஒரு போர் வீரனை எல்லோரும் கண்ணியம் செய்யத்தான் செய்வார்கள். தமது வீரர்களுக்கும் கல்விமான்களுக்கும் ஜாதிப் பட்டம் சூட்டாமலே அய்ரோப்பியர்கள் மதிப்புக் கொடுத்து வருகையில், இந்து சமூகம் அம்மாதிரி ஏன் செய்யக் கூடாது? இதற்கு ஆரிய சமாஜிகள் திருப்திகரமான விடையளிக்கவில்லை. அந்தச்ஜாதிப் பட்டங்களைச் சூட்டிக் கொள்வதற்கு வேறொரு தடையும் இருக்கிறது.

சில பெயர்களினால் ஏற்படும் கருத்துகளும், உணர்ச்சிகளும் நமது இரத்தத்தோடு கலந்து போவது வழக்கமாக இருக்கிறது. இது அனுபவசித்தமான உண்மை. பழமைக்கு – அதாவது பழைய பழக்க வழக்கங்களுக்கு அறிவு அடிமைப்பட்டுப் போவது சர்வ சாதாரணம். அந்த உணர்ச்சியை ஒழிப்பது அவ்வளவு இலேசான காரியமல்ல. விஷயங்கள் மாறலாம். ஆனால், பெயர்களில் மாற்றமேற்படாமலிருந்தால் அந்தப்

பெயரோடு சம்பந்தப்பட்ட கருத்துகளும், உணர்ச்சிகளும் கிரியாம்சையில் இருந்து கொண்டுதானிருக்கும்.

பிறப்பு காரணமாகச் ஜாதிகளை வகுப்பதற்கும் இந்தச் ஜாதிப் பட்டங்களே காரணமாக இருந்து வந்திருக்கின்றன. பெருமைக்கும் சிறுமைக்கும் அந்தப் பட்டங்கள் அறிகுறிகளாக மதிக்கப்படுகின்றன. ஜனநாயகத் தத்துவத்துக்கு இந்தச் ஜாதிப் பட்டங்கள் முரணானவை. பழைய பட்டப் பெயர்களை ஆதாரமாகக் கொண்ட ஆரிய சமாஜிகளின் சதுர்வர்ணியம் எனக்குப் பிடிக்கவேயில்லை. அதை ஒப்புக் கொள்வதென்பது முடியாத காரியம். வீண் அபிமானத்தை முன்னிட்டு நான் சதுர்வர்ணியத்தை மறுக்கவில்லை. எனது மறுப்புக்கு உறுதியான காரணங்கள் வேறுண்டு. அந்த சதுர்வர்ணியக் கொள்கையை நான் வெகு நுட்பமாக ஆராய்ந்து பார்த்தேன். ஒரு சமூகத் திட்டத்திற்கு சதுர்வர்ணியம் பொருத்தமானதல்ல. அதனால் நன்மையைவிடத் தீமையே அதிகம் உண்டாகும். எனவே, சதுர்வர்ணியத்தை ஆதாரமாகக் கொண்ட எந்தச் சீர்திருத்த இயக்கமும் வெற்றி பெறவே செய்யாது.

## 16

சதுர்வர்ணியம் அனுபவசாத்தியமாக வேண்டுமானால் மனித சமூகத்தை நான்கு குறிப்பிட்ட பிரிவாகப் பிரிப்பது சாத்தியமாக இருக்க வேண்டும். இவ்விஷயத்தில் சதுர்வர்ணியத்துக்கும் பிளேட்டோவின் லட்சியத்திற்கும் நெருங்கிய சம்பந்தமிருப்பது போலத் தோன்றுகிறது. மக்கள் எல்லாம் இயல்பாகவே மூன்று பிரிவினராயிருந்து வருவதாக பிளேட்டோ கருதினார். சிலருக்குப் பசி அதிகமாக இருக்கும். அவர்களை பிளேட்டோ தொழிலாளராக்கினார். வேறு சிலர் அதிகப் பசியுடையவர்களாயிருந்ததுடன் தீரர்களாயுமிருந்தார்கள். தேசப் பாதுகாப்பும் சமாதானப் பரிபாலனமும் அவர்கள் கடமையென பிளேட்டோ வகுத்தார். மற்றும் சிலர் பிரபஞ்சத் தத்துவங்களை உணரும் ஆற்றலுடையவராயிருந்தனர். மக்களுக்கு நீதி சாஸ்திரம் வகுக்க வேண்டியது அவர்களது கடமையென பிளேட்டோ

வரையறுத்தார். பிளேட்டோவின் ஜனநாயகத்துக்குக் கூறப்படும் ஆட்சேபணை சதுர்வர்ணியத்துக்கும் பொருத்தமானதாகவே இருக்கிறது.

மக்களை எல்லாம் நான்கு பிரிவாகப் பிரித்து விடலாம் என்ற நம்பிக்கையே அந்த இரண்டு லட்சியங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறது. மக்களின் சக்தியையும் ஆற்றலையும் சரியாக நிதானம் செய்தவர்கள் அவர்களைக் கூட்டம் கூட்டமாகப் பிரித்து விடலாமென்று எண்ணவே மாட்டார்கள். ஒவ்வொரு தனி நபருக்கும் ஒவ்வொரு தனிக் குணம் இருக்கக் கூடுமென்பதை பிளேட்டோ உணரவே இல்லை. ஒவ்வொரு தனி நபரும் ஒவ்வொரு தனிப் பிரிவாய் இருக்கக் கூடுமென்பதையும் ஒவ்வொருவனும் பிறர் கூறுவதை ஒப்புக்கொள்ள முடியாதென்பதையும் பிளேட்டோ அறியவில்லை. தனி நபர்களின் போக்கிலும் ஒரு சமூகத்தின் போக்கிலும் பலதரப்பட்ட வேற்றுமைகள் இருக்கக் கூடும் என்பதையும் பிளேட்டோ அங்கீகரிக்கவில்லை.

ஒரு கூட்டம் ஆள்களை வரையறுக்கப்பட்ட ஒரு சமூகமாகச் சேர்ப்பது மனித இயல்பை அறியாதவர்கள் செயலாகுமென்றும் சாஸ்திரம் முடிவு கட்டியிருக்கிறது. பிளேட்டோவின் சனநாயக ஏற்பாடு எக்காரணத்தினால் தோல்வியடைந்ததோ அக்காரணத்தினாலேயே சதுர்வர்ணியம் தோல்வியடைவது நிச்சயம். மற்றும் சதுர்வர்ணியம் சரியாக வேலை செய்ய வேண்டுமானால் சதுர்வர்ணியம் தர்மங்களை மீறுகிறவர்களுக்குத் தண்டனை அளிக்க ஒரு சட்டமும் ஸ்தாபனமும் இருக்க வேண்டும்.

ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பார் தொழிலைப் பின்பற்றக் கூடும். அவ்வண்ணம் தொழில் மாறுவோரைத் தண்டிக்கச் சட்டமும் ஸ்தாபனமும் வேண்டும். ஆனால், தண்டனையளிப்பது சாத்தியமல்ல. மனித இயல்புக்கு சதுர்வர்ணியம் முரணாக இருப்பதால் அது தானாகவே அழிந்து போகும். சுய யோக்கியதையினால் அல்லது நலத்தினால் அல்லது பலத்தினால் சதுர்வர்ணியத்துக்கு இயங்கவும் முடியாது; வலுப்பெறவும் முடியாது. தண்டனையில்லாமல் சதுர்வர்ணியம் இயங்கவோ வலுப்பெறவோ முடியாது என்பதற்கும், சம்பூகனை ராமன் கொன்றதாக ராமாயணம் கூறும் கதையே தக்க அத்தாட்சி. சம்பூகனை ராமன் அநியாயமாகவும் அகாரணமாகவும் கொன்றான் என்று சிலர் கூறுகிறார்கள். ராமன் ஒரு அரசனாகையினால் சதுர்வர்ணியத்தைக் காப்பாற்ற அவன் கடமைப்பட்டிருக்கிறான்.

எனவே, சூத்திர தர்மத்தை மறந்து பார்ப்பன தர்மத்தைப் பின்பற்றிய

சூத்திரனான சம்பூகனைத் தண்டிக்க வேண்டியது அரசனான ராமனின் கடமையாகும். ராமன் சம்பூகனைக் கொன்றதற்கு இதுதான் காரணம். இதனால் சதுர்வர்ணியத்துக்கு "பீனல்" தண்டனை இன்றியமையாதது என்பது நன்கு விளங்குகிறது.

அம்மட்டோ!! வெறும் பீனல் தண்டனை மட்டும் போதாது; மரண தண்டனையும் வேண்டும். அதனாலேயே சம்பூகனுக்கு ராமன் லேசான தண்டனையளிக்கவில்லை. அதனாலேயே வேதம் ஓதும் சூத்திரன் நாக்கை அறுக்க வேண்டும், கேட்கும் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்ற கடினமான தண்டனையை மனுஸ்மிருதி வகுத்திருக்கிறது. தற்கால மக்களை நான்கு வர்ணமாகப் பிரிக்க முடியுமென்றும் சதுர்வர்ணத்தைக் காப்பாற்ற மனுஸ்மிருதி சட்டத்தையும் தண்டனைகளையும் மீண்டும் அமலில் கொண்டு வர வேண்டுமென்றும் சதுர்வர்ணிய அபிமானிகள் வாக்குறுதியளிக்க வேண்டும். அவ்வாறு வாக்குறுதியளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும் வரையில் சதுர்வர்ணியம் வெற்றி பெறுமென்று கூறுவதை அடிமுட்டாள்கூட நம்ப மாட்டான்.

## 17

சதுர்வர்ணியம் அநுபவ சாத்தியமானது தான் என்று வைத்துக் கொண்டாலும், அது மிகவும் தீமை பயக்கும் ஏற்பாடு என நான் கூறுகிறேன். பார்ப்பனர்தான் கல்வி கற்று அறிவைப் பெருக்க வேண்டும்; சத்திரியர்தான் ஆயுதம் தாங்கிப் போர் புரிய வேண்டும்; வைசியர்தான் வர்த்தகம், விவசாயம் செய்ய வேண்டும்; சூத்திரர் தான் அடிமைத் தொழில் செய்ய வேண்டும் என்று கூறுவது வெகு சுளுவானதாயும், உத்தமமானதாயும் தோன்றலாம். ஆனால், கிரியாம்சையில் அதனால் என்ன நேரும்? கொஞ்சப் பேருக்காக அதிகப் பேர் வறுமைப்படும்படியாக நேரும். கொஞ்சம் பேருக்காக பெரும்பாலோரின் ஆயுதந் தாங்கும் உரிமை பறிமுதலாக நேரும். கொஞ்சப் பேர் வாழ்க்கையில் வெற்றியும், அறிவும் பெறுவதற்காகப் பெரும்பாலோர் தோல்வியும், மடமையும் பெறும்படி நேரும்.

உலகத்திலே தன் சொந்தச் சமூக ஊழல்களால் கெட்ட நாடு இந்தியாவைப் போல் வேறு எதுவும் இல்லவே இல்லை. தம்மை அடிமைப்படுத்தும் சமூக ஊழியர்களைப் பாமர மக்கள் சகித்துக் கொண்டிருக்கக் காரணம் என்ன? உலகத்திலுள்ள அநேக தேசங்களில் சமூகப் புரட்சிகள் உண்டாயிருக்கின்றன. இந்தியாவில் மட்டும் ஏன் சமூகப் புரட்சிகள் உண்டாகவில்லை? இதைப் பற்றி நான் வெகுநாள் யோசனை செய்தேன்.

இந்தக் கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் எனக்குக் கிடைத்தது. அதாவது சதுர்வர்ணியக் கொடுமையினால் பாமர மக்கள் பலக்குறைவினராக்கப் பட்டிருப்பதனால் அவர்களுக்குப் புரட்சி செய்ய ஆற்றல் இல்லை. அவர்கள் ஆயுதந்தாங்க முடியாது. ஆயுதமின்றிப் புரட்சியில் வெற்றி பெற முடியாது. அவர்கள் எல்லாம் உழவர்கள்; ஏரைக் கட்டி அழ வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டிருப்பவர்கள். கொழுவை வாளாக மாற்றிக் கொள்ள அவர்களுக்கு அனுமதியளிக்கப்படவில்லை; உரிமையில்லை.

சதுர்வர்ணியக் கொடுமையினால் அவர்களுக்கு கல்வி கற்கவும் முடியவில்லை. மோட்சத்துக்கு வழி தேடவோ அறியவோ அவர்களால் முடியவுமில்லை. எந்நாளும் அடிமைகளாகவே இருக்க வேண்டுமென்று அழுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். விடுதலை பெற வழி தெரியாமல் அடிமை வாழ்வு போதுமென்று திருப்தியடைந்து விட்டார்கள். சதுர்வர்ணியத்தைப் போல் மானக்கேடானது வேறு இல்லவே இல்லை. அது மக்களை முயற்சியற்றவராக்கி விட்டது. சுதந்திரம், பெருமை, புகழ் முதலியன நிரம்பியிருந்த காலம் இந்திய சரித்திரத்திலே ஒரே ஒரு காலந்தான்.

அது மவுரிய சாம்ராஜ்ய காலமே! மற்றக் காலங்களில் இந்தியாவில் தோல்வியும் அறியாமையுமே குடி கொண்டிருந்தன.

ஆனால், மவுரிய மன்னர்கள் காலத்திலேயே சதுர்வர்ணியத்துக்குச் சாவு மணியடிக்கப்பட்டது. பாமர மக்களான சூத்திரர்கள் நாட்டாண்மைக்கார ரானார்கள்; சதுர்வர்ணியம் வலுப் பெற்றிருந்த காலத்தில்தான் இந்தியாவுக்கு தோல்வியும் அழிவும் ஏற்பட்டன.

## 18

சதுர்வர்ணியம் புதியதல்ல. வேதங்களைப் போல் அதுவும் மிகப் பழமையானது. சதுர்வர்ணியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று ஆரிய சமாஜிகள் கூறுவதற்கு அதுவும் ஒரு காரணமாகும். முன்னைய அனுபவங்களை ஆராய்ந்து பார்த்தால் வர்ணாசிரம ஏற்பாடு முழுத் தோல்வியடைந்து விட்டது. எத்தனையோ பார்ப்பனர்கள் சத்திரியரை வேரறுத்திருக்கிறார்கள், கருவறுத்திருக்கிறார்கள்.

மகாபாரதத்திலும் மற்றும் புராணங்களிலும் பார்ப்பன – சத்திரியப் போராட்டக் கதைகள் ஏராளமாக இருக்கின்றன. யார் முதலில் வந்தனம் செலுத்த வேண்டும்? பார்ப்பானும் சத்திரியனும் சந்தித்தால் யார் முதலில் வழிவிட்டுக் கொடுக்க வேண்டும்? என்பன போன்ற அற்ப விஷயங்களிலும் கூட அவர்களுக்குள் ஓயாப் போராட்டம் நடந்திருப்பதாகத் தெரிய வருகிறது. பார்ப்பனனைக் காண்பது சத்திரியனுக்கும், சத்திரியனைக் காண்பது பார்ப்பனுக்கும் வெறுப்பாகவும் இருந்தது.

எனவே, சத்திரியர்கள் கொடுங்கோலரானார்கள். ஆயுதம் தாங்கும் உரிமையில்லாத பாமர மக்கள் கொடுங்கோலரான சத்திரியர்களின் இம்சையிலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு கடவுளை வேண்டலானார்கள். சத்திரியர்களை ஒழிப்பதற்காகவே மகாவிஷ்ணு கிருஷ்ணனாய் அவதரித்ததாக பாகவதம் கூறுகிறது. இவ்வண்ணம் வர்ணங்களுக்குள்ளேயே போட்டியும் போரும் நடந்து வந்திருப்பதை நாம் அறிந்திருந்தும் சதுர்வர்ணியத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு, இந்து சமூகத்தை மீண்டும் சீர்திருத்தியமைக்க வேண்டும் என்று கூறுவதை யாராவது ஒப்புக் கொள்வார்களா?

## 19

உங்கள் கொள்கையை ஆதரிக்காதவர்களைப் பற்றி நான் இதுவரை பேசினேன். உங்கள் லட்சியத்துக்கு அவர்கள் முழு எதிரிகளாயிருந்து வருகிறார்கள். ஆனால், உங்கள் கொள்கையை ஆதரிக்கவோ எதிர்க்கவோ செய்யாத வேறு சிலரும் இருக்கிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயங்களைப் பரிசீலனை செய்ய வேண்டுமா? வேண்டாமா? என யோசித்துக் கொண்டிருந்தேன். நெடுநாள் யோசித்த பிறகு அவர்களுடைய அபிப்பிராயங்களையும் பரிசீலனை செய்ய வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தேன்.

முதல்முதலாக, அவர்கள்ஜாதிப் பிரச்சினை விஷயத்தில் நடுநிலைமை மட்டும் வகிக்கவில்லை; போர்க்கோலத்துடன் நடுநிலைமை வகித்து வருகிறார்கள். இரண்டாவதாக, பெரும்பாலோர் அபிப்பிராயத்தையே அவர்கள் தெரிவிப்பதாகவும் தெரிய வருகிறது .அவர்களில் ஒரு கோஷ்டியார்ஜாதியால் தீமை எதுவுமில்லையென்று நினைப்பதாகத் தோன்றுகிறது. அப்பேர்ப்பட்ட இந்துக்கள் – முஸ்லிம்கள் – சீக்கியர்கள் – கிறிஸ்துவர்கள் முதலியவர்களை திருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டி அவர்களுக்குள்ளும்ஜாதியிருப்பதாகக் கூறுகிறார்கள்.

இந்தப் பிரச்சினையை பரிசீலனை செய்யும்போது, உலகத்திலேயே வித்தியாசங்கள் இல்லாத மனித சமூகமே இல்லையென்பதை முக்கியமாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சமூகங்கள் எல்லாம், எப்பொழுதும் இரண்டு பிரிவாகவே இருந்து வருகின்றன. செயல் உலகத்திலே, தனிநபர் ஒரு எல்லையில் நிற்கிறான். சமூகம் மறு எல்லையில் நிற்கிறது. இந்த இரண்டுக்கும் இடையிலே பல திறப்பட்ட கூட்டு ஏற்பாடுகள் – அதாவது, குடும்பங்கள், நட்புகள், கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுக் கம்பெனிகள், அரசியல் கட்சிகள், கொள்கைக் கூட்டத்தார் – நிருபர் சங்கத்தார் முதலியோர் நிற்கிறார்கள்.

இந்தச் சிறு கோஷ்டிகள் உறுதியாக இணைக்கப்பட்டு, அநேகமாகஜாதிகளைப் போலவே தனித்து நிற்கின்றன. அவர்களுக்குக் குறுகிய, ஆனால், கட்டுப்பாடான சங்கங்களும் இருக்கின்றன. அவை பெரும்பாலும் சமூக ஒற்றுமைக்கு தடைகளாகவே இருக்கும்.

அய்ரோப்பாவிலும், ஆசியாவிலும் உள்ள எல்லாச் சமூகங்களும் இம்மாதிரியான நிலையிலேயே இருந்து வருகின்றன. ஒரு சமூகம் உத்தமமான சமூகமா? அல்லவா? என நிர்ணயம் செய்வதற்கு, அந்தச் சமூகத்தில் உட்பிரிவுகள் உண்டா? இல்லையா? எனக் கேட்பது அவ்வளவு உசிதமான கேள்வி அல்ல.

ஏனெனில், எல்லாச் சமூகங்களிலும் உட்பிரிவுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு சமூகம் உத்தமமான சமூகமா அல்லவா? என நிர்ணயம் செய்ய, நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்னவெனில், அந்த உட்பிரிவு களில் பொதுவாக மதிக்கிற பாத்தியதைகள் எத்தனை இருக்கின்றன? மற்றச் சமூகங்களுடன் கலப்பதற்குத் தேவையான வசதிகள் பூரணமாகவும், தடைகள் இல்லாமலும் இருக்கின்றனவா? உட்பிரிவுகளைச் சேர்ப்பதற்குள்ள சக்திகளை விட, பிரிப்பதற்குள்ள சக்திகள் அதிக வலிவுடையனவாக இருக்கின்றனவா? இத்தகைய உட்பிரிவுகள் இருந்து வருவதற்குச் சமூக சம்பந்தமான காரணங்கள் என்ன? அந்த உட்பிரிவுகளுக்குள்ளே இருந்து வரும் விலங்குணர்ச்சி – வழக்கத்தையும் சவுகரியத்தையும் பொறுத்ததா? அல்லது மதத்தைப் பொறுத்ததா? இந்துக்களல்லாதவர்களிடையே இருந்து வரும்ஜாதியுணர்ச்சியும் இந்துக்களிடையே இருந்து வரும்ஜாதியுணர்ச்சியும் ஒரே தன்மையுடையதுதானா? என்பனவற்றை மேற்கூறிய விஷயங்களை மனத்தில் வைத்துக் கொண்டே நாம் நிர்ணயம் செய்ய வேண்டும்.

அந்த விஷயங்களை மனத்தில் வைத்துக் கொண்டு முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிறிஸ்துவர்களிடையே இருந்துவரும்ஜாதிகளையும் இந்து சமூகத்திலுள்ளஜாதிகளையும் ஆராய்ந்து பார்த்தால் இரண்டுக்கும் அடிப்படையான கொள்கைகளில் பெரிய வித்தியாசமிருப்பதைக் கண்டு கொள்ள முடியும். முதலில் இந்துக்களையெல்லாம் ஒன்றுபடுத்தும் அய்க்கிய உணர்ச்சி அல்லது பந்தம் இல்லவே இல்லை. ஒரு சமூகத்தின் உட்பிரிவுகளுக்குள்ளே கூட்டுறவுக்கும் ஒத்துழைப்புக்கும் தேவையான சாதனங்கள் இருந்தால் அந்தச் சமூகம் உறுதியுடையதாக இருக்க முடியும். அத்தகைய சாதனங்கள் இருந்தால்தான் ஒரு சமூகம் உத்தமமானதாயிருக்க முடியுமென்று கார்லைல் என்ற பெரியாரும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

சாதிகளினால் ஏற்பட்டிருக்கும் வேற்றுமையுணர்ச்சியை ஒழிக்க, இந்துச் சமூக அமைப்பில் வழியே இல்லை. ஆனால், இந்துக்களல்லாதாருக்குள்ளே ஒற்றுமையுணர்ச்சியை வளர்க்கத் தக்க சாதனங்கள் ஏராளமாக

இருக்கின்றன. மேலும் இந்துக்களுக்குள்ளே இருப்பது போல இந்துக்களல்லாதாருக்குள்ளும்ஜாதிகள் இருந்தாலும், இந்துக்கள்ஜாதிக்கு அளிப்பது போன்ற மதிப்பை இந்துக்களல்லாதார் அளிப்பதில்லை.

ஒரு முஸ்லிமையோ, சீக்கியனையோ நோக்கி, நீ யார்? என்று கேட்டால் நான் முஸ்லிம் அல்லது சீக்கியன் என்றே விடையளிப்பான். அவனுக்குச்ஜாதியிருந்தாலும்,ஜாதிப் பெயரைச் சொல்லுவதில்லை. அவனது பதிலினால் நீங்கள் திருப்தியடைந்து விடுவீர்கள். முஸ்லிம் என்று சொன்னவுடன் நீ சன்னியா? ஷேக்கா? சையதா? காபுக்கா? பிஞ்சாரியா? என நீங்கள் கேட்பதில்லை. சீக்கியன் என்று சொன்னால் நீ சாதா? ரோடாதா? ஜ்பியா? ராம்தாசியா? என்றும் நீங்கள் கேட்பதில்லை. ஆனால், ஒருவன் தான் இந்து என்றால் அத்துடன் நீங்கள் திருப்தியடைவதில்லை. அவனுடைய ஜாதியை அறிய நீங்கள் ஆசைப்படுகிறீர்கள். ஏனெனில், இந்துக்களுக்கு ஜாதி அவ்வளவு முக்கியமானதாயிருக்கிறது. அவன்ஜாதியை அறியாமல் அவன் எப்பேர்ப்பட்டவன் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள மாட்டீர்கள்.

சாதியாச்சாரங்களினால் ஏற்படும் பலாபலன்களைக் கொண்டும் இந்துக்களல்லாதாருக்குள்ஜாதி அவ்வளவு முக்கியமாக மதிக்கப்படுவதில்லை யென்பதை அறிந்து கொள்ளலாம். முஸ்லிம்களுக்குள்ளும், சீக்கியர்களுக் குள்ளும்ஜாதிகள் இருந்தாலும்,ஜாதியாச்சாரங்களை மீறுகிறவர்களை அவர்கள் சமூகப் பிரஷ்டம் செய்வதில்லை. உண்மையில் சமூகப் பிரஷ்டம் என்பதையே சீக்கியர்களும், முஸ்லிம்களும் அறியார்கள். இந்துக்கள்ஜாதியாச்சாரங்களை மீறினால், உடன் சமூகப் பிரஷ்டம் செய்யப்படுகிறார்கள். இதனால் இந்துக்களின்ஜாதிக்கும் இந்துக்களல்லாதார் ஜாதிக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து கொள்ளலாம்.

இந்துக்களல்லாதாருக்குள்ஜாதி அவ்வளவு முக்கியமில்லை என்பதற்கு இது இரண்டாவது காரணம். மூன்றாவதாகவும் ஒரு காரணமிருக்கிறது. அது மற்றவைகளைவிட மிக முக்கியமானது. இந்துக்களல்லாதாரின்ஜாதிக்கு மத ஆதரவு இல்லை. இந்துக்களல்லாதாருக்குச்ஜாதி ஒரு பழக்கமே. மத சம்பந்தம் பெற்ற ஒரு புனிதமான ஏற்பாடல்ல.ஜாதி உற்பத்திக்கு இந்துக்களல்லாதார் காரணஸ்தர்களுமல்ல. அவர்களுக்குள் அது ஒரு பழைய வழக்கமாகவே இருந்து வருகிறது. அவர்கள்ஜாதியை ஒரு மதக் கோட்பாடாகக் கொள்வதில்லை. இதரச்ஜாதிகளுடன் கலவாமல் தத்தம்ஜாதிகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியது இந்துக்களின் மதக் கடமையாக

இருந்து வருகிறது.ஜாதியை ஒழிக்க இந்துக்கள் முயன்றால் அவர்களுடைய மதம் குறுக்கே நிற்கும். எனவே, இந்துக்களல்லாதாருக்குள்ஜாதிகள் இருந்தாலும் அந்தச்ஜாதிக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கப்படுகிறது என்பதை உணராமல், இந்துக்களல்லாதாருள்ளும்ஜாதி இருக்கத்தான் செய்கிறது எனத் திருப்தியடைவது மிகவும் ஆபத்தான முடிவாகும். அந்த மயக்கம் இந்துக்களிடம் ஒழிந்தால்தான் நன்மையுண்டாகும்.

மற்றொரு சாரார்,ஜாதியைப் பற்றிக் கவலைப்படத் தேவையே இல்லை என்கிறார்கள். இந்துக்களுக்குள்ஜாதிகள் இருந்தாலும் இந்து சமூகம் இதுவரை அழியாமல் இருக்கிறதே, மேலும் அழியப் போவதுமில்லை என அவர்கள் திருப்தியடைகிறார்கள். இதை, வாழ்க்கையைப் பற்றிய இந்துக்கள் கருத்து என்ற நூலில் புரொஃபசர் சர்.ராதாகிருஷ்ணனும் வற்புறுத்தியிருக் கிறார். அவர் கூறியிருப்பதாவது –

“இந்து நாகரிகம் இன்றோ நேற்றோ உண்டானதல்ல. அது தோன்றி நான்கு அல்லது அய்ந்து ஆயிரம் வருடங்களுக்கு மேலாகிறது. அந்தக் காலத்திலேயே அது மிகவும் உயரிய நிலையில் இருந்திருக்கிறது. அம்மட்டோ? அந்த நாகரிகம் இடையறாது வளர்ந்து கொண்டும் வந்திருக்கிறது.; இந்த நான்கு அய்ந்து ஆயிர வருட காலமாக எத்தனையோ எதிர்ப்புகளையும், கஷ்டங்களையும், ஆபத்துகளையும் அது சமாளித்தும் வந்திருக்கிறது. சரித்திர கால ஆரம்ப முதற்கொண்டு பலஜாதியாரும், மதத்தாரும் இந்தியாவில் வந்து குவிந்து கொண்டிருந்தும், இந்து மதத்தின் பெருமை ஒழியவில்லை. சர்க்கார் உதவி பெற்ற மதமாற்றக்காரராலும் இந்து மதத்தையோ, நாகரிகத்தையோ அசைக்க முடியவில்லை. இந்துக்களில் பெரும்பாலோர் அபிப்பிராயங்களிலும் மாற்றமேற்படவில்லை. இந்து நாகரிகத்தில் ஏதோ ஒரு ஜீவசக்தி இருந்து கொண்டு இருக்கிறது. ஆர்ப்பாட்டம் செய்யும் வலிமை பொருந்திய இதர நாகரிகங்களுக்கு அந்த ஜீவசக்தி இருப்பதாய்த் தெரியவில்லை. ஒரு மரத்தில் பால் அல்லது ஜீவரசம் இருக்கிறதா? என அறிய, அதை வெட்டிப் பார்க்க எப்படித் தேவையில்லையோ? அப்படியே இந்து மதத்தின் ஜீவசக்தியைக் கண்டுபிடிக்க, அதை வெட்டிப் பார்க்க வேண்டியதேயில்லை.”

புரொஃபசர் ராதாகிருஷ்ணன் மிக்க புகழ் பெற்றவர். எனவே, அவரது அபிப்பிராயத்தை அதிகம் பேர் ஆதரிக்கத்தான் செய்வார்கள். எனினும், மனம் விட்டுப் பேச நான் தயங்கவில்லை. இந்து மதம் இதுவரை

அழியாமலிருப்பதனால், அது ஒரு நாளும் அழியப் போவதில்லையென்று அவர் கூறுவது ஒரு கெட்ட வாதமாகும். ஒரு சமூகம் வாழ்கிறதா? அழிகிறதா? என்பது அவ்வளவு முக்கியமான ஒரு பிரச்சினையில்லை. எந்த ஆதாரத்தின்பேரில் அது வாழ்கிறது என்பதே முக்கியமான பிரச்சினை. அழியாமல் இருப்பதற்குக் காரணங்கள் பல இருக்கலாம். அந்தக் காரணங்கள் எல்லாம் கவுரவமானவைகளாக இருக்க மாட்டா.

ஒரு தனி மனிதனுக்கானாலும் சரி – ஒரு சமூகத்துக்கானாலும் சரி – வெறும் வாழ்வுக்கும் மதிப்புடைய வாழ்வுக்கும் இடையே ஒரு கால்வாய் இருக்கத்தான் செய்கிறது. அதாவது, வெறும் வாழ்வுக்கும் கவுரமான வாழ்வுக்கும் பெரிய வித்தியாசமுண்டு. போர்க்களத்தில் போராடிய புகழுடன் வாழ்வதும் ஒரு வாழ்வுதான். போரில் தோற்று எதிரிகளுக்குக் கீழ்ப்படிந்து கைதியாக வாழ்வதும் ஒரு வாழ்வுதான். எனவே, எவ்வளவோ ஆபத்துகளைச் சமாளித்துக் கொண்டு இந்துச் சமூகம் அழியாமலிருக்கிறது எனப் பெருமையடித்துக் கொள்வதற்குப் பொருளே இல்லை. ஆனால், இந்துச் சமூக அழியாமை எத்தன்மையது? எனப் பார்க்க வேண்டியதே மிக முக்கியம். இந்துக்களின் வாழ்வு தொடர்ச்சியாகத் தோல்வியடைந்து கொண்டே வந்திருக்கிறது. அவர்களுக்கு நித்தியமாகத் தோன்றும் வாழ்வு, உண்மையில் இடையறாது அழிந்து கொண்டிருக்கும் வாழ்வேயாகும். அத்தகைய வாழ்வை விவேகிகளான இந்துக்கள் மதிப்பதில்லையெனினும், அதை ஒப்புக்கொள்ள வெட்கப்படுகிறார்கள்.

## 20

உங்கள் சமூக அமைப்பை மாற்றாமல், ஒரு அங்குல அளவாவது முன்னேறிச் செல்ல முடியவே முடியாது. தேசத்தைப் பாதுகாக்கவோ அல்லது வேறு தேசங்களோடு போர் தொடுக்கவோ சனங்களை ஒன்றுதிரட்ட முடியாது.ஜாதியை அஸ்திவாரமாக வைத்துக் கொண்டு எந்தக் கட்டடத்தையுமே கட்ட முடியாது. “நேஷனை” உருப்படுத்தவும் முடியாது. ஒழுக்கத்தை வளர்க்கவும் முடியாது.ஜாதியை

ஆதாரமாக வைத்துக் கொண்டு செய்யப்படும் எதுவும் உருப்படவே செய்யாது; அழிவது நிச்சயம்.

ஆகவே, இந்துச் சமூகத்தை எப்படிச் சீர்திருத்துவது?ஜாதியை எப்படி ஒழிப்பது? என்பவைகளே இப்பொழுது முக்கியப் பிரச்சினையாக இருந்து வருகிறது.ஜாதியைச் சீர்திருத்துவதற்கு உபசாதியை ஒழிப்பதே ஏற்ற முதல் வழி என ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது.ஜாதிகளுக்குள் இருப்பதைவிட உபசாதிக்குள் ஒழுக்கத்திலும், அந்தஸ்திலும் மிக்க ஒற்றுமை இருக்கிறதென்ற நம்பிக்கையே அந்த அபிப்பிராயத்திற்குக் காரணமாகும். ஆனால், இது தவறான முடிவென்றே நான் கருதுகிறேன்.

வடநாட்டுப் பார்ப்பனர்களும், மத்திய இந்தியப் பார்ப்பனர்களும், தக்காணத்துப் பார்ப்பனர்களையும், தென்னிந்தியப் பார்ப்பனர்களையும்விட சமூக அந்தஸ்தில் மிகவும் கீழான நிலைமையிலேயே இருந்து வருகிறார்கள். வடநாட்டுப் பார்ப்பனர்களும், மத்திய இந்தியப் பார்ப்பனர்களும் சமையற்கார ராயும், தண்ணீர் எடுப்பவராயுமே இருந்து வருகிறார்கள்.

தக்காணப் பார்ப்பனர்களும், தென்னிந்தியப் பார்ப்பனர்களும் சமூக வாழ்வில் மிக அந்தஸ்தான நிலைமையிலிருக்கிறார்கள். மற்றும் வட இந்தியாவில் வைசியர்களும், காயஸ்தர்களும், தக்காணப் பார்ப்பனர்களுக்கும், தென்னிந்தியப் பார்ப்பனர்களுக்கும் சமமான அந்தஸ்தில் இருந்து வருகிறார்கள். மற்றும் தக்காணப் பார்ப்பனர்களும், தென்னிந்தியப் பார்ப்பனர்களும் சைவ உணவுக்காரர்கள். காஷ்மீர்ப் பார்ப்பனர்களும், வங்காளப் பார்ப்பனர்களும் மாமிச உணவுக்காரர்கள். எனவே, உணவு விஷயத்தில் அவர்களுக்குள் ஒற்றுமையில்லை. ஆனால், தக்காணப் பார்ப்பனர்களுக்கும், தென்னிந்தியப் பார்ப்பனர்களுக்கும் உணவு விஷயத்தில் குஜராத்திகள், மார்வாரிகள், பனியாக்கள், ஜைனர்கள் முதலிய பார்ப்பனரல்லாதாரோடு ஒற்றுமை காணப்படுகிறது. எனவே, சைவ உணவுக்காரரான பார்ப்பனரல்லாதார் சைவப் பார்ப்பனர்கள்ஜாதியில் சுளுவாகச் சேர்ந்து கொள்ள வசதியிருக்கிறது.

வடஇந்தியக் காயஸ்தர்களையும், தென்னிந்தியாவிலுள்ள இதரப் பார்ப்பனரல்லாதாரையும் ஒன்று சேர்ப்பது அனுபவ சாத்தியமாக இருக்கிறது. ஆனால், தென்னாட்டுப் பார்ப்பனர்களையும், வட இந்தியப் பார்ப்பனர்களையும் ஒன்று சேர்ப்பது அனுபவ சாத்தியமாகத் தோன்றவில்லை. உபஜாதிகளை

ஒன்று சேர்ப்பது சாத்தியெமன்று வைத்துக் கொண்டாலும் உபசாதிகளை ஒழிப்பதனால் மற்றச்ஜாதிகள் ஒழிந்து விடும் என்பதற்கு என்ன உறுதி? மாறாக, உபஜாதிகளை ஒழிப்பதுடன்ஜாதியொழிப்பு வேலை நின்று விடவும் கூடும். உண்மையில் உபசாதிகளை ஒழித்துவிட்டால் மற்றஜாதிகள் வலுப் பெற்று முன்னைவிட அதிகத் தொல்லைகள் விளைவிக்கத் தொடங்கும். எனவே, அந்த வழி அநுபவ சாத்தியமானதுமல்ல, பலனளிக்கக் கூடியதுமல்ல.

மற்றும், பல திறப்பட்டஜாதிகளுக்கும் சமபந்தி போசனம் நடத்துவது,ஜாதிகளை ஒழிப்பதற்கு வேறு ஒரு வழி எனச் சிலர் கூறுகிறார்கள். இதுவும் பயனற்ற யோசனையென்பதே எனது கருத்து. சமபந்தி போசனம் செய்கின்ற எத்தனையோஜாதிகள் இருக்கின்றன. எனினும்ஜாதியுணர்ச்சியைச் சமபந்தி போசனம் ஒழிக்கவில்லை. இது எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டிய உண்மை.ஜாதி ஒழிப்புக்கு நேரான வழி கலப்பு மணமே. இரத்தக் கலப்பினால் உறவு உணர்ச்சி – சகோதர உணர்ச்சி உண்டாகும். சகோதர உணர்ச்சி தோன்றாதவரை வேற்றுமையுணர்ச்சி இருந்து கொண்டு தானிருக்கும்.

இந்துக்களுக்குள்ளே கலப்பு மணம் மிகவும் சக்தி யுடையதாயிருக்கும். சமூகம் இதர அம்சங்களினால் நன்கு இணைக்கப்பட்டிருந்தால் கலியாணம் ஒரு சாதாரண விஷயந்தான். ஆனால், சமூகம் பிளவுபட்டிருப்பதால் அதை இணைப்பதற்குக் கலியாணம் ஒரு சரியான வழியாகும். ஆகவேஜாதியை ஒழிப்பதற்கு உண்மையான வழி கலப்பு மணமே. வேறு எதனாலும்ஜாதி ஒழியாது. உங்கள் சாட் – பட் – தோடக் மண்டலத்தார் இந்த வழியைப் பின்பற்றிச்ஜாதியைத் தகர்க்க முன்வந்திருக்கிறார்கள்.ஜாதியை ஒழிப்பதற்கான சரியான வழியைக் கண்டுபிடித்ததற்காகவும் இந்து சமூ கத்தின் தவற்றைத் தைரியமாக எடுத்துக் கூறுவதற்காகவும் உங்கள் மண்டலத்தாரை வாழ்த்துகிறேன்.

அரசியல் கொடுமையைவிட சமூகக் கொடுமையே மிகப் பயங்கரமானது. எனவே,ஜாதிக் கொடுமையை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்தவாதியே அரசியல்வாதியைவிட அதிகத் தைரியசாலி. சமபந்தி போசனங்களும் கலப்பு மணங்களும் தடையின்றி ஏராளமாக நடைபெற்றால்ஜாதி தேய்ந்து மாய்ந்து ஒழிந்து போகுமென்று நீங்கள் கூறுவது சரியே. நோயின் உற்பத்தி ஸ்தானத்தை நீங்கள் கண்டுபிடித்து விட்டீர்கள். ஆனால், அதற்குப்

பரிகாரமாக நீங்கள் கூறும் மருந்து சரியான மருந்துதானா? இந்தக் கேள்வியை நீங்களே பலமுறை கேட்டுப் பாருங்கள்.

இந்துக்களில் பெரும்பாலோர் சமபந்திபோசனம் செய்யாதிருக்கவும், கலப்பு மணம் செய்யாதிருக்கவும் காரணமென்ன? சாட் – பட் – தோடக் மண்டலத்தாரின்ஜாதி ஒழிப்பு லட்சியத்துக்கு பொதுஜன ஆதரவு இல்லாதிருக்கக் காரணம் என்ன? இந்துக்கள் புனிதமாக மதிக்கும் மதக் கொள்கைகளுக்கு சமபந்தி போசனமும், கலப்பு மணமும் முரணாக இருப்பதே காரணம்.ஜாதி – இந்துக்கள் ஒன்றுபடாமல் தடுக்கும் சுவராகவோ, முள்வேலியாகவோ அல்ல. அது சுவராகவோ, முள்வேலியாகவோ இருந்தால் வெட்டியெறிய வேண்டியதுதான். ஆனால், உண்மையில்ஜாதி ஒரு மனப் பிராந்தி – கற்பனை. எனவே, அந்த மனப் பிராந்தியக் கற்பனைக் கருத்து ஒழிந்தால்தான்ஜாதி ஒழியும்.

சாதி கெட்டதாக இருக்கலாம். ஜீவகாருண்யத்துக் கருத்தல்லாததாய் இருக்கலாம். எனினும் இந்துக்கள் ஜீவகாருண்யமற்றவர்களாகவோ, மூடர்களாகவோ இருப்பதனால்ஜாதியை ஆதரிக்கிறார்கள் என்று கூற முடியாது. இந்துக்கள் மிக்க மதப்பற்றுடையவர்களாயிருப்பதனாலேயேஜாதி யாச்சாரங்களை அநுஷ்டிக்கிறார்கள். ஜாதியாச்சாரங்களை அநுஷ்டிக்கும் மக்கள் குற்றவாளிகளல்ல. ஜாதி புனிதமானது என்ற உணர்ச்சியை உண்டு பண்ணிய மதமே வாஸ்தவத்தில் குற்றவாளி. இது உண்மையானால் உங்கள் எதி ரிஜாதியாச்சாரங்களை அநுஷ்டிக்கும் மக்கள் அல்லர்,ஜாதியாச்சாரங் களைப் புனிதமாக வற்புறுத்தும் சாஸ்திரங்களே உங்கள் எதிரி. எனவே, அந்த எதிரியை ஒழிக்கவே நீங்கள் முயல வேண்டும்.

சமபந்தி போசனம் செய்யாதவர்களையும் கலப்பு மணம் செய்யாதவர்களையும் கண்டித்துக் கேலி செய்வதனாலும், அடிக்கடி சமபந்தி போசனங்களும், கலப்பு மணங்களும் நடத்துவதனாலும் நீங்கள் விரும்பும்ஜாதியொழிப்பு நிறைவேறவே செய்யாது. சாஸ்திரங்கள் எல்லாம் புனிதமானவை என்ற நம்பிக்கை ஒழிந்தால்தான் உங்கள் நோக்கம் கைகூடும். மக்களுடைய கருத்துகளையும், நம்பிக்கைகளையும் சாஸ்திரங்கள் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கும் வரை உங்கள் லட்சியம் கைகூடவே செய்யாது. சாஸ்திர ஆதாரங்களைக் கண்டிக்காமல், சாஸ்திரங்கள் எல்லாம் புனிதமானவை என்று மக்கள் நம்பும்படி விட்டுவிட்டு அவர்கள் செயலைக் கண்டிப்பது புத்திசாலித்தனமாகாது; அது சரியான சமூகச் சீர்திருத்த வழியுமாகாது.

ஜனங்களின் செயல்களுக்கு அவர்களது மதநம்பிக்கையே காரண மென்பதை மகாத்மா காந்தியுள்பட தீண்டாமையை யொழிக்க முயலும் சீர்திருத்தக்காரர்கள் எல்லாரும் உணரவே இல்லை. எனவே, அவர்கள் முயற்சி வீணாவதைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்கில்லை. நீங்களும் ஏனைய சீர்திருத்தக்காரர்களின் தப்பு வழியையே பின்பற்றுகிறீர்கள். சமபந்தி போசனம் நடத்துமாறும், கலப்பு மணம் செய்யுமாறும் கிளர்ச்சி செய்வது வலுக்கட்டாயமாக உணவூட்டும் முறையாகும். மக்களின் மதவிலங்கை – சாஸ்திரங்களை உடைத்தெறியுங்கள். அவர்களது உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் மதநம்பிக்கை அழுக்குகளை அகற்றிச் சுத்தம் செய்யுங்கள். அப்படிச் செய்தால் மக்கள் எல்லாம் தாராளமாகச் சமபந்தி போசனம் நடத்துவார்கள். கலப்புமணம் செய்வார்கள்.

சிலேடையாகவும், கூடார்த்தமாகவும் பேசி மழுப்புவதனால் பலனேற்படாது. சாஸ்திரக் கருத்துகளை பலவாறாக பாஷ்யம் செய்வதனாலும் பயன் ஏற்படாது. சாஸ்திரங்களின் பொருள் ஏதாயிருந்தால் என்ன? ஜனங்கள் அதை எப்படி நம்பினால் என்ன? புத்தரைப் போல் நீங்கள் செயலாற்ற வேண்டும். குருநானக்கைப் போல் செயலாற்ற வேண்டும். சாஸ்திரங்களை நிராகரித்தால் மட்டும் போதாது. புத்தரும், நானக்கும் கூறியதுபோல் சாஸ்திரங்கள் பொய் என்று கூற வேண்டும்;ஜாதி புனிதமானது என்ற உணர்ச்சிக்கு மதமே காரணமென்றும், மதம் ஒழிந்தால்தான் மக்கள் முன்னேற்றமடைவார்கள் என்றும் நீங்கள் கூற வேண்டும். அவ்வாறு கூற உங்களுக்கு ஆண்மையுண்டா?

## 21

உங்கள் சீர்திருத்த இயக்கம் வெற்றி பெற வசதிகள் இருக்கின்றனவா? சமூகச் சீர்திருத்தம் இரு வகைப்படும். ஒன்று, மத நம்பிக்கையைப் பாதிக்காதது – அதாவது லவுகீக சம்பந்தமானது. இரண்டாவது, சனங்களின் மத நம்பிக்கைகளைப் பாதிக்கக் கூடியது. அத்தகைய சீர்திருத்தங்களில் இரண்டு உள்பிரிவுகளும் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று மதக் கொள்கைகளுக்கு அனுகூலமானது; மதக்

கொள்கைகளையும், ஆச்சாரங்களையும் துறந்தவர்கள் மீண்டும் அவைகளைப் பின்பற்றி வாழ்க்கை நடத்தும்படி தூண்டுவது. இரண்டாவது, மதக் கொள்கைகளையும், ஆச்சாரங்களையும் துறந்து அவைகளுக்கு முரணாக சுதந்திரமான வாழ்க்கை நடத்தும்படி வற்புறுத்துவது.

சாதி தோன்றியதற்கு சில மதக் கொள்கைகளே காரணம். அக்கொள்கை களைச் சாஸ்திரங்கள் ஆதரிக்கின்றன. தெய்வீகச் சக்தியுடைய ஞானி களினால் அந்த சாஸ்திரங்கள் எழுதப்பட்டன என்றும் நம்பப்படுகிறது. எனவே அந்த சாஸ்திரங்களுக்கு மாறாக நடப்பது பாபம் என்று நம்பப்படுகிறது.ஜாதியை ஒழிக்கும் சீர்திருத்தம் மேலே கூறிய மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தது.ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று கூறுவது சாஸ்திரங்களுக்கு விரோதமாக நடக்க வேண்டுமென்று தூண்டுவதாகும். முதல் இரண்டு சீர்திருத்தங்களும் அவ்வளவு கஷ்டமானவை அல்ல. ஆனால் மூன்றாவது முறைச் சீர்திருத்தம் மிகவும் கஷ்டமானதாகும். சமூக அமைப்பு மிகவும் புனிதமானதென்றும் இந்துக்கள் மதிக்கிறார்கள்.ஜாதி தெய்வீகமானதென்றும் இந்துக்கள் மதிக்கிறார்கள்.ஜாதி தெய்வீகமானதென்று இந்துக்கள் நம்புகிறார்கள். எனவே,ஜாதியோடு இணைக்கப்பட்டிருக்கும் புனிதத்தையும், தெய்வீகத்தையும் முதன்முதலில் நீங்கள் அகற்ற வேண்டும். அதாவது,ஜாதிக்கு வேத சாஸ்திர ஆதாரங்கள் இல்லையென்று நீங்கள் நிரூபிக்க வேண்டும்.

சில இலட்சியத்தை அறிந்து கொள்வதைப் பார்க்கிலும், அந்த இலட்சியத்தை அடைவதற்குள்ள வழிகளையும், முறைகளையும் அறிவதே மிகவும் முக்கியமானதாகையினால்ஜாதியை ஒழிக்கும் மார்க்கங்களையும் முறைகளையும் நான் முக்கியமாக வற்புறுத்திப் பேசுகிறேன். வழிகளையும், முறைகளையும் நீங்கள் சரியாக அறிந்து கொள்ளாவிட்டால் உங்கள் முயற்சிகள் எல்லாம் வீணாவது நிச்சயம். என் ஆராய்ச்சியும், அதனால் நான் கண்ட முடிவும் சரியாக இருக்கும் பட்சத்தில், உங்கள் முன் நிற்கும் வேலை மலையளவு பெரியதாக இருக்கிறது. அந்த வேலையைச் செய்து முடிக்க உங்களால் ஆகுமா? ஆகாதா? என்பதை உங்களால்தான் கூற முடியும்.

உங்கள் முன் நிற்கும் வேலை மிக அசாத்தியமானதென்பதே என் சொந்த அபிப்பிராயம். நான் இவ்வாறு கூறக் காரணம் என்ன? என ஒருக்கால் நீங்கள் கேட்கக் கூடும். நான் அவ்வாறு எண்ணுவதற்கு ஆதாரமாகவுள்ள

பல காரணங்களில் சிலவற்றை மட்டும் நான் இங்கே விளக்கிக் கூறுகிறேன். சீர்திருத்த முயற்சிகளுக்குப் பார்ப்பனர்கள் பரமசத்ருக்களாக இருப்பது முதற்காரணம். அரசியல் சீர்திருத்தத் துறையிலும் சில பொருளாதாரச் சீர்திருத்தத் துறைகளிலும் பார்ப்பனர்களே முன் நிலையில் நிற்கிறார்கள். ஆனால்,ஜாதியை ஒழிப்பதற்காகத் தோன்றியுள்ள இயக்கங்களில் அவர்கள் முக்கியமாகப் பங்கு கொள்வதே இல்லை. எதிர்காலத்திலாவது அவர்கள் முக்கியப் பங்கு எடுத்துக் கொள்வார்கள் என நம்புவதற்கு இடமிருக்கிறதா? அதுவுமில்லை. ஏன்? என்று நீங்கள் கேட்கலாம். சமூகச் சீர்திருத்தத்துக்குப் பார்ப்பனர்கள் முட்டுக்கட்டையாக இருக்க மாட்டார்கள் என்றுகூட நீங்கள் கூறலாம்.

இந்துச் சமூகத்துக்குச் ஜாதி ஒரு களங்கமாயிருப்பதைப் பார்ப்பனர்கள் அறிவார்கள் என்றும், அறிவாளிகளான பார்ப்பனர்கள்ஜாதியினால் ஏற்படக் கூடிய தீமைகளைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்றும் நீங்கள் சொல்லாம். பார்ப்பனர்களுக்குள் லவுகீகப் பார்ப்பனர்களும், வைதீகப் பார்ப்பனர்களும் இருக்கிறார்கள் என்றும், வைதீகப் பார்ப்பனர்கள்ஜாதியொழிப்பை ஆதரிக்காவிட்டாலும், லவுகீகப் பார்ப்பனர்கள் ஆதரிப்பார்கள் என்றும் நீங்கள் தெரிவிக்கலாம். வெளிப் பார்வைக்கு நீங்கள் கூறுவனவெல்லாம் சரியானவைகளாகவே தோன்றுகின்றன. ஆனால்,ஜாதி ஒழிந்தால் பார்ப்பன சமூகத்துக்குப் பேராபத்து உண்டாகுமென்பதை அநேகர் உணர்வதில்லை. எனவே, சாதியை ஒழிக்கக் கூடியஜாதி ஒழிப்பு இயக்கத்தைப் பார்ப்பனர்கள் ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

பார்ப்பனர்களை லவுகீகப் பார்ப்பனர்கள் என்றும், வைதீகப் பார்ப்பனர்கள் என்றும் இரு பிரிவாகப் பிரிப்பதும், லவுகீகப் பார்ப்பனர்கள் முற்போக்காளரா யிருப்பார்கள் என நம்புவதும் முட்டாள்தனமாகும். இருசாராரும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் இருவரும் ஒரு உடம்பின் இரு கைகளாகிறார்கள். எனவே, ஒரு கையைக் காப்பாற்ற மற்றொரு கை போராடத்தான் செய்யும். ''இங்கிலீஷ் அரசியல் அமைப்பு'' என்ற நூலில் புரொஃபசர் டிசோ என்பவர் கூறியுள்ள ஓர் அபிப்பிராயத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் பார்வைக்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவர் கூறியிருப்பதாவது –

ஒரு அரசன் அல்லது ஒரு பார்லிமென்டின் அதிகாரத்துக்கு இரண்டு விதமான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று

புறச்சார்புடையது, மற்றொன்று அகச்சார்புடையது. பிரஜைகள் அனைவருமோ அல்லது பெரும்பாலாரோ அரசன் அல்லது பார்லிமெண்டு வெளியிடும் கட்டளைகளை மீறுவார்களா அல்லது எதிர்ப்பார்களா என்பதில் புறச்சார்பான கட்டுப்பாடு அடங்கியிருக்கிறது. இரண்டாவதான அகக் கட்டுப்பாடு அரசன் அல்லது பார்லிமென்டின் குணத்தைப் பொறுத்தது. ஒரு யதேச்சாதிகாரிதான் இஷ்டப்படியே அரசு நடத்துவான். அவனது இஷ்டம் சுற்றுச் சார்புகளையும், வாழ்க்கை முறையையும் தழுவியதாக இருக்கும். ஒரு சுல்தானுக்கு அவன் விரும்பினால் முஸ்லிம் உலக மதத்தை மாற்ற முடியாது. அவன் அப்படிச் செய்தால் இஸ்லாம் மதத் தலைவனே இஸ்லாம் மதத்தை ஒழித்துவிட்டதாக ஏற்படும். எனவே, அது அசம்பாவிதமானது. இவ்விஷயத்தில் புறக் கட்டுப்பாடும், அகக் கட்டுப்பாடும் அநேகமாகச் சமநிலையில் இருக்கிறது. இந்தச் சீர்திருத்தத்தை போப் ஏன் அமலில் கொண்டு வரவில்லை? என்றெல்லாம் பலர் முட்டாள்தனமாகக் கேட்கிறார்கள். இதற்கு விடையென்னவெனில், “புரட்சி மனப்பான்மையுடையான் போப் ஆகவே மாட்டான். போப் ஆகும் மனிதன் புரட்சி செய்ய விரும்பவும் மாட்டான்.”

இந்த அபிப்பிராயங்கள் இந்தியப் பார்ப்பனர்களுக்கும் பொருத்தமாக இருக்குமென்றே நம்புகிறேன். போப் ஆகிறவன் புரட்சி செய்ய விரும்ப மாட்டான் என்றால், பார்ப்பனனாகப் பிறந்தவனும் புரட்சி செய்ய மாட்டான் என்பது நிச்சயம். பார்ப்பனனாகப் பிறந்தவன் சமூகப் புரட்சிக்குக் காரணமாயிருப்பான் என்று எதிர்பார்ப்பது ஒரு சந்தர்ப்பத்தில் தோழர் லெஸ்லி ஸ்டீபன் கூறியது போல, நீலக்கண் உடைய குழந்தைகளையெல்லாம் கொன்று விட வேண்டு மென்று பிரிட்டிஷ் பார்லிமெண்டு சட்டமியற்றும் என எதிர்பார்ப்பதற்கே ஒப்பாகும்.

சாதி ஒழிப்பு இயக்கத்துக்குத் தலைமை வகிக்கப் பார்ப்பனர்கள் முன்வருவார்களா? மாட்டார்களா? என்பது அவ்வளவு முக்கியமான பிரச்சினை அல்லவென ஒருக்கால் நீங்கள் சொல்லக் கூடும். இவ்வாறு கூறுவோர் ஒரு சமூகத்திலுள்ள அறிவாளிகளுக்கு அந்தச் சமூகத்தில் எவ்வளவு செல்வாக்கு இருக்க முடியுமென்பதை அறியாதவர்களேயாவர். ஒரு நாட்டின் சரித்திரத்தை உருப்படுத்துவது அந்நாட்டுப் பெரியோர்களே என்ற தத்துவத்தை நீங்கள் ஒப்புக் கொண்டாலும் சரி, கொள்ளாவிட்டாலும் சரி, அறிவாளிகள் மிகுந்த ஒரு சமூகம் ஒரு நாட்டை ஆளாவிட்டாலும் மிக்க

செல்வாக்குடையதாக இருக்குமென்பதை நீங்கள் ஒப்புக் கொண்டுதானாக வேண்டும்.

பின்னால் நேரப் போகும் காரியங்களை முன்னால் அறியக் கூடிய சக்தி அறிவாளிகளடங்கிய சமூகத்துக்கே உண்டு. தேச மக்களுக்கு நேர்வழி காட்டி, தலைமை வகித்து நடத்த வேண்டியதும் அந்தச் சமூகமே. எந்தத் தேசத்திலும் பாமர மக்கள் சுயமாகச் சிந்திப்பதுமில்லை; செயலாற்றுவதுமில்லை. அறிவாளிகளைப் பின்பற்றியே பாமர மக்கள் செயலாற்றுகிறார்கள். ஒரு தேசத்தின் க்ஷேமம் அந்தத் தேசத்தின் அறிவாளிகள் போக்கைப் பொறுத்திருக்கிறதென்பது, கேவலம் புனைந்துரையல்ல. அறிவாளிகள் நேர்மையுடையவர்களாயும், சுதந்திரர்களாயும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாயும் இருந்தால், ஆபத்துக் காலத்தில் தேச மக்களுக்கு அவர்கள் நல்வழி காட்டுவார்கள். அறிவு மட்டும் அவ்வளவு முக்கியமல்லவென்று சிலர் சொல்லக்கூடும்.

அறிவானது ஒழுக்கம் அல்லது நற்குணத்துக்குக் கருவேயாகும். எனவே, அவனவன் நோக்கத்துக்கு அனுகூலமாகவே ஒவ்வொருவனும் தன் அறிவைப் பயன்படுத்துவான். அறிவாளி நல்லவராயும் இருக்கலாம்; தீயவராயுமிருக்கலாம். அதுபோலவே அறிவாளிகளடங்கிய ஒரு சமூகம், தப்பு வழியில் செல்கிறவர்களுக்குக் கை கொடுத்து உதவும் தப்பான இலட்சியங்களுடைய ஒரு சமூகமாகவும் இருக்கலாம்; அல்லது குறுகிய நோக்கமுடைய சுயநலக்காரர்களாயும் இருக்கலாம். இந்தியாவில் அறிவாளிகள் எல்லாம் பார்ப்பனராயிருப்பதைப் பற்றி நீங்கள் வருந்தலாம். அறிவாளிகளும் பார்ப்பனர்களும் ஒரே பொருளைக் குறிக்கும். இருவராயிருப்பதைப் பற்றியும் நீங்கள் சங்கடப்படலாம். அறிவாளிகள் எல்லாம் பார்ப்பனர்களாயிருப்பதையும் அவர்கள் தேச நலத்தை முக்கியமாகக் கருதாமல்ஜாதி நலத்தை முக்கியமாகக் கருதி உழைப்பதையும் பார்த்து நீங்கள் மனம் வருந்தலாம். இவையெல்லாம் வருந்தக் கூடியவை தான். எனினும், இந்துக்களில் பார்ப்பனர்களே அறிவாளிகளாயிருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

பார்ப்பனச் சமூகம் அறிவாளிகள் நிறைந்த சமூகமாக மட்டுமே இருக்கவில்லை. இந்துக்களால் நன்கு மதிக்கப்பட்ட சமூகமாகவும் இருந்து வருகிறது. பார்ப்பனர்கள் பூ தேவர்கள் என இந்துக்களுக்குப் போதனை செய்யப்பட்டிருக்கிறது. இந்துக்களுக்குப் பார்ப்பனர்களே குரு

ஸ்தானம் வகிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. "பேரில்லாத அந்தத் தர்மங்கள் எப்படியாகுமெனில், யோக்கியர்களான பார்ப்பனர்கள் சொல்லுவனவெல்லாம் சந்தேகமில்லாத தர்மங்களே" என மனு கூறியிருக்கிறார்.

எனவே, மற்ற சமூகங்களை அடக்கியாளும் ஒரு சமூகம்,ஜாதியொழிப்பு இயக்கத்துக்கு எதிரிடையாக இருந்தால் அந்த இயக்கம் வெற்றியடையும் என்று எதிர்பார்க்க முடியுமா?

உங்கள் முயற்சி அசாத்தியமானது என்று கூறுவதற்கு இரண்டாவது காரணம் என்னவென்று விளக்குகிறேன்.ஜாதி ஏற்பாடு இரண்டு வேலைகளைச் செய்கிறது. முதலில் மக்களை அது பல வகுப்புகளாகப் பிரிக்கிறது. இரண்டாவது அவ்வாறு வகுப்புகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாக வைத்து உயர்வு தாழ்வு கற்பிக்கிறது. ஒவ்வொரு வகுப்பும் தன் உயரிய நிலையைப் பற்றிப் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறது. சில வகுப்புகளுக்கு மேலான நிலைமையில் தானிருப்பதைப் பற்றி ஒவ்வொரு வகுப்பும் தன் உயரிய நிலையைப் பற்றிப் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறது. சில வகுப்புகளுக்கு மேலான நிலைமையில் தானிருப்பதைப் பற்றி ஒவ்வொரு வகுப்பும் பெருமையடித்துக் கொள்ளுகிறது. உயர்வு தாழ்வுக்கு அறிகுறியாக அஷ்டாதிகாரங்கள், சமஸ்காரங்கள் என்னும் பெயரால் சில சமூக – மத உரிமைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஒருஜாதி எவ்வளவுக்கு உயர்வானதாக இருக்கிறதோ அவ்வளவுக்கே அந்த உரிமைகளும் அதிகமாக இருக்கின்றன. ஒருஜாதி எவ்வளவுக்குக் கீழானதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அந்த உரிமைகளும் குறைவாக இருக்கின்றன. எனவே, இந்த உயர்வு–தாழ்வு காரணத்தினால்ஜாதி ஏற்பாட்டை ஒழிக்க மக்களை ஒன்று சேர்ப்பது முடியாத காரியமாய் இருக்கிறது. எந்த ஜாதியாவது தனக்கு உயர்வானஜாதியோடு கலப்புமணம் செய்யவோ, சமபந்தி போசனம் செய்யவோ விரும்பினால் அது விஷமத்தனமான யோசனையென்று தடுக்கப்படுகிறது. அவ்வாறு விஷமம் செய்து வருவது பார்ப்பனர்களே. ஏனெனில், சமபந்தி போசனமும், கலப்பு மணமும் அனுமதிக்கப்பட்டால் தாமும், தமக்குக் கீழுள்ளஜாதியாருடன் கலப்பு மணம் செய்யவும், சமபந்தி போசனம் நடத்தவும் நேருமே எனப் பார்ப்பனர்கள் அஞ்சுகிறார்கள். எல்லோரும்ஜாதி ஏற்பாட்டுக்கு அடிமைகளாகவே இருக்கிறார்கள். ஆனால், அடிமைகள் எல்லாம் துன்பங்களை அனுபவிக்கும்

விஷயத்தில் மட்டும் சமமான நிலையில் இல்லை.

பொருளாதாரப் புரட்சி செய்யப் பாமர மக்களைத் தூண்டியபோது காரல்மார்க்ஸ் என்பவர், “புரட்சியில் சேர்வதனால் நீங்கள் எதையும் இழந்துவிட மாட்டீர்கள். நீங்கள் இழக்கக் கூடியதெல்லாம் உங்கள் அடிமை விலங்கே” எனப் பாமர மக்களைப் பார்த்துக் கூறினார். ஆனால், வெகு தந்திரமாகச்ஜாதிகள் வகுக்கப்பட்டிருப்பதனால், பாமர மக்களைப் பார்த்துக் காரல்மார்க்ஸ் கூறியது போல இந்தப் பாமர மக்களைப் பார்த்து உங்களுக்குக் கூற முடியாது.ஜாதி ஒழிந்தால் சிலஜாதிகள் மற்றச்ஜாதிகளைவிட அதிகப்படியான உரிமைகளையும், பாத்தியதைகளையும் இழக்க வேண்டி வரும். எனவேஜாதிக் கோட்டையைத் தகர்க்க மக்களையெல்லாம் உங்களால் ஒன்றாகத் திரட்ட முடியாது.

## 22

சாதி, பகுத்தறிவுக்கு முரணானது. எனவே,ஜாதியையொழிக்க வேண்டும் என இந்துக்களிடம் வற்புறுத்த உங்களால் முடியுமா? இந்தக் கேள்வி வேறொரு கேள்விக்கு இடந்தருகிறது. தன் பகுத்தறிவுப்படி நடக்க ஒரு இந்துவுக்குச் சுதந்திரம் உண்டா? இந்துவின் ஒழுக்கத்துக்குச் சுதந்திரம் உண்டா? இந்துவின் ஒழுக்கத்துக்கு மனு மூன்று சாதனங்களை வற்புறுத்தியிருக்கின்றார். அதாவது –

“வேதம், ஸ்மிருதி, சதாகார, ஸ்வஸ்யதப்ரியம் ஆத்மன.” இந்த ஸ்லோகத்துக்கு, ‘தன்னுடைய ஆத்மாவுக்கும் மனத்துக்கும் வேதம் ஸ்மிருதி சதா பாரம்பரியமானவை’ என்பது பொருள்.

இதேவிதமாக பாரதத்திலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அதாவது – “எந்தப் பார்ப்பனன் தர்க்க சாஸ்திர பலத்தைக் கொண்டு, உன்னுடைய (வேதத்தின்) மூலத்தில் அவமதிப்புக் கொள்கிறானோ அப்பேர்ப்பட்ட வேதநிந்தகன் சாதுக்களால் நாஸ்திகன் என்று பகிஷ்கரிக்கப்படுகிறான்” என விதிக்கப் பட்டிருக்கிறது. இந்த விதிப்படி வேதங்களையும், ஸ்மிருதிகளையும்

பகுத்தறிவுப்படி ஆராய்ச்சி செய்வது தடுக்கப்பட்டிருக்கிறது. வேத மூலங்களுக்குப் பகுத்தறிவுக்கொத்த பொருள் கூறுவது நாஸ்திகம் என்று கண்டிக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தண்டனை சமூகப் பிரஷ்டமே. எனவே, வேதங்களையோ, ஸ்மிருதிகளையோ ஆதாரமாகக் கொண்ட எதையும் பகுத்தறிவுப்படி ஆராய்ச்சி செய்யவே கூடாது. வேதங்களுக்கும், ஸ்மிருதிகளுக்கும் முரண்படுகிற விஷயங்களிலும்கூட பகுத்தறிவுப்படி முடிவு செய்யக் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ஸ்மிருதிகளுக்குள் அபிப்ராய பேதமுண்டானால் இரண்டும் சரியென்றே மதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றலாம். அவ்விரண்டிலும் எது சரியானது? என்று ஆராயவே கூடாது. இதை மனு பலமாக வற்புறுத்தியிருக்கிறார்.

ஸ்ருதிக்கும், ஸ்மிருதிக்கும் அபிப்பிராய பேதமுண்டானால் ஸ்ருதி அபிப்பிராயங்களையே பின்பற்ற வேண்டும். இங்குக்கூட இரண்டிலும் எது சரியென அறியப் பகுத்தறிவை உபயோகப்படுத்தக் கூடாது.

ஆகவே, எந்த விஷயத்திலும் ஸ்ருதிகளையும், ஸ்மிருதிகளையும் இந்து மீறவே கூடாது. ஸ்ருதி, ஸ்மிருதிகளின்படியே அவன் நடக்க வேண்டும்.ஜாதி அல்லது வருணம் வேத, ஸ்ருதி ஆதாரம் பெற்றது. எனவே, பகுத்தறிவுப்படி அந்த ஆராய்ச்சி செய்யவே கூடாது. அவ்வாறு ஆராய்ச்சி செய்ய வேத சாஸ்திரங்கள் இந்துக்களுக்குச் சந்தர்ப்பமளிக்கவில்லை. ரயில் பிரயாணத்தின் போதும், கப்பல் பிரயாணத்தின்போதும்ஜாதியாச்சாரங்களை மீறும் ஆயிரக்கணக்கான இந்துக்கள் மற்றக் காலங்களில் வித்தியாசங்களைக் கண்டிப்பாய் அனுஷ்டித்து வருவது இந்துக்களல்லாதார்க்கு வியப்பையளிக்கக் கூடும். இதனால் மனிதனுடைய பகுத்தறிவுக்கும் கூட விலங்கு பூட்டப்பட்டிருப்பதை உணர்ந்து கொள்ளலாம். மனித வாழ்க்கை பொதுவாக வழக்கத்தைத் தழுவியது, ஆராய்ச்சி செய்து உருவாக்கப்பட்டதல்ல. சரியா? தப்பா? என்று ஆராய்ச்சி செய்து எவரும் எதையும் நம்பவில்லை. நெருக்கடி ஏற்படும்போதுதான் தப்பா? சரியா? என்ற உணர்ச்சி உண்டாகிறது. ரயில் பிரயாணமும், கப்பல் பிரயாணமும் பொதுவாக ஒரு இந்துவின் வாழ்நாளில் நெருக்கடியை உண்டு பண்ணும் தருணங்கள். எனவே, அக்காலங்களில்ஜாதியாச்சாரங்களை எப்பொழுதும் பின்பற்ற முடியாததனால்ஜாதி எதற்காக? என்ற கேள்வியை அவன் இயல்பாகக் கேட்டு நிர்ணயம் செய்யவேண்டும்.

ஆனால், அவன் அப்படிச் செய்வதில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் ஜாதியாச்சாரங்களை மீறிவிட்டு, அடுத்த நிமிஷத்தில் ஜாதியாச்சாரங்களைப் பின்பற்றத் தொடங்குகிறான். இதற்குக் காரணம், சாத்தியமானவரை ஜாதியாச்சாரங்களைப் பின்பற்றலாமென்றும், ஜாதியாச்சாரங்களை மீறும்படி நேர்ந்தால் பிராயச்சித்தம் செய்து கொள்ளலாமென்றும் சாஸ்திரங்களில் விதி இருப்பதே ஆகும். பிராயச்சித்தக் கோட்பாடு இருப்பதனால்ஜாதி ஏற்பாட்டுக்குத் தடையே ஏற்படுவதில்லை. மக்களும்ஜாதியாச்சாரங்கள் நியாயமா? அல்லவா? என்று சிந்தித்துப் பார்ப்பதில்லை. சிந்தித்துப் பார்க்கத் தேவையுமில்லை.

சாதியையும், தீண்டாமையையும் ஒழிக்க எத்தனையோ பேர் முயன்றிருக்கிறார்கள். அவர்களுள் ராமானுஜர், கபிலர் முதலியவர்கள் முக்கியமானவர்கள். அந்தச் சீர்திருத்தக்காரர்களைப் பின்பற்றும்படி இந்துக்களைக் கேட்க உங்களால் முடியுமா? ஸ்ருதி, ஸ்மிருதிகளுடன் சதாச்சாரத்தையும் ஒரு பிராமணமாக மனு வற்புறுத்தியிருப்பது மெய்யே.

வாஸ்தவத்தில் சாஸ்திரங்களைவிட சதாச்சாரங்களுக்கே அதிக மதிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்கைப்படி ஒரு சதாச்சாரம் தர்மமானதா? என்று ஆராய்ந்து பார்க்கலாம். ஆனால், சதாச்சாரம் என்றால் நல்லொழுக்கம், நற்கருமம் எனச் சிலர் நினைக்கக் கூடும். ஆனால், மனு தர்மப்படி சதாச்சாரம் என்பது நல்லொழுக்கமோ, நற்கருமமோ அல்ல. நல்லதானாலுஞ் சரி, கெட்டதானாலும் சரி, புராதன வழக்கமே சதாச்சாரம். மனு கூறுவதாவது:–

"யஸ்மின்தேசேய ஆச்சார – பாரம்பரிய க்ரமாகத வர்ணானாம் சிலசர்வேஷும்ச – சதாச்சார உச்சயதே." அதாவது – எந்தெந்த நேரத்தில் எந்தெந்த ஆதாரமானது, பாரம்பரியமாக (தலைமுறை தத்துவமாக) அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதோ அவை எல்லா வர்ணங்களுக்கும் சதாச்சாரம் என்று சொல்லப்படும். சதாச்சாரம் என்றால் நற்கருமங்கள் அல்லது நல்லவர்களின் செயல்கள் என மக்கள் பொருள் கொண்டு நல்லவர்கள் செயல்களை அவர்கள் பின்பற்றத் தொடங்குவார்கள் என எண்ணிப் பயந்தோ, என்னவோ ஸ்ருதி, ஸ்மிருதி சதாச்சாரங்களுக்கு முரணாக தெய்வக் கட்டளைகளையும் கூடப் பின்பற்றக் கூடாதென்று இந்துக்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இது அசம்பாவிதமாகவும், பைத்தியக்காரத்தனமாகவும் தோன்றலாம். எனினும், தேவர்கள் சொல்வதை மனிதர்கள் செய்யக் கூடாதென்று சாஸ்திரங்கள் இந்துக்களுக்கு உபதேசம் செய்கின்றன. சீர்திருத்தக்காரர் களுக்கு முக்கியமான ஆயுதங்கள் பகுத்தறிவும், ஒழுக்கமுமே. ஆனால், இந்த இரண்டு ஆயுதங்களையும் அவன் உபயோகிக்காமல் தடுப்பது அவனை நிராயுதபாணி ஆக்குவதாகும்.ஜாதி, பகுத்தறிவுக்குப் பொருத்தமானதா? என்று ஆராய்ச்சி செய்யக் கூடாதென்று இந்துக்கள் தடுக்கப்பட்டிருக்கையில், நீங்கள் எப்படிச்ஜாதியை ஒழிக்கப் போகிறீர்கள்? ஜாதியைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் கோட்டை தகர்க்க முடியாதது.

பகுத்தறிவு, ஒழுக்கம் முதலியவற்றால் அழிக்க முடியாத பொருளினால் அந்தக் கோட்டை கட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கோட்டையை அறிவாளிகளென மதிக்கப்படும் பார்ப்பனர்கள் காவல் புரிந்து பாதுகாத்து வருகிறார்கள். பார்ப்பனர்களே இந்துக்களின் இயற்கையான தலைவர்கள். அந்தப் பார்ப்பனர்கள் கூலிக்கு மாரடிக்கும் போர்வீரர்களுமல்ல. தம் தலைக்கொள்கையானஜாதியை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற துணிச்சலுடையவர்கள். இந்நிலையில் உங்களுக்குச்ஜாதியை ஒழிக்க முடியாது.ஜாதியை ஒழிப்பது அசாத்தியமானதென நான் கூறுவதன் உட்பொருள் இப்பொழுதாவது உங்களுக்கு விளங்குகிறதா? அந்தக் கோட்டையில் ஒரு சிறு பிளவை உண்டு பண்ண வேண்டுமானாலுங்கூட வெகு காலம் பிடிக்கும். அவ்வாறு ஒரு பிளவை உண்டு பண்ண வெகுகாலம் பிடித்தாலும் சரி, பகுத்தறிவுக்கோ, ஒழுக்கத்துக்கோ மதிப்புக் கொடுக்காத வேதங்களையும், சாஸ்திரங்களையும் ஒழித்தால்தான்ஜாதிக் கோட்டையை அழிக்க முடியுமென்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது. ஸ்ருதி, ஸ்மிருதி, மதங்களை நீங்கள் முதலில் ஒழிக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல்ஜாதியை அழிக்கவே முடியாது. இதுவே என் முடிவான அபிப்பிராயம்.

## 23

மதங்கள் ஒழிய வேண்டும் என நான் கூறுவதன் பொருளைச் சிலர் அறியாதிருக்கலாம். சிலருக்கு நான் அவ்வாறு கூறுவது வெறுப்பாக இருக்கலாம். சிலருக்கு அது ஒரு புரட்சிகரமான அபிப்பிராயமாகத் தோன்றலாம். எனவே, என் நிலைமையை நன்கு விளக்கிக் கூறிவிடுகிறேன். கொள்கைகளுக்கும், விதிகளுக்கும் நீங்கள் வேற்றுமை கற்பிக்கிறீர்களா? இல்லையா? என்பதை நானறியேன். ஆனால், நான் வேற்றுமை கற்பிக்கிறேன். கொள்கைக்கும், விதிக்கும் பெருத்த வித்தியாசமுண்டு. அது சாமான்ய வித்தியாசமுமல்ல; உண்மையான முக்கியமான வித்தியாசம். விதிகள் அனுபவத்தையொட்டியவை. அவை ஒரு திட்டப்படி காரியங்களைச் செய்வது. கொள்கைகளோ அறிவைப் பொறுத்தவை; அவை விஷயங்களை ஆராய்ந்து நிதானம் செய்ய உதவி புரியக் கூடியவை. ஒருவன் ஒரு காரியத்தை எப்படிச் செய்ய வேண்டுமென்று விதிகள் விளக்கிக் கூறுகின்றன. ஆனால், கொள்கையோ அக்காரியத்தை ஒரு குறிப்பிட்ட மாதிரியில்தான் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. எதைச் செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? என விதி கூறுகிறது. ஒருவனது விருப்பங்களுக்கும், நோக்கங்களுக்கும் உள்ள சம்பந்தத்தை நிர்ணயம் செய்யக் கொள்கை ஒரு வழிகாட்டுகிறது.

ஒரு விஷயத்தைப் பற்றி ஆலோசிக்கும்போது ஒருவன் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதை எடுத்துக் காட்டுவதன்மூலம் கொள்கை உதவி புரிகிறது. எனவே, விதிகளையும் கொள்கைகளையும் ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்ட காரியங்களின் பலாபலன்களிலும் அளவிலும் வித்தியாசமாயிருக்கின்றன. விதிப்படி செய்யவேண்டும் என்பதற்காக நல்லதாகக் கருதப்படுவதைச் செய்வதற்கும் ஒரு கொள்கையைத் தழுவிச் செய்யப்படும் நற்காரியங்களுக்கும் பரஸ்பரம் வித்தியாசமுண்டு. கொள்கை தவறாக இருக்கலாம். ஆனாலும் ஒருவன் செய்யும் செயல் அவன் தன் பூரண அறிவோடு செய்தது. எனவே, அதன் பலாபலன்களுக்கு அவனே பொறுப்பாளி. விதி சரியாக இருக்கலாம். ஆனால், அவ்விதிப்படி செய்யப்படும் காரியமோ தற்செயலானது. விதிப்படி காரியம் செய்பவன் தன் சொந்த அபிப்பிராயப்படி செய்யவில்லை. மத சம்பந்தமான ஒரு செயல்

சரியில்லாதிருக்கலாம். எனினும், அதைச் செய்பவன் அச்செயலுக்கு பொறுப்பாளியே. மேலும், அச்செயலுக்கு அவனைப் பொறுப்பாளியாக்க வேண்டுமானால் மதம் கொள்கைகளை மட்டும் தழுவியதாக இருக்க வேண்டும்; கேவலம் விதிகளைத் தழுவியதாக இருக்கக் கூடாது. மதம் விதிகளுக்குக் கட்டுப்பட்டதாகும்போது அதன் மகிமையே அழிந்து வருகிறது.

ஏனெனில், விதிகளுக்குக் கட்டுப்பட்ட மதம் பொறுப்பற்றதாகி விடுகிறது. ஒருவனது செயலுக்கு அவன் பொறுப்பாளியென வற்புறுத்துவதே உண்மையான மதத்தின் நோக்கம். ஆனால், இந்து மதம் எத்தகையது? அது கொள்கைகளால் ஆனதா? விதிகளால் ஆனதா? வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் உள்ளபடி சமூக, அரசியல், சுகாதாரம், சம்பந்தமாகவும் வேள்விகள் சம்பந்தமாகவும் உள்ள விதிமுறைகள், ஒழுங்குமுறைகள் ஆகியவை எல்லாம் கலந்த இந்து மதம். இந்துக்களால் மதம் எனக் கூறப்படுவது ஒரு சட்டம் – விதிவிலக்குகளே. எல்லாத் தேசங்களுக்கும் எல்லா ஜாதிகளுக்கும் எக்காலத்திலும் உபயோகப்படக்கூடிய மெய்யான பொதுக் கொள்கைகள், ஆத்மிகக் கொள்கைகள் இந்து மதத்தில் இல்லவே இல்லை. ஒருக்கால் அற்பசொற்பமாக இருந்தாலும் இந்துக்களின் வாழ்வில் அது நடைமுறையில் காணப்படவில்லை. தர்மம் என்னும் பதம் வேதங்களிலும், ஸ்மிருதிகளிலும் பிரேயாகம் செய்யப்பட்டிருக்கும் மாதிரியையும் அதற்குப் பதவுரை எழுதியோர் கூறியிருக்கும் பொருள்களையும் ஊன்றிக் கவனித்தால் அது விதிவிலக்குகளையே முக்கியமாகக் குறிக்கிறது. 'சமய விதிகள்', 'சமயச் சடங்குகள்' என்னும் பொருளிலேயே 'தர்மம்' என்ற பதம் வேதங்களில் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. ஜெயமுனியின் பூர்வ மீமாம்சையில் வேத விதிகளால் வற்புறுத்தப்படும் இலட்சியம் தர்மம் என விளக்கப்பட்டிருக்கிறது. சுருங்கக்கூறின், சட்டம் அல்லது சட்டமாகக் கருதப்படும் ஒழுக்கங்களையே இந்துக்கள் மதம் எனக் கூறுகிறார்கள். ஆனால் இந்த விசேஷச் சட்டங்களை நான் மதம் என மதிக்கவில்லை. இந்தச் சட்டங்களை, மக்கள் மதமென மதிப்பதனால் ஒழுக்கமான சுதந்திர வாழ்க்கை நடத்த மக்களுக்கு சக்தியில்லாது போய் விட்டது. சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்ட ஒரு அடிமை வாழ்க்கை நடத்த அந்த மதம் மக்களைத் தூண்டுகிறது.

இலட்சியங்களை மதிக்கும் குணம் அந்த மதத்தினால் விருத்தியடையாது; சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவே அது கட்டாயப்படுத்துகிறது.

அதனால் ஏற்படும் முக்கியத் தீமை என்னவெனில், இறந்த காலத்தும் நிகழ்காலத்துக்கும் எதிர் காலத்துக்கும் அது ஆதாரமாகும். ஆனால் அந்தச் சட்டங்கள் ஒவ்வொரு குலத்துக்கும் ஒவ்வொரு மாதிரியாக இருப்பதனால் நியாயமானதாகவும் இருக்கவில்லை. தலைமுறை தலைமுறையாக அவ்விதிகளுக்கு மக்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருப்பதனால், அந்த அநீதிக்கு அழிவு ஏற்பட முடியாமலும் இருக்கிறது. தர்ம சாஸ்திரக்காரரால் அவை வகுக்கப்பட்டதாகக் கூறுவது மட்டும் அதன் குறைபாடல்ல. அவையே முடிவானவை. அவற்றுக்கு மாற்றமே கிடையாது என மதிக்கப்பட்டிருப்பதே அதன் பெரிய குறைபாடு. ஒருவனது நிலைமைக்குத் தக்கபடியே மக்களுக்கு இன்பம் அனுபவிக்க முடியும் எனக் கூறப்பட்டிருப்பதால், அவற்றை சாஸ்வதமான தர்மங்கள் என்றோ சட்டங்கள் என்றோ மக்கள் எவ்வாறு கொள்ள முடியும்? மக்கள் அவ்வாறு மதித்தால் அவர்களுக்கு முன்னேற முடியுமா? எனவே, அப்பேர்ப்பட்ட மதம் ஒழிய வேண்டியதுதான். அதை ஒழிப்பதற்காகச் செய்யப்படும் காரியங்கள் மத விரோதமானவையாக ஆகமாட்டா. சட்டங்களை மதமாக மதிக்கும் சூழ்ச்சியை நீங்கள் வெளிச்சமாக்க வேண்டும். இது நீங்கள் செய்ய வேண்டிய முக்கியமான முதல் வேலை. மக்களின் தப்பெண்ணங்களை ஒழித்து, அவர்கள் மதமாக மதிப்பது உண்மையில் ஒரு மதமல்லவென்றும், விதிவிலக்குச் சட்டங்களே என்றும் அவர்கள் உணரும்படிச் செய்துவிட்டால், மதத்தை ஒழிப்பதற்குத் தேவையான வசதி உங்களுக்கு ஏற்படும். அவர்கள் அதை மதம் என எண்ணிக் கொண்டிருக்கும் வரை மாற்றம் ஏற்படவே செய்யாது. ஏனெனில், மாற்றம் என்ற கருத்து மதத்துக்குப் புறம்பானது. ஆனால், சட்டமோ மாற்றமடையக் கூடியது. எனவே, இந்து மதம் சட்டமே என மக்கள் உணர்ந்து விட்டால் அதை மாற்றத் தயாராக இருப்பார்கள். மாற்றப்பட்ட சட்டங்களையும் ஒப்புக் கொள்ளத் தயங்க மாட்டார்கள்.

# 24

விதி விலக்குகளை மதமாகக் கொள்வதை நான் கண்டிருக்கிறேனாயினும், மதத்துக்கே தேவையில்லை யென்று கூறுவதாக எவரும் தப்பர்த்தம் பண்ணக் கூடாது. திரு. பர்க்கு விளக்கிக் கூறியிருக்கும் மதத்தை நான் ஆதரிக்கிறேன். அவர் வற்புறுத்தியிருக்கும் மதம் பின்வருமாறு:–

"உத்தமமான சமூக அமைப்புக்கு, உண்மையான மதமே அடிப்படை. மெய்யான சிவில் அரசாங்கத்திற்கும் மதமே அடிப்படை. அரசாங்கச் சட்டங்களுக்கும், அதிகாரங்களுக்கும் அவற்றின் திறமையான நிருவாகத்துக்கும் மதமே ஊற்றுக் கண்ணாயிருக்கிறது."

அதனாலேயே விதி விலக்குகளாலாகிய பழைய மதங்கள் ஒழிய வேண்டுமென நான் கூறுகிறேன். அந்த மதங்களின் ஸ்தானத்தை கொள்கையினாலான உண்மை மதம் கைப்பற்ற வேண்டுமென்று விரும்புகிறேன். அப்பேர்ப்பட்ட ஒரு மதத்துக்கே உண்மை மதம் எனப் பெருமை பாராட்டிக் கொள்ள முடியும். மதம் இன்றியமையாதது என நான் பூரணமாக நம்புவதனால் உண்மை மதத்தைப் பற்றி நான் கொண்டிருக்கும் கருத்துகளை விளக்கிக் கூற விரும்புகிறேன். அவை பின்வருமாறு:–

(1) இந்துக்களுக்கெல்லாம் பொதுவானதும், எல்லா இந்துக்களும் ஒப்புக் கொள்ளக் கூடியதுமான ஒரு வேதம் இந்துக்களுக்காக இருக்க வேண்டும். இது ஒப்புக் கொள்ளப்பட்டால் தற்பொழுது புனிதமாக மதிக்கப்படும் வேதங்களும், சாஸ்திரங்களும், ஸ்ருதிகளும், ஸ்மிருதிகளும் ஒழிய வேண்டும். அவற்றை பிரச்சாரம் செய்வது கிரிமினல் குற்றமாக மதிக்கப்பட வேண்டும்.

(2) புரோகிதர்கள் ஒழிய வேண்டும். ஆனால் இது சாத்தியமல்ல. எனவே புரோகிதம் பரம்பரைத் தொழிலாக இராமலாவது இருக்க வேண்டும். இந்துக்களென்று சொல்லிக் கொள்ளுகிறவர்களுக்கெல்லாம் புரோகிதனாக உரிமை இருக்க வேண்டும். சர்க்கார் ஏற்படுத்திய ஒரு பரீட்சையில் தேறிச் சர்க்கார் அனுமதி பெறாமல் ஒருவரும் புரோகிதராகக் கூடாதென்று சட்டமியற்ற வேண்டும்.

(3) சன்னது பெறாது புரோகிதன் நடத்தும் சடங்குகளெல்லாம் செல்லுபடியாகாதவை என்று சட்டம் இயற்ற வேண்டும். சன்னது பெறாமல் புரோகிதம் செய்கிறவனுக்குக் கிரிமினல் தண்டனையளிக்க வேண்டும்.

(4) சிவில் ஊழியர்களைப் போல புரோகிதனும் ஒரு சர்க்கார் ஊழியனாக இருக்க வேண்டும். அவனுக்கு சர்க்கார் சம்பளம் கொடுக்க வேண்டும். ஒழுக்கம், நம்பிக்கை, கடவுள் வழிபாடு முதலிய விஷயங்களில் ஏனையோரைப் போல் புரோகிதனும் சர்க்கார் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

(5) சிவில் ஊழியர்களின் தொகை கட்டுப்படுத்தப்பட்டிருப்பது போல் தேசத்தின் தேவைக்குப் போதுமான அளவு புரோகிதர்களை நியமனம் செய்ய வேண்டும். இது மிகவும் தீவிரமானதென்று சிலருக்குத் தோன்றலாம். ஆனால், இதில் புரட்சிகரமாக எதுவும் இருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை. இந்தியாவிலுள்ள எல்லாத் தொழில்களும் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. தத்தம் தொழில்களில் திறமையுடையார் களென்று காட்டிக் கொண்டவர்கள்தான் எஞ்சினியர்களும், டாக்டர்களும், லாயர்களுமாக அவரவர்கள் தொழில் நடத்த அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் தொழில் நடத்தும் காலமெல்லாம் தேசச் சட்டங்குகளுக்குக் கீழ்ப் படிந்து நடக்க வேண்டியதைத் தவிரத் தொழில் ஒழுங்கு முறைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அடங்கி நடக்க வேண்டும். புரோகிதத் தொழில் மட்டுமே திறமை வேண்டாத தொழிலாக இருக்கிறது. புரோகிதன் மூடனாய் இருந்தாலும் சரி, கர்ம நோயாளியாக இருந்தாலும் சரி, துர்க்குணமுடைய வனாயிருந்தாலும் சரி, அவன் புரோகிதம் செய்வதை எவரும் ஆட்சேபிப்ப தில்லை. ஆலய கர்ப்பக் கிரகங்களில் அவன் தாராளமாகச் செல்லலாம். இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட இல்லத்தில் பிறந்தவன் மட்டுமே புரோகிதனா கலாமென்ற வழக்கம் இருப்பதனாலே, மேலே கூறிய திருவிளையாடல்கள் எல்லாம் தாராளமாக நடைபெற்று வருகின்றன. இந்தியப் புரோகிதர்கள் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டவர்கள் அல்லாதிருப்பதனால், இந்த ஆபாசங்களுக்கு இதுகாறும் தடை ஏற்படவே இல்லை. நான் மேலே குறிப்பிட்டபடி சர்க்கார் சில சட்டங்கள் நிறைவேற்றிப் புரோகிதர்களெல்லாம், அவைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டால்தான் அவர்கள் விஷமம் செய்வதற்கும், ஏனையோரைத் தப்பு வழியில் செலுத்துவதற்கும் தடை ஏற்படும். புரோகிதர்கள் இப்போது தம்

கடமைகளை உணர்வதில்லை; வாஸ்தவத்தில் அவர்களுக்கு கடமைகளும் இல்லை. ஆனால், அவர்களுக்குச் சில உரிமைகள் இருக்கின்றன. அவற்றைக் காப்பாற்றவே அவர்கள் முயல்கிறார்கள். எனவே புரோகிதச் சட்டம் ஏற்பட்டால்தான் அவர்களால் ஏற்படும் தொல்லைகள் ஒழியும். அத்தொழிலில் ஏனையோர் பிரவேசிக்க எதிர்த்து நிற்கும் பார்ப்பனியமும்ஜாதியும் கூட ஒழியும். பார்ப்பனியமே இந்து மதத்தைக் கெடுத்த விஷம். பார்ப்பனியத்தை ஒழித்தால் தான் உங்களுக்கு இந்து மதத்தைக் காப்பாற்ற முடியும். இந்தச் சீர்திருத்தத்துக்கு எதிர்ப்பே ஏற்படக்கூடாது. ஆரிய சமாஜிகளுங்கூட இச்சீர்திருத்தத்தை ஒப்ப வேண்டியதுதான். ஏனெனில் இந்தச் சீர்திருத்தம் ஆரிய சமாஜிகளின் ‘‘குண’’, ‘‘கர்ம’’க் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது.

நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, ஒரு புதுக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு உங்கள் மதத்தை நீங்கள் திருத்தியமைக்க வேண்டும். அந்தக் கொள்கை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகத் தத்துவம் முதலியவற்றை விளக்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஆனால் அப்பேர்ப்பட்ட ஒரு மதத்தை ஸ்தாபிக்க வெளி ஆதாரங்களைத் தேட வேண்டுமென்றும், உபநிஷத்துகளில் அதற்குத் தேவையான ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. தற்கால மதங்களில் தோசைப் புரட்டான மாற்றங்கள் செய்யாமல், உங்கள் மதத்தைச் சீர்திருத்த முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. நான் குறிப்பிடும் மதம் உருவாக வேண்டுமானால், வாழ்க்கையின் மூலத் தத்துவங்களிலேயே சில மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அதாவது ஜீவித லட்சியத்திலேயே முழு மாற்றமேற்பட வேண்டும். நமக்கும் மக்களுக்கும் உள்ள சம்பந்தத்தில் நேரடியான மாற்றமேற்பட வேண்டும். மதமாற்றம் என்ற பதம் உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் ‘‘புத்துயிர்’’ என்ற பதத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அதாவது, மக்கள் எல்லாம் புத்துயிர் பெற வேண்டும். புத்துயிர் செத்துப் போன உடலில் பிரவேசிக்குமா? புது உடம்பிலே புத்துயிர் பிரவேசிக்கும். சுருங்கங் கூறுமிடத்து பழைமை ஒழிய வேண்டும். பழைமை ஒழிந்தால்தான் புத்துயிர் தோன்றும் – வளரும் – வலிவு பெறும் – பிரகாசிக்கும். சாஸ்திரங்கள் ஒழிய வேண்டும், வேதங்கள் ஒழிய வேண்டும் என நான் கூறுவதன் தத்துவம் இதுவே.

## 25

நான் உங்களை நெடுநேரம் காக்க வைத்து விட்டேன். என் பிரசங்கத்தை முடிக்க வேண்டிய காலம் நெருங்கி விட்டது. இத்துடன் என் பிரசங்கத்தைச் சவுகரியமாக முடிக்கலாம். ஆனால், இந்துக்கள் நிறைந்த ஒரு சபையில் இந்து மதத்தைப் பற்றி நான் செய்யும் பிரசங்கம் இதுவே கடைசிப் பிரசங்கமாகும். எனவே, என் பிரசங்கத்தை முடிக்குமுன் நான் முக்கியமாகக் கருதும் சில விஷயங்களை இந்துக்களுக்கு எடுத்துக் கூறி அவற்றைப் பற்றி அவர்கள் ஆழ்ந்து யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் விரும்புகிறேன்.

### முதல் விஷயம்

உலக முழுவதுமுள்ள மக்களின் ஆச்சாரங்கள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியன பலதரப்பட்டவையாயிருந்தாலும் அவற்றால் தீமை ஏற்பட மாட்டா என்று முடிவு செய்து நாம் திருப்தியடைந்தால் போதுமா? எப்பேர்ப்பட்ட பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், ஒழுக்கங்கள், நல்ல பலன் அளித்திருக்கின்றன என்று நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? எத்தகைய ஆச்சாரங்களும், நம்பிக்கைகளும் உடையவர்கள் வலுப்பெற்று உலகம் முழுதும் பரவி, செல்வாக்குப் பெற்று ஆதிக்கம் நடத்துகிறார்கள் என நாம் நோக்குதல் வேண்டாமா? ஆசிரியர் கார்வர் பின்வருமாறு கூறியிருக்கிறார் –

ஜீவிதப் போராட்டத்துக்குப் பற்கள், நகங்கள், கொம்புகள், போர்க் கூச்சல், மயிர்கள், இறகுகள் முதலியன கருவிகளாயிருப்பது போல, வாழ்க்கை வெற்றிக்கு ஒழுக்கமும், மதமும் கருவிகளாக இருக்கின்றன. எனவே, அநுபவசாத்தியமல்லாத ஒழுக்கத் திட்டங்களையும், மத நம்பிக்கைகளையும் வகுக்கும் சமூகம் விருத்தியடையாது. மாறாக அனுபவ சாத்தியமான ஒழுக்கங்களையும், நம்பிக்கைகளையும் வகுக்கும் சமூகங்கள் விருத்தியடையும். ஒரே பக்கத்தில் இரண்டு இறகுகளையுடைய ஒரு பறவைக்கு எப்படிப் பறக்க முடியாதோ அதுபோலவே விதிவிலக்குகள் அடங்கிய ஒரு மதத்தைப் பின்பற்றும் சமூகத்துக்கு முன்னேற முடியாது.

ஆகவே ஒழுக்கமும், மதமும் நமது விருப்பு வெறுப்புகளைப் பொறுத்தவை

களல்ல. ஒரு தேசத்தாரை உத்தம பிரஜைகளாய் ஆக்கக்கூடிய ஒழுக்கங்களை நீங்கள் மிகவும் வெறுக்கலாம். எனினும், உங்கள் வெறுப்பையும் மதியாமல், அந்தத் தேசத்தார் வலிமையும் செல்வாக்கும் உடையவர்களாகவே இருப்பார்கள். ஒரு தேசத்தாரின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும் ஒழுக்க சீலங்களடங்கிய ஒரு மதத்தை நீங்கள் அதிகமாக விரும்பலாம். இருந்தாலும் அந்தத் தேசம் அழிந்து போவது நிச்சயம். எனவே, உலகப் போட்டியில் வெற்றி பெற முடியுமா? என்ற பிரச்சினையை ஆதாரமாக வைத்துக்கொண்டு இந்துக்கள் தம் மதத்தை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும்.

## இரண்டாவது விஷயம்

தமது பழைய பழக்க வழக்கங்களையெல்லாம் அப்படியே அழியாமல் வைத்துக் காப்பாற்ற வேண்டுமா? அல்லது தள்ள வேண்டியவற்றைத் தள்ளி, வேண்டியவற்றைக் கொண்டு, சீர்திருத்தி, நமது சந்ததிகள் முன்னேற்றம் அடையும்படி செய்ய வேண்டுமா? என்பதையும் இந்துக்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். எனது ஆசிரியர் புரொஃபசர் சான்டீவி கூறியிருப்பதாவது:–

எல்லாச் சமூகங்களும் சில பயனற்ற விஷமத்தனமான பழக்க மூட்டைகளைச் சுமந்து கொண்டுதானிருக்கின்றன. ஆனால், அறிவு விளக்கம் பெற்ற சமூகங்கள் தமது பழக்க வழக்கங்களை ஆராய்ந்து நல்லவற்றை ஒப்புக்கொண்டு தீயவற்றை நிராகரித்து, முன்னேற முயல்கின்றன. ஃபிரெஞ்சுப் புரட்சியில் அடங்கியிருந்த மாற்றக் கோட்பாட்டை திரு. பர்க்கு என்பவர் கண்டித்திருந்தாலும் ‘‘மாற்றத்துக்கு இடந்தரும் வழிகள் வகுக்காத ஒரு சர்க்காருக்கு பாதுகாப்புக்கும் வழி வகுக்க முடியாது’’ என்று கூறியிருக்கிறார். சர்க்காருக்குப் பொருந்தும் நியாயம், சமூகங்களுக்கும் பொருத்தமாகவே இருக்கும்.

## மூன்றாவது விஷயம்

மேலும், பழைமையை வணங்கிக் கொண்டு இருக்க வேண்டுமா? என்பதையும் இந்துக்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். பழைமையை வணங்குவதனால் ஏற்படும் தீமைகளை புரொஃபசர் டீவி பின்வருமாறு விளக்கியிருக்கிறார். ஒரு நபருக்கு நிகழ்காலத்திற்றான் இயங்கிக் கொண்டு இருக்க முடியும். நிகழ்காலம், கேவலம் இறந்த காலத்திற்குப்

பின் வருவதல்ல; இறந்த காலத்தின் பயனுமல்ல. இறந்த காலத்தை விட்டு நீங்கிய பிறகு வாழ்க்கையடைந்திருக்கும் நிலைமையே நிகழ்காலம். இறந்த கால விஷயங்களைப் பற்றிய அறிவு நிகழ்காலத்துக்கு உதவி புரிய மாட்டாது. நிகழ்காலச் சம்பவங்களோடு ஒப்பிட்டு நோக்கும் போதுதான் இறந்த காலச் சம்பவங்கள் முக்கியமாகத் தோன்றுகின்றன. மற்றபடி இறந்தகாலச் சம்பவங்களுக்கு மதிப்பே இல்லை.

எனவே, கல்வி முறைக்குப் பழைய விஷயங்களை ஆதாரமாகக் கொள்வதனால் நிகழ் காலமும் பழைய கால நகல் ஆகிவிடுகிறது. நிகழ்காலத்தை இலட்சியம் செய்யாத கொள்கையினால் எதிர்காலத்தைப் பற்றிய மதிப்புக் குறைந்து விடுகிறது. அம்மாதிரிக் கொள்கை முன்னேற்றத்திற்கு முரணானது. மக்கள் முற்போக்குக்குத் தடையாக உள்ளது.

## நான்காவது விஷயம்

நித்தியம் என்று சொல்லக் கூடியதாக எதுவும் இல்லை. யாவும் மாறக் கூடியவை. மாற்றமே இயற்கை விதி என்பதை இந்துக்கள் உணர வேண்டிய காலம் வரவில்லையா? மக்களின் ஒழுக்கங்களைக் கட்டுப்படுத்த விதிகள் இருந்தால் அவ்விதிகளை மாற்றவும் வசதி இருக்க வேண்டாமா? இவ்விஷயங்களையும் இந்துக்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

## 26

இந்தப் பிரசங்கம் மிக நீண்டுவிட்டது என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், இந்த நீண்ட பிரசங்கத்தினால் ஏதாவது பலனேற்பட்டிருக்கிறதா? என்பதை நீங்களே முடிவு செய்ய வேண்டும். என் அபிப்பிராயங்களையெல்லாம் தெளிவாகக் கூறிவிட்டேன். இந்த அபிப்பிராயங்கள் பேரும் புகழும் பெற்ற ஒரு பெரியாரின் அபிப்பிராயங்கள் அல்ல. ஏழை, எளியோர் விடுதலைக்காக இடையறாது உழைத்துக் கஷ்டப்பட்ட ஒருவரின் அபிப்பிராயங்களே இவை. அந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் அவருக்குக் கிடைத்த பலன் தேசியப் பத்திரிகைகளுடையவும், தலைவர்

களுடையவும் தூற்றலே! அதற்குக் காரணம் ஏழைகள் விடுதலைக்காக அவர்கள் ஆடும் அரசியல் நாடகத்தில் நானும் கலந்து கொள்ளாததே ஆகும். என் அபிப்பிராயங்களை ஆதரிக்க இந்தக் காரணங்கள் போதாதானால், வேறு எதுவானாலும் அவற்றை நீங்கள் ஆதரிக்க மாட்டீர்கள். நீங்கள் ஆதரித்தாலும் சரி, ஆதரிக்காவிட்டாலும் சரி, அது உங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது. நான் கூறிய முறைப்படிஜாதியை ஒழிக்க நீங்கள் முயலாவிட்டால் உங்கள் முறைப்படி ஒழிக்க முயலுங்கள். ஆனால், உங்களுடன் என்னால் ஒத்துழைக்க முடியாது. நான் மதம் மாற முடிவு செய்து விட்டேன். அதற்குள்ள காரணங்களை விளக்கிக் கூறும் இடம் இதுவல்ல.

ஆனால், இந்து மதத்தை விட்டு நீங்கிய பிறகும் உங்கள் முயற்சியை அனுதாபத்துடன் கவனித்துக் கொண்டே இருப்பேன். உங்களுக்குத் தேவையான உதவிகள் செய்யவும் நான் தயாராகவே இருப்பேன். உங்கள் முயற்சியே தேசியமான ஒரு முயற்சி.ஜாதி – இந்துக்களுக்கு மட்டும் உரியதல்ல. எனினும் இந்துக்கள்ஜாதியினால் உலகத்தை அசுத்தப்படுத்தி விட்டார்கள். எனவே, சீக்கியர், முஸ்லிம், கிறிஸ்துவ சமூகங்களிலும்ஜாதி நாற்றம் வீசிக் கொண்டே இருக்கிறது. எனவே, ஜாதிக் கொடுமையினால் வருந்தும் சீக்கியர், முஸ்லிம்கள், கிறிஸ்துவர் உதவியும் உங்களுக்கு இன்றியமையாததே. உங்கள் முயற்சி இவ்வண்ணம் ஒரு தேசிய முயற்சியாக இருந்தாலும் சுயராஜ்ய முயற்சியைவிட மிகவும் கஷ்டமானது. நீங்கள் நடத்தும் சுயராஜ்யப் போரில் இந்தியர்கள் எல்லாம் உங்களுக்கு ஆதரவளிக்கிறார்கள். உங்கள் சீர்திருத்தப் போராட்டத்திற்கு இந்தியர்கள் அனைவரையுமே எதிர்த்து நீங்கள் போராட வேண்டியதாக இருக்கிறது. ஆனால், சமூகச் சீர்திருத்தம் சுயராஜ்யத்தைவிட மிகவும் முக்கியமானது கிடைக்கப் போகும் சுயராஜ்யத்தைக் காப்பாற்ற உங்களுக்குச் சக்தி யில்லையானால், சுயராஜ்யம் பெற்றும் பலனில்லை.

சுயராஜ்யத்தைக் காப்பாற்றும் பிரச்சினையைவிட சுயராஜ்ய இந்தியாவில் இந்துக்களை எப்படிக் காப்பாற்றுவது என்ற பிரச்சினையே பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே, இந்துக்கள் சமூகம் ஒருஜாதியற்ற சமூகமானால் தான் அதற்குத் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள முடியுமென்பது எனது அபிப்பிராயம். அத்தகைய சுய பலம் இந்துக்களுக்கு ஏற்படாவிட்டால் சுயராஜ்யம் இந்துக்களுக்கு அடிமை ராஜ்யமாகவே இருக்கும். இத்துடன் வாழ்த்துக் கூறி எனது பிரசங்கத்தை முடிக்கிறேன்.

பகுத்தறிவு,
சமூகநீதி,
வாழ்வியல்
அறிய
படியுங்கள்,
படியுங்கள்...

www.viduthalai.in



ஓராண்டுக்கான சந்தா நன்கொடை ...

| விடுதலை | உண்மை | பெரியார் பிஞ்சு | The Modern Rationalist |
|---|---|---|---|
| ரூ.2000 | ரூ.900 | ரூ.600 | Rs.600 |

இணையதளம் மூலமாகவும் சந்தாதாரர் ஆகலாம் ...

http://viduthalai.in/subscription என்ற இணையதளத்தில் Payment Gateway மூலம் Credit Card / Debit Card / Net Banking -அய் பயன்படுத்தி எளிதில் சந்தா செலுத்தலாம்.

நேரடியாக வங்கிக் கணக்குகளிலும் சந்தா செலுத்தலாம் ...

| A/C Name | VIDUTHALAI | UNMAI | PERIYAR PINJU | THE MODERN RATIONALIST |
|---|---|---|---|---|
| Bank | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN OVERSEAS BANK, Vepery |
| Current A/C No. | 232002000000002 | 232002000000003 | 232002000000004 | 232002000000229 |
| IFS Code | IOBA0002320 | IOBA0002320 | IOBA0002320 | IOBA0002320 |

முக்கிய குறிப்பு : வங்கியில் சந்தாத்தொகை செலுத்தியவுடன் சென்னை 'விடுதலை' அலுவலகத்திற்கு **97109 44815** என்ற கைப்பேசி எண்ணுக்கு தொடர்புகொண்டு சந்தா விவரத்தினை சொல்லவும்.

மேலாளர், 'விடுதலை' பெரியார் திடல், 84/1(50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-600 007. தொலைப்பேசி : 044-2661 8161, 62, 63
கைப்பேசி: 97109 44813, 97109 44842, 97109 44819 • மின்னஞ்சல் : circulation.viduthalai@gmail.com